21 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com 416-282-4978

Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
For All your Real Estate & Investments Needs!
HOMELIFE HIGHER STANDARDS
•Independently owned and operated
HomeLife/GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto
145 Traders Blvd # 29, Mississauga
416.321.6969 / 905.712.2666

Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
DENTAL OFFICE
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

நதி 21 பாலம் 02 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JANUARY 15, 2011

# ரொறொன்ரோ மாநகரசபை வரவுசெலவுத்திட்டம்




ரொறொன்ரோ மாநகரசபையின் புதிய மேயர் றொப் போர்ட் தனது மாநகரசபை 2011 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்டத்தை ஜனவரி 10, 2011 இல் சமர்ப்பித்தார். இது ஒரு சமநிலைப்படுத்தப்பட்ட (Balanced) வரவுசெலவுத்திட்டமாகும். இவ்வரவு செலவுத்திட்டத்தின் மொத்த செலவினம் $9.4 பில்லியன் டொலர் ஆகும். கடந்த வருட வரவுசெலவுத்திட்டத்தின் மொத்த செலவினம் $9.3 பில்லியன் டொலர் ஆகும்.

இவ்வரவுசெலவுத்திட்ட தயாரிப்பின்போது முதல் $706 மில்லியன் டொலர் துண்டுவிழுந்தது. அதை 2009 ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்டத்தில் மேலதிகவரவாக சேமிக்கப்பட்ட $78 மில்லியன் டொலர் மற்றும் 2010 ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்டத்தால் மேலதிக வரவாக வரும் என எதிர்பார்க்கப்படும் $268 மில்லியன் டொலர் ஆகியவற்றை பாவிப்பதன் மூலமும் வேறு பல சேமிப்புக்களின் மூலமும் சமநிலைப்படுத்தப்பட்டுள்ளது.

சில சேவைகளைக் குறைப்பதன் மூலமும் $57 மில்லியன் டொலர் மீதப்படுத்தப்பட்டுள்ளது. இதில் ஒன்றாக இரவுநேர மற்றும் வாரவிடுமுறை கால பேருந்து சேவையை வருமானம் குறைந்த 48 பாதைகளிலிருந்து மார்ச் 27, 2011 இல் இருந்து நிற்பாட்டப்பட இருக்கின்றது.

ரொறொன்ரோ மாநகரசபையானது ரொறொன்ரோ பேருந்து சபைக்கு (TTC) இவ்வருடம் வரவுசெவுத்திட்டத்தில் $1.14 பில்லியன் டொலரை உதவித்தொகையாக வழங்குகின்றது. இது கடந்த ஆண்டு வழங்கிய உதவித்தொகையை விட $66 மில்லியன் டொலர் அதிகமாகும்.

ஜனவரி 10, 2011 இல் றொப் போர்ட் ஆல் சமர்ப்பிக்கப்பட்ட இந்த வரவுசெலவுத்திட்டம் பல கூட்டத்தொடர்களிற்கும் விவாதங்களிற்கும் பின்னர் பெப்ரவரி 18, 2011 இல் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு அங்கீகரிக்கப்படும்.

றொப் போர்ட் இவ்வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பிக்கும்போது அவர் மாநகரசபையின் ஒவ்வொரு திணைக்களமும் (Department) தங்களது செவீனங்களை கடந்த வருட செலவீனங்களில் இருந்து 5 வீதத்தால் குறைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இவ்வரவு செவுத்திட்டத்தில் எந்த வரியும் உயர்த்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் வாகனப்பதிவு வரியான $60 உம் இவ்வரவு செலவுத்திட்டத்தால் நீக்கப்பட்டுள்ளது.




RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்

Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர் (Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

GSF Golden Store Fixtures Friend for your Business
905-565-6555 1 877-565-6554
Store Planning, Design & Installation
» Acrylics
» Counter Top Displays
» Gift Bags & Ribbons
» Glass Displays
» Grid Panels & Accessories
» Mannequins
» Pegboard & Accessory
» Racks
» Shopping Cart & Baskets
» Showcases
» Sign & Sign Holders
» Slatwall & Accessories
» Steel Shelving
» Wood Displays
And Much More..........

நீங்கள் புதிதாக ஆரம்பிக்கும் வியாபார நிலையத்தை எங்கள் கைவண்ணத்தால் அழகுற வடிவமைத்து பொருத்துவதற்கும், உங்கள் வியாபார நிலையத்துக்குத் தேவையான பொருட்களை பெற்றுக் கொள்வதற்கும் நீங்கள் நாடவேண்டிய தமிழரின் ஒரே ஒரு ஸ்தாபனம்.
355 Admiral Blvd, Unit #5 Mississauga, Ont, L5T2N1
www.goldenstorefixtures.com sales@goldenstorefixtures.com

RBC Royal Bank®
உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
Gteat Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers. • Pre-approvals.

சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்
Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com

Sales & LEASING
MARKVILLE TOYOTA


KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி<
8 ஆண்டுகள் அனுபவம்
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585


Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated

துரித பணமாற்றுச் சேவை
• 53 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 20 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை

மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3 416.267.8221
3351 Markham Rd. #109 416.321.8221

வீடு வாங்கவும் விற்கவும்...

ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

# தென்சூடான் மக்களுக்கு தை பிறந்ததும் வழி பிறக்குமா?

ஆபிரிக்கா கண்டத்திலே பெரிய நாடான 2.5 மில்லியன் சதுரகிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட சூடானின் தென்பகுதி மக்கள் தாங்கள் ஒரு சுதந்திர நாடாக பிரிந்து செல்லவேண்டுமா? இல்லையா? என்பதை ஒரு நாடுதளுவிய கருத்துக்கணிப்பு மூலம் தெரிவிக்க இருக்கிறார்கள். இந்த பிரிந்து செல்ல விரும்புகிற தென்சூடான் பகுதி 0.64 மில்லியன் சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டது. அதாவது இது சூடானின் நாலில் ஒரு பகுதியாகும்.




சூடான் நாட்டின் சனத்தொகை 2008 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின் படி 41.4 மில்லியன் ஆகும். இதில் தென்சூடானிய மக்கள் 9.7 மில்லியன் என கணிக்கப்பட்டுள்ளது. சூடான் நாட்டின் அரச கரும மொழியாக அந்நாட்டின் அரைவாசி மக்கள் பேசும் அரபிக் மொழியே இருக்கிறது. சூடான் நாட்டில் 70 வீதமான மக்கள் முஸ்லீம் (Sunni) மதத்தைச் சார்ந்தவர்கள். தென்சூடான் மக்கள் பெரும்பான்மையாக கிறிஸ்தவமதத்தைச் சார்ந்தவர்கள். தென்சூடானில் பெருமளவு எண்ணெய் வளம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. சூடானின் எல்லையில் சாட் (Chad) கொங்கோ, எகிப்து, ஏரித்தியா, எதியோப்பியா, கென்யா மற்றும் லிபியா போன்ற நாடுகள் இருக்கின்றன.

சூடான் 1953 ஆம் ஆண்டுவரை பிரித்தானியா மற்றும் எகிப்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. ஜனவரி 01, 1956 இல் சூடான் ஒரு சுதந்திர நாடாகியது. சுதந்திரத்தின் பின்னர் தலைநகரான கார்டூம் (Khartoum) இல் உருவான அரசாங்கம் அரபுநாடுகள் சார்பான அரசாங்கமும் தென்பகுதி மக்களுக்கு உரிமைகளை அளிக்கத் தவறிய அரசாகவும் இருந்தது. இதனால் தென்பகுதியை சேர்ந்த இராணுவ அதிகாரிகளால் அடிக்கடி இராணுவப் புரட்சி நாட்டில் ஏற்பட்டது. 1958 இல் முதலாவது இராணுவப் புரட்சி மூலம் பிரதமர் பதவி இறக்கப்பட்டார்.

1955 இல் ஆரம்பமான உள்நாட்டு கலவரம் 17 வருடங்களுக்கு மேல் தொடர்ந்தது. 1972 இல் அரசிற்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் அடிஸ் அபாபாவில் செய்த உடன்படிக்கை உள்நாட்டு கலவரத்தை 10 வருடங்கள் நிற்பாட்டி வைத்திருந்தது. 1983 இல் அப்போதைய அரச தலைவரான நிமிரி (Nimeiri) இஸ்லாமிய பொதுவழமை செரியா (Shariah) சட்டத்தை நாடு முழுவதும் அமல்படுத்தியதால் மீண்டும் கலவரம் தொடங்கியது. இம்முறை SPLA என அழைக்கப்படும் தென்சூடானின் மக்கள் விடுதலை இராணுவம் (Sudan People Liberation Army) அதன் தலைவர் யோன் கராங் (Jhon Garang) தலைமையில் போரைத் தொடங்கியது. பல வருடங்கள் தொடர்ந்த சண்டையில் பல இயக்கங்கள் தோன்றின. கிட்டத்தட்ட இரண்டு மில்லியன் மக்கள் இச்சண்டையில் கொல்லப்பட்டனர். இன்னும் ஒரு மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்தனர். ஜனவரி 2005 இல் அரசாங்கமும், SPLA உட்பட்ட மற்ற இயக்கங்களும் சரித்திர பிரசித்தி வாய்ந்த உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டனர். இவ் உடன்படிக்கை மூலம் வடக்கிற்கும் தெற்கிற்கும் நாட்டின் அரசில் பங்கு கொடுக்கப்பட்டது. தென்பகுதிக்கு மட்டுப்படுத்தப்பட்ட சுதந்திரம் சூடான் ஒரே நாடு என்ற கோட்பாட்டின் கீழ் வழங்கப்பட்டது. மக்கள் விடுதலை இராணுவத்தின் தலைவர் யோ் கராங் இற்கு உதவி அரச தலைவர் பதவி வழங்கப்பட்டது. (அவர் ஒரு மாதத்தினுள் விமான விபத்தில் உயிர் இழந்தார்.) இவ் உடன்படிக்கையின் மிக முக்கிய அம்சம் என்னவென்றால் ஆறு வருடங்களின் பின்னர் நாடு பிரிவது பற்றி ஒரு கருத்துக்கணிப்பு எடுத்து அதன் முடிவை தென் சூடானும் வட சூடானும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இவ் உடன்படிக்கையின்படியே ஜனவரி 09, 2011 இல் இருந்து ஜனவரி 15, 2011 வரை கருத்துக்கணிப்பு நடைபெறுகின்றது.

இக்கருத்துக்கணிப்பில் தென் சூடான் மக்கள் சுதந்திர நாடாக பிரிந்து செல்லவே வாக்களிப்பார்கள் என்பது நிச்சயமாக எதிர்வு கூறப்பட்டாலும் தேர்தல் முடிவு வாக்களிப்பவர்களின் எண்ணிக்கையிலும் தங்கியுள்ளது.

மிகவும் பெரும்பான்மையான சூடானிய மக்கள் படிப்பறிவு அற்றவர்கள். இதனால் வாக்களிப்பு அட்டையில் இரண்டு படங்கள் இடம்பெறுகின்றன. ஒரு கை தனிநாடாக பிரிவதையும் இரண்டு சேர்ந்த கைகள் ஒரே நாடாக இருப்பதையும் குறிக்கின்றன. வாக்காளர்கள் விரலால் மையை தொட்டு தாங்கள் விரும்பிய படத்திற்கு கீழ் பூசவேண்டும்.

பதிவு செய்யப்பட்ட 4 மில்லியன் மக்களில் குறைந்தது 60 வீதமான மக்கள் வாக்களித்தாலேயே இத்தேர்தல் முடிவு செல்லுபடியாகும். பெரும்பாலான தென்சூடானிய வாக்காளர்கள் கால்நடைகள் வைத்திருப்பவர்கள். இவர்கள் கிட்டவுள்ள வாக்களிப்பு நிலையத்திற்கு ஒருநாள் முழுவதும் நடந்து செல்லவேண்டும். இதைக்கருத்திற்கொண்டே வாக்கெடுப்பு ஒரு கிழமை நடைபெறுகின்றது. 60 வீதமான




வாக்காளர்கள் வாக்களிப்பார்களா? தென்சூடான் தனி நாடாகுமா? முடிவு தை பிறந்ததும் தெரிந்துவிடும்.

# மட்டக்களப்பில் கடும் மழை!

தற்போது கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கில் வெகுவாகப் பாதிக்கப்பட்ட மாவட்டத்திலே மட்டக்களப்பு முதலிடம் விகிக்கிறது. மாவட்டத்தின் அனைத்து பிரதேசங்களும் வெள்ளத்தில் மூழ்கியிருக்கிறது. மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிகமான மக்கள் பாதிக்கப்பட்ட நிலையில் முகாம்களிலேயே தங்கியுள்ளனர். இதனால் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்கின்றார்கள். இவர்கள் சுத்தமான குடிநீர் மற்றும் சுகாதாரவசதிகள் இன்றி தவிப்பதோடு உணவுகளைப் பெறுவதிலும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்துவந்த மழை ஓய்ந்த நிலையில் நிலவும் கடும் குளிர் காரணமாக முதியவர்களும் குழந்தைகளும் மிகவும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர். மொத்தமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 17 பேர் உயிரிழந்துள்ளனர். மட்டக்களப்பில் அதிக வெள்ளம் காரணமாக முகத்துவாரமொன்று கிழக்கு மாகாண முதலமைச்சரால் வெட்டப்பட்டுள்ளது. இதேபோல் 50 வருடங்களின் முன்னரும் கடும் வெள்ளம் காரணமாக இதே இடத்தில் முகத்துவாரம் வெட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பில் காணப்படும் வெள்ள நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனூடாக வெள்ள நீர் கடலுக்குள் பாய்ந்து செல்வதாக அங்கிருக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களை கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*1. Vlambaram Publications Inc., 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2*
*2. Tel.: 416.282.8059* *3. Fax: 416.282.4978*
*4. email: vlambaram@sympatico.ca* *5. web: vlambaram.com*

### வாசகர் எண்ணம்

'நினைவாற்றல்' (Memmory-1 )

ஜனவரி 01 2011 அன்று வெளிவந்த விளம்பரம் இதழில் அகணி அவர்களின் 'நினைவாற்றல்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட கட்டுரையை வாசித்து மனநிறைவு பெற்ற பல வாசகர்களில் நானும் ஒருவன்.

வயது முதிர்ந்து ஞாபகசக்தியை இழந்து கொண்டிருக்கும் என் போன்றவர்களுக்கு மிகவும் பயன்தரும் கட்டுரையாக அமைந்துள்ளது. 'ஒரு நிரல் அல்லது வரிசையில் உள்ள பல சொற்களை நினைவாற்றல் செய்ய வேண்டுமானால் தொடுப்பு முறையினைப் பாவிப்பதும் ஒவ்வொரு சொற்களுக்கும் பொருத்தமான உருவங்களைக் கற்பனை செய்து அவற்றை தொடுப்பை ஏற்படுத்துவதன் மூலம் எல்லாச் சொற்களையும் நினைவில் நிறுத்தச் செய்யும் சுலபமான வழிமுறையை குறிப்பிட்டிருந்தார். இதன்படி நான் செய்து பார்த்து பலன் அடையக் கூடியதாக இருந்தது.

இப்படியான கட்டுரைகளை உங்கள் பத்திரிகையில் பிரசுரித்து என்னைப் போன்ற பல முதியோரை பயன்படச் செய்யும் உங்களையும் கட்டுரை ஆசிரியரையும் பாராட்டி நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

த. பத்மநாதன்
வாசகர்

விளம்பரம்
VLAMBARAM™

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**பதிப்பாளர்:** ராஜா மகேந்திரன்
**பத்திரிகை ஆசிரியர்:** சத்தியா மகேந்திரன்
**ஊடகப்பொறுப்பாளர்:** விஜே பாலன்
**தட்டச்சு:** கலா
**அலுவலக முகாமையாளர்:** நிலானி
**பதிப்பு:** *Can Media Publishing Inc.*

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059* *FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca* *Web: www.vlambaram.com*

# வாழத்துடிக்கும் வன்னி

## - ஒரு நேரடி ரிப்போர்ட் - பாகம் 14

- செல்வரட்ணம் சிறிதரன் -

கல்மடுக்குளத்திற்கான உலக வங்கியின் நிதி கிடைத்ததா, நிலைமை என்ன? சுதாகரன் விளக்குகின்றார்.

“உலக வங்கி முதலில் 135 மில்லியன் ரூபா நிதியை வழங்குவதற்கு முன்வந்தது. எனினும், தனியொரு திட்டத்திற்கு அதுவும் உடைந்த குளக்கட்டு ஒன்றைத் திருத்துவதற்கு பெருமளவு நிதியை வழங்குவதற்கு முன்னதாக இந்த வேலைத்திட்டத்தின் நிலையான உறுதிப்பாடு, சுற்றுச் சூழல் பாதிப்புகள் உட்பட வேறு ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படுமா என்பதை ஆராய்ந்து உரிய அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டிருந்தது. அதற்குரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பித்த வேளை, இந்த குளத்தின் மீளமைப்புக்கான நிதி 169 மில்லியனாகத் தேவைப்பட்டது. உலக வங்கி கோரியிருந்த உரிய ஆவணங்கள் இருந்த காரணத்தினால் நாங்கள் கோரிய நிதியை வழங்குவதற்கு அது உடன்பட்டது. இதனையடுத்து, கல்மடுக்குளத்தின் மீளமைப்பு வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்கள் கடந்தவாரம் கோரப்பட்டு அதற்கான ஊடக விளம்பரமும் வெளியிடப்பட்டுள்ளது” என தெரிவித்தார் பொறியியலாளர் நவரட்னம் சுதாகரன்.

நிர்மாண வேலைகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன. ஆறு மாதங்களில் வேலை செய்து முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் அடுத்த மாரிகாலம் ஆரம்பிப்பதற்கு முன்னதாக வேலைகளை முடிக்க வேண்டும் என்பதில் அதிகாரிகள் மும்முரமாக இருப்பதாகவும் கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன பிரதி பணிப்பாளர் பொறியியலாளர் நவரட்னம் சுதாகரன் தெரிவித்தார்.

மாரி காலத்தில் கல்மடுக்குளத்தில் நீர் நிறைந்து வழிந்தோடும் நீரை ஏந்தித் தேக்கி வைக்கின்ற பெரியகுளம், ஊரியான்குளம் ஆகிய சிறிய குளங்களை, பிஎஸ்டிஜி எனப்படும் மாகாண விசேட அபிவிருத்திக்கான நிதியின் கீழ் உடனடியாகப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நீர்ப்பாசனக் குளங்கள் தொடர்பான இந்த அபிவிருத்தி வேலைகள் மீள்குடியேற்றச் செயற்பாடுகளின் ஓர் அம்சமாகவே மேற்கொள்ளப்படுகின்றது. எனினும் மாரி காலம் ஆரம்பமாவதற்கு இன்னும் சில மாதங்களே இருக்கின்ற நிலையில் அரசு இந்த வேலைகளை மிகத் துரிதமாக மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த மக்கள் பிரதான வாழ்வாதாரமாகிய விவசாயத்தை மேற்கொண்டு தமது புதிய வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக ஆரம்பிக்க முடியும்.

தர்மபுரத்தை அடுத்ததாகக் கண்டாவளையை நோக்கிச் சென்றது நாடாளுமன்றக் குழு. கண்டாவளை மகாவித்தியாலயத்தில் ஊர் முக்கியஸ்தர்கள் கூடியிருந்தார்கள். வீடமைப்பு, மீள்குடியேற்றத்தின் அடுத்த கட்டமாகிய தொழில்வாய்ப்புக்கள், தடுப்பில் உள்ளவர்கள், காணாமல் போயுள்ளவர்கள் போன்ற விடயங்களில் தமக்குரிய பிரச்சினைகளை அவர்கள் எடுத்துரைத்து, அவற்றைத் தீர்ப்பதற்கு உரிய, நடவடிக்கைகள் உடன் எடுக்கப்பட வேண்டும் என அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

> “கண்டாவளை ஒரு பூர்வீகக் கிராமம். கனகராயன் ஆற்றோரத்தில் அமைந்துள்ளது. மணலோடு கூடிய களித்தன்மையைக் கொண்ட மண். நெல்வேளாண்மைக்கும் தோட்டச் செய்கைக்கும் சிறப்பானது என்று சொல்கிறார்கள். இந்த மண்வளம் யாழ். குடாநாட்டில் இருந்த கடும் உழைப்பாளி களான விவசாய குடும்பங்களைக் கவர்ந்து இழுத்ததாம், அங்குள்ள பெரியவர்கள் கூறுகின்றார்கள்.”

வீட்டுத் திட்டத்தைப் பொருத்தமட்டில் மீளக்குடியமர்ந்துள்ளவர்களில் 70 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதன் மூலம் 70 குடும்பங்களுக்கு முதற் கட்டமாக இந்த வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும் என கூறப்பட்டுள்ளது. இந்தத் தற்காலிக வீடு கண்டாவளை கிராமத்தில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்கள் அனைத்துக்கும் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

கல்மடுக்குளம் உடைக்கப்பட்டுள்ளதையடுத்து, கண்டாவளை பகுதியில் ஆடுமாடுகளுக்குக் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை. மக்கள் குளிப்பதற்கும் தண்ணீர் இல்லை. பெரும் தட்டுப்பாடு. உடனடியாக இரணைமடுக்குளத்தில் இருந்து வாய்க்கால் வழியாக பெரியகுளத்திற்குத் தண்ணீரைத் திறந்து விட வேண்டும் என்பதும் அவர்களது மற்றுமொரு கோரிக்கை. குடிநீருக்கான வசதி செய்யாவிட்டால் இந்தப் பகுதியில் கால்நடைகள் உயிரிழக்க நேரிடும். அவைகள் அழிந்துபோக நேரிடும் என அவர்கள் அச்சம் தெரிவித்தார்கள்.

அங்கு வந்திருந்தவர்களில் கந்தசாமி பொன்னம்மாவும் ஒருவர். கண்டாவளை வெளிக்கண்டலைச் சேர்ந்தவர். அவருக்கு வயது 58. ஐந்து பிள்ளைகள். அவர்களில் இப்போது ஓர் ஆண் மகன் மட்டுமே ஊரில் தாயோடு இருக்கின்றார்.

“ஒரு மகன் மாவீரராகிப் போனார். மற்றுமொரு மகன் சங்கக் கடை மனேச்சர். 2006 ஆம் ஆண்டு நாலாம் மாதம் 25 ஆம் திகதி வவுனியாவுக்கு கொன்வேயில லொறி கொண்டுபோன இடத்தில யாரோ அங்க வச்சு அவர பிடிச்சிட்டினம். இன்னும் ஆள் இல்லை. அவருக்கு என்ன நடந்தது எங்க இருக்கிறார் எண்டது ஒண்டுமே தெரியேல்ல. இப்ப 2009தில மகளையும், மருமகனையும் ரெண்டு பிள்ளைகளையும் சரண்டர்ல ஏத்திக்கொண்டு போச்சினம். பிரான்சிஸ் பாதர்தான் கூடப்போனார். பஸ்சில கண்டனாங்கள். பஸ்சில ஏத்திப் போகுந்தனையும் பாத்துக்கொண்டு நிண்டனாங்கள். அங்க வவுனியா கொண்டு போறன் எண்டு கொண்டு போச்சினம். சரணடைஞ்சதுதானே போராளிகள். அதோட கொண்டு போனதுதான். இதுவரைக்கும் எங்கேயெண்டு தெரியா. மகளுக்கு 30 வயது. மருமகனுக்கு 32. ரெண்டு பிள்ளைகள். ஒரு ஆளுக்கு அஞ்சு வயசு பெயர் சாருஜன். ஒரு ஆளுக்கு நாலு வயசு, அபிதா. எல்லா இடத்திலையும் தேடிப்பாத்திட்டம். எல்லாரிட்டயும் கேட்டுப்பாத்திட்டம். எல்லாரிட்டயும் சொல்லியிருக்கிறம். ஒருதராவது அவையளை கண்டேன் எண்டு சொல்லுவாரில்லை” என விம்மலோடு சொன்னார் பொன்னம்மா.

நோயாளியான கணவரோடு உதவிக்கு எவருமின்றி காணாமல் போயுள்ள பிள்ளைகளின் பிரிவைத் தாங்காமல் பெரும் துயரத்தில் அவர் அங்கு நின்றிருந்தார். நாடாளுமன்றக் குழுவினர் அவரது பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காணப் போகிறார்களோ தெரியவில்லை.

பொன்னம்மாவின் பிள்ளைகள் காணாமல் போயிருப்பது போன்று கண்டாவளை பகுதியில் வேறு சிலரும் காணாமல் போயிருப்பதாகவும், அவர்களைத் தேடிக் கண்டு பிடிப்பதற்கும், தடுப்பில் உள்ள பிள்ளைகள், கணவன்மாரை விடுதலை செய்வதற்கும் உதவி செய்ய வேண்டும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கண்டாவளை பாடசாலையில் கூடியிருந்தவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

கண்டாவளை ஒரு பூர்வீகக் கிராமம். கனகராயன் ஆற்றோரத்தில் அமைந்துள்ளது. மணலோடு கூடிய களித்தன்மையைக் கொண்ட மண். நெல்வேளாண்மைக்கும் தோட்டச் செய்கைக்கும் சிறப்பானது என்று சொல்கிறார்கள். இந்த மண்வளம் யாழ். குடாநாட்டில் இருந்த கடும் உழைப்பாளிகளான விவசாய குடும்பங்களைக் கவர்ந்து இழுத்ததாம், அங்குள்ள பெரியவர்கள் கூறுகின்றார்கள்.

யாழ் குடாநாட்டின் தென்மராட்சி, வடமராட்சி போன்ற பிரதேசங்களில் இருந்து வந்தவர்கள் கண்டாவளை, புளியம்பொக்கணை போன்ற இடங்களில் குடியேறி இந்தப் பகுதியை வளப்படுத்தி செல்வச் செழிப்போடு வாழ்ந்து வந்தார்கள். முன்னர், மழையை நம்பிய மானாவாரி நெற்செய்கைதான். பின்னர் 1800 ஆம் ஆண்டளவில் கல்மடுக்குளத்தில் இருந்து சிறிய அளவில் இங்குள்ள வயல்களுக்கு நீர் பாய்ந்தது. படிப்படியாக இந்தப் பிரதேசம் கல்மடுக்குளத்தின் முழுமையான நீர் விநியோக வலையமைப்பினுள் கொண்டு வரப்பட்டது. ஊர் பெரியவர்கள் சொன்னார்கள்.

இடப்பெயர்வுக்கு முன்னர், 600 குடும்பங்கள் இருந்தன. இடப்பெயர்வுக்குப் பின்னர் மீள்குடியேற்றம் நடைபெற்று வருகின்றபோதிலும், இன்னும் அது முழுமை பெறவில்லை. ஐம்பது வீதமானவர்கள் மாத்திரமே ஊருக்குத் திரும்பியுள்ளதாகச் சொல்லப்படுகின்றது. மற்றவர்களும் வருவார்கள். ஆனால் எப்போது வருவார்கள் என்பது தெரியாது.

கண்டாவளையின் ஒருபக்கம் கடல் சார்ந்த பிரதேசமாகும். சுண்டிக்குளத்தின் ஒரு பகுதி, பூனைத்தொடுவாய், கொம்படி, சிறுகடல் போன்ற இடங்களில் மீனவ குடும்பங்கள் வசித்து வந்தன. இந்த கரையோரப் பகுதிகள் களப்புப் பிரதேசமாகும். குறிப்பிட்ட மாதங்களில் கடல் நீர் நிறைந்து நிற்கும். வரட்சி காலங்களில் வரண்டு கிடக்கும். இறால் மீன் இங்கு அதிகம். அதனால் இறால் மீன்பிடியில் மீனவர்கள் கூடுதலாக ஈடுபடுவார்கள். விவசாயமும், மீன்பிடியும் கண்டாவளையின் பிரதான தொழில்கள்.

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# யார் விருந்தாளி?

## சத்குரு, தியான அன்பர்களிடம், தனது வீட்டில் நடந்த ஒரு சம்பவத்தை அழகாக விவரித்தபோது.....



**சத்குரு வாசுதேவ்**

“ஒவ்வொரு உயிருக்கும் தன் உயிரை நடத்திக் கொள்வதற்கு இயற்கை அளப்பரிய அறிவைக் கொடுத்திருக்கிறது. ஒரு இளம் பறவை முதல் முறையாக முட்டை இடப்போகிறது. ஆனால் முட்டை இடுவதற்கு கூடு எப்படிக் கட்டுவது? இந்த சந்தேகம் அந்தப் பறவைக்கு வருவதில்லை. அதற்காக அது எந்த பொறியியல் கல்லூரிக்கும் சென்று கற்கவில்லை. கர்ப்பம் தரித்த கணத்திலேயே அந்த அறிவு அதற்குள் புகுத்தப்பட்டு விட்டது. எங்கு, எப்படி, எத்தனை நாளுக்குள் கூடு கட்ட வேண்டும், அனைத்தும் இப்போது அதற்குத் தெரியும். அப்படி ஒரு குட்டிப்பறவை தன் அழகான கூட்டைக் கட்டும் வித்தையை என் வீட்டிலேயே, அருகேயே இருந்து கவனித்திருக்கிறேன். ஏனெனில் என் வீட்டில் பறவைகள், அணில்கள், ஏன், பல்லி, பாம்பு இவைகள் கூட எப்போதும் இருக்கும். என் வீட்டைப் பொறுத்தவரையில் அவைதான் வசிப்பவர்கள். நான் விருந்தாளிதான். ஏனெனில் நான் எப்போதும் நாள்கணக்கில்தான் தொடர்ந்து தங்குவேன். அந்த நேரத்தில் 4 மாதங்களாக நான் தொடர்ந்து என் வீட்டில் தங்கினேன். எனவே, அவற்றில் சில, “யார் இந்த விருந்தாளி” என்று ஆச்சரியத்தோடு பார்த்தன. பிறகு நாளாக, நாளாக, இவர் ஏன் நமது இடத்தில் இவ்வளவு நாள் தங்கியிருக்கிறார் என்று வேண்டாத விருந்தாளி போல் பார்க்கத் தொடங்கின. மேலும் ஒவ்வொரு வருடமும் குஞ்சு பொரிக்கும் பருவத்தில் எங்கிருந்தோ பறவைகள் வரும். அப்போது அது குஞ்சு பொரிக்கும் பருவம். அவைகள் குஞ்சு பொரிக்கும் பருவத்தில் நான் மாதக்கணக்கில் அங்கிருப்பது அவைகளுக்கு இடைஞ்சலாக இருக்கிறதா? ஆனால் நான் அவைகளை எப்போதும் தொந்தரவு செய்வதே இல்லை, இருந்தாலும் என்னால் அவர்களின் தனிமை கெட்டுப் போனது நன்றாகப் புரிந்தது.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.ort / www.ishayoga.org

அந்தப் பறவைகள் எந்த மருத்துவரிடமும் சென்று நான் எப்போது முட்டையிடப் போகிறேன் என்று கேட்கவில்லை... அவைகுத் தெரிந்திருக்கிறது, எந்த நாளுக்குள் கூடு கட்ட வேண்டுமென்று. ஒரு பறவை கூட ஒரு நாள் கூட தள்ளி கூடு கட்டியதில்லை. எந்த உயிரினத்திற்கும், கர்ப்பம் தரித்திருக்கும்போது, அறிவு ஆழமாக வேலை செய்கிறது. வாழ்க்கையே அபாரமான அறிவுதான். அதுவும் கர்ப்பம் தரித்திருக்கும்போது அறிவு இரண்டு மடங்காகி விடுகிறது. ஆனால் மனிதர்களுக்கு, பெரும்பாலானோருக்கு கர்ப்பம் தரிப்பது என்பது சுயநினைவில்லாமலே, ஆழந்த ஒரு இச்சை இல்லாமலே நடந்து விடுகிறது. ஆனால் கர்ப்பம் தரிப்பது, சுய நினைவோடு, ஒரு ஆழ்ந்த விருப்பத்தோடு நடக்குமேயானால், குழந்தை பிறக்கும் தருணத்தில் அவர்கள் அறிவு மேலும் 100 சதவீதம் அதிகமாகியிருக்கும். ஏனெனில் கர்ப்ப காலத்தில் அவர்களுக்குள் நடக்கும் செயல்முறைகள் அந்த அளவிற்கு மிகவும் அற்புதமானது. இந்த பூமியில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான மக்களே அத்தகைய அறிவைப் பெறுகின்றனர். மற்றபடி பெரும்பாலானோர் அந்த செயல்முறைகளின் அற்புதங்களை அனுபவிக்காமலேயே குழந்தையைப் பெற்று விடுகின்றனர். அடுத்த சந்ததியாவது நன்றாக வாழட்டும் என்று அப்போது கருதுகின்றனர். அடுத்த சந்ததி நன்றாக வாழட்டும் என்று ஏன் கருதுகிறீர்கள்? நீங்கள் இப்போது நன்றாக வாழவில்லை என்பதனால்தான், இல்லையா?

சரி, அந்த பறவைகளைப் பற்றிப் பார்ப்போம். ஒவ்வொரு வருடமும் இனப் பெருக்கத் தருணத்தில் அந்தக் குட்டிப்பறவைகள் எங்கிருந்தோ வரும். அவை என் வீட்டிற்குள், என் வீட்டிற்குள் உள்ள வீட்டுத் தோட்டத்தில் வந்து கூடு கட்டி, முட்டையிட்டு, குஞ்சு பொரித்து, குஞ்சுகளுடன் திரும்பிச் செல்லும். இப்படி கடந்த சில வருடங்களாகவே நடந்து வருகிறது. அவை எப்போதும் என் வீட்டிற்குள் உள்ள ஒரு குறிப்பிட்ட மரக்கிளையைத்தான் இதற்காகத் தேர்ந்தெடுத்து கூடு கட்டி கடைசியாக குஞ்சுகளுடன் திரும்பிச் செல்லும். அவை சென்ற பிறகு மழைக்காலங்களில் அந்த கூடு சேதமடையாமல் இருக்க நான் சிறிது முயற்சி எடுப்பேன். ஏனெனில் அடுத்த ஆண்டு அவைகள் திரும்பிவரும்போது மீண்டும் புதிதாகக் கூடு கட்டத் தேவையிருக்காது. அதே கூட்டில் சிறிது ரிப்பேர் வேலைகள் மட்டும் செய்துவிட்டு அதிலேயே முட்டையிடலாம். இப்படித்தான் நடந்து வந்தது. ஆனால் இந்த முறை நான் வீட்டிற்கு வந்தபோது, அந்தக் கூடு தேவையில்லை என நினைத்து அங்கு வந்து வேலை செய்யும் தொழிலாளிகள் அந்தக் கூட்டை அப்புறப்படுத்தியிருந்தனர்.

சில மாதங்கள் கழித்து இந்த முறை நான் வீட்டிற்குத் திரும்பியபோது, அதே பறவையைப் பார்த்தேன். நான் அதை என் வீட்டிற்குள் பார்த்தபோது, அது அங்கு வந்து 2 நாட்கள் ஆகியிருக்கலாம். அதனுடைய கூடு காணாததால், அது தற்போது மிகவும் கஷ்டப்பட்டு புதிதாக ஒரு கூடு கட்ட முயற்சி செய்து கொண்டிருந்தது. என் வீட்டில் ஒரு ஊஞ்சல் இருக்கிறது. அந்த ஊஞ்சல் தொங்கும் கம்பியில் அந்தக் கூட்டைக் கட்டிக் கொண்டிருந்தது. ஆனால் அது அங்கு கூடு கட்டுவதை நான் விரும்பவில்லை. ஏனெனில் அது அங்கு கூடு கட்டி விட்டால் நான் ஊஞ்சலில் உட்கார முடியாது. மேலும் அந்த ஊஞ்சலிலேயே எச்சமிட ஆரம்பிக்கும். அந்த ஊஞ்சல் வேறு சமையலறைக் கதவுக்கு வெகு அருகாமையில் இருந்தது. நான் சமையல் அறைக்குள் போகும்போதும் வரும்போதும், அவைகளுக்கும் அது தொந்தரவாக இருக்கும். எனவே நான் அதற்கு சிறிது இடையூறு செய்ய நினைத்தேன். அப்போதாவது அது வேறெங்காவது இடைஞ்சல் இல்லாத இடத்தில் கட்டிக் கொள்ளட்டுமே என நினைத்தேன்.

இந்தப் பறவை 30 மணி நேரத்தில் தனது கூட்டைக் கட்டிவிடும். அது முதல் குச்சியை கொண்டு வரும்போதே அதன் கவனத்தைத் திருப்பிவிட நினைத்தேன். ஆனால் அப்போது சமயமா நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்ததால் அந்தக் கவனத்தில் சிறிது இருந்துவிட்டேன். எனவே அன்று ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டேன். அடுத்த நாள் பார்த்தால் அந்தப் பறவை தனது கூட்டை முழுதாகக் கட்டிவிட்டிருந்தது. 24 மணி நேரத்திற்குள் தனது கூட்டை கட்டியிருந்தது. அது ஏதோ அவசரத்தில் இருக்கிறது எனப் புரிந்து கொண்டேன். எனவே அதை தொந்தரவு செய்ய நான் விரும்பவில்லை. சரி இருந்து கொள் என்று விட்டுவிட்டேன். ஊஞ்சலில் உட்காரும் இடத்தில் அது தனது எச்சத்தை போடக்கூடாது என்பதற்காக மட்டும் அந்த இடத்தில் ஒரு துணியைப் போட்டு மூடி விட்டேன். பிறகு இரண்டாவது நாளில் அது 3 முட்டையைப் போட்டது. அதன்பிறகு அந்தப் பெண் பறவையைக் காணவில்லை. ஆண் பறவைதான் குஞ்சு பொரிப்பதற்காக முட்டை மீது உட்கார ஆரம்பித்தது. உண்மையில் அது கடினமான வேலையாக அப்போது அதற்கு இருந்திருக்கும். ஏனெனில் பலரும் வந்து போகும் இடத்தை அது தேர்ந்தெடுத்து விட்டது. நாங்கள் நடக்கும் இடத்திலிருந்து 1 அடி தள்ளிதான் அந்தக் கூடு இருந்தது. எப்போதும் அந்த முட்டைகளின் மேல் உட்கார்ந்து கண்களை அகலத் திறந்து எங்களைப் பார்த்துக் கொண்டிருக்கும்.

யாருமே அந்தப் பறவையை அப்படியே கையில் தூக்கியெடுக்கக் கூடிய தூரத்தில்தான் அது இருந்தது. அந்த ஒரு அபாயத்தில் அந்தப் பறவை இருந்தது. ஏனோ இப்படியரு துணிச்சலான முடிவை எடுத்திருந்தது. ஒருவேளை தனது வழக்கமான கூடு இல்லையென்றவுடன், அடுத்த கூடு கட்டுவதற்குத் தகுந்த இடம் தேட நேரம் இல்லாமல் இருந்திருக்கலாம். அந்தப் பறவை 17லிருந்து 18 நாட்கள் இரவு பகலாக அடைகாத்தது. காலை 8 மணிக்குக் கிளம்பி 8.30க்கு வந்துவிடும். ஒரு வேளை காலைக்கடனுக்காகவும் உணவுக்காகவும் போயிருக்கும். மீண்டும் மாலை சுமார் 6 மணிக்கு கிளம்பி 20 நிமிடம் கழித்து வந்து உட்கார்ந்து கொள்ளும். அந்தக் கூட்டைக் கடந்து செல்லும் போதெல்லாம் பார்ப்பேன், அதன் கண்கள் திறந்தே இருக்கும். இரவில் விளக்கு போடும்போது பார்த்தால் கூட அதன் கண்கள் அகலத் திறந்து வைத்துக் கொண்டு நம்மையே பார்க்கும். அதன் வாழ்க்கை எப்போதும் அபாயத்திலேயே இருந்தது. ஆனால் அது அங்கிருந்து நகர வில்லை. அந்த முட்டைகள் மேல் முழுமையாக உட்கார்ந்திருந்தது. ஏனெனில் குறிப்பிட்ட நேர இடைவெளி விட்டால் கூட பிறகு முட்டையிலிருந்து குஞ்சு வெளிவராது.

இறுதியாக சுமார் 18வது நாளில் 3 முட்டைகளிலிருந்தும் குஞ்சுகள் வெளி வந்தன. அப்புறம் நடந்தவை அற்புதமான செயல்கள். குஞ்சு வெளிவந்ததுமே திடீரென பெண் பறவையும் அங்கு வந்து சேர்ந்தது. பிறகு இரண்டும் குஞ்சுகளுக்கு எல்லாவித பூச்சிகளையும் உணவாகக் கொண்டு வந்து கொடுத்தன. அந்தக் குருவிகளே மிகச் சிறியவை. ஆனால் அவை பெரிய பெரிய பூச்சிகளைப் பிடித்துக் கொண்டு வந்தன. 3 குஞ்சுகளும் கிடைத்ததை எல்லாம் லபக், லபக் என்று விழுங்கிக் கொண்டிருந்தன. பகல் நேரம் முழுவதும் அந்தப் பறவைகள் உணவைக் கொடுத்துக் கொண்டே இருந்தன. 3 குஞ்சுகளும் அவற்றைப் பெற்று விழுங்கிக் கொண்டே இருந்தன. அது அந்தக் குஞ்சுகள் கற்றுக் கொள்ளும் ஒரு செயல்முறை. அதை கேமரா மூலமும் படம் பிடித்தோம். ஏனெனில் ஈஷா ஹோம் ஸ்கூலின் சின்னமும் அதுதான். அந்தக் குஞ்சுகள் நம்ப முடியாத அளவில் வேகமாக வளர்ந்தன. முதலில் உடலில் வெறும் 2 புள்ளிகளாக இருந்தவை எட்டே மணி நேரத்தில் சிறகாக மாறியிருந்தது. எட்டு மணி நேரத்திலேயே இந்த அற்புதம் நடந்திருந்தது. உயிர்த்தன்மையின் செயல் முறை பல வழிகளிலும் விவரிக்கமுடியாத அற்புதமாகத்தான் இருக்கிறது.

அந்தப் பறவைகள் குடும்பமாக எந்த நேரத்தில் வேண்டுமானாலும் பறந்து போகலாம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். அந்த 3 குஞ்சுகளில் ஒன்று மட்டும் மிகவும் துறுதுறுவென இருந்தது. உடனே பறந்து போக வேண்டுமென துடித்துக் கொண்டிருந்தது. இரவில் 12 மணி சுமாருக்கு அதை பார்த்தேன். மீண்டும் காலை வந்து பார்க்கும் போது கூட்டிலிருந்து கீழே குதித்து இறந்திருந்தது. அடுத்த 24 மணி நேரத்திற்குள் மீதிப் பறவைகள் அனைத்தும் ஒன்றாகப் பறந்து சென்றன. இந்தக் குஞ்சும் இன்னமும் சில மணி நேரங்கள் காத்திருந்தால் அவையுடன் சேர்ந்து சென்றிருக்கலாம்.

இயற்கையாக வாழ்க்கை செயல்முறைகள் இப்படித்தான் இருக்கின்றன. ஈஷாவிலும் இப்படித்தான். நான் ஏன் இதை சொல்கிறேன் என்றால், ஒன்றில் நீங்கள் இறங்கிவிட்டால், பொறுமையாக உட்கார்ந்திருக்க வேண்டும். குஞ்சு பொறிக்கும்வரை முழுமையாக உட்கார்ந்திருக்க வேண்டும். இல்லையென்றால் அது நடக்காது. உண்மையில், யோகாவில் சில குருமார்கள் கூர்ம குருக்கள் என்றே அழைக்கப்படுகின்றனர். கூர்ம என்றால் கடல் ஆமை. ஆமை எப்போதும் தனது முட்டைகளை இட்டு மணலை அதன் மேலே தள்ளி முடிவிடும். பிறகு சிறிது தூரத்தில் உட்கார்ந்து கவனிக்கும். இப்படிச் செய்வது ஒரு விதமான குருமார்கள். இன்னொரு வகை குருமார்கள் முட்டை மேலேயே உட்கார்ந்து கொள்வார்கள். நாம் முட்டை மேலேயே உட்காரும் வகைதான். தூரத்தில் உட்கார்ந்து நம்மால் கவனிக்க முடியாது. ஏனெனில் நமக்கு அவ்வளவு நேரமில்லை”.

# திருவள்ளுவரின் பிறந்ததினம் எப்போது?



உலகப்பொதுமறையாம் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர் பிறந்தது எப்போது என பல சரித்திரவியலாளர்களும் இலக்கியத்துறையைச் சேர்ந்தவர்களும் ஆராய்ச்சிகள் மேற்கொண்டுள்ளார்கள். ஆனால் இதுவரை எவராலும் திருவள்ளுவர் எந்த ஆண்டு பிறந்தவர் என சரித்திரபூர்வமான எந்த ஆதாரத்துடனும் நிரூபிக்க முடியவில்லை.

முனைவர் பா. இறையரசன் சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ் முதுகலைப்பட்டம் பெற்றவர். பின்னர் பல தமிழ் ஆராச்சிகள் செய்து முதுமெய்யியல் மற்றும் முனைவர் பட்டங்கள் பெற்றவர். இவர் தனது ஆராய்ச்சி மூலம் திருக்குறள் நூலின் சிறப்பு மற்றும் காலம் பற்றி எழுதுகையில் பின்வருமாறு கூறுகின்றார். கிறிஸ்துவிற்கு முன்னர் (கி.மு) 245 ஆம் ஆண்டளவில் தமிழ்நாட்டின் ஒரு பகுதியை ஆண்ட நார்முடிச் சேரல் என்னும் மன்னனை பாடிய புலவர் மாமூலனார் திருவள்ளுவரைப் பற்றி பாடி இருப்பதாலும் கி.மு 205 ஆம் ஆண்டில் இலங்கையை ஆண்ட எலேல சிங்கன் என்றும் அரசன் திருவள்ளுவரின் நண்பனாக இருந்ததாலும் திருவள்ளுவர் கி.மு மூன்றாம் நூற்றாண்டை சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்கிறார். அவர் தனது ஆய்வுகளின் முடிவாக திருவள்ளுவர் பிறந்தது கிறிஸ்துவிற்கு முன்னர் 231 ஆம் ஆண்டு எனக் கொள்வது தக்கது என்கிறார்.

இலங்கையை சேர்ந்த பேராசிரியர் விநாசித்தம்பி செல்வநாயகம் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ் பேராசிரியராக இருந்தவர். இவர் தனது இளமாணிப்பட்டத்தை இலண்டன் பல்கலைக் கழகத்திடமிருந்தும் முதுமாணிப்பட்டத்தை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திட மிருந்தும் பெற்றவர். இவர் தமிழில் ஏராள மான ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளார். பேராசிரியர் செல்வநாயகம் தனது ஆராய்ச்சிகளின் மூலம் திருவள்ளுவர் கி.மு மூன்றாம் நூற்றாண்டை சேர்ந்தவர் அல்ல. அவர் கி.பி மூன்றாம் நூற்றாண்டை சேர்ந்தவர் என்கிறார். பேராசிரியர் செல்வநாயகம் அதற்கு பல ஆதாரங்களை தனது ஆய்வுக்கட்டுரையில் விளக்கி யுள்ளார். அவற்றில் ஒன்று சங்ககாலத்தில் அதாவது கி.பி மூன்றாம் நூற்றாண்டுவரை இருந்த தமிழர் பண்பாட்டில் தமிழர்கள் மீன், இறைச்சி, கள் ஆகியவற்றை விரும்பி உண்டு இன்பக்களியாட்டங்களில் ஈடுபட்டு இருந்ததாக பண்டைய நூல்கள் கூறுகின்றன. ஆனால் சங்கம் மருவிய காலத்தில் அதாவது கி.பி மூன்றாம் நூற்றாண்டில் சமணமதம் தமிழ்நாட்டில் நன்கு பரவியிருந்தது. சமண மதக் கொள்கைகளான புலால் உண்ணாமை மற்றும் கள் அருந்தாமை போன்றவற்றையே திருக்குறள் வலியுறுத்துவதால் திருக்குறள் கி.பி மூன்றாம் நூற்றாண்டை சேர்ந்தது என்கிறார் பேராசிரியர். இவற்றைவிட மேலும் பல ஆதாரங்களை காட்டும் பேராசிரியர் செல்வநாயகம், திருவள்ளுவர் கி.பி மூன்றாம் நூற்றாண்டை சேர்ந்தவர் எனக் கொள்வது தக்கது என்கிறார்.

மேலே குறிப்பிட்ட இரண்டு ஆராய்ச்சியாளர்களை விட மேலும் பல தமிழ் ஆராய்ச்சியாளர்கள் திருவள்ளுவரைப் பற்றி ஆய்வு செய்து அவரது காலமாக கி.மு மூன்றாம் நூற்றாண்டில் இருந்து கி.பி மூன்றாம் நூற்றாண்டு வரையுள்ள இடைப்பகுதியில் வெவ்வேறு ஆண்டுகளை ஆதாரம் காட்டி கூறியுள்ளார்கள். இதிலிருந்து எம்மால் தெரிந்து கொள்ளக்கூடிய உண்மை என்னவென்றால் திருவள்ளுவர் எப்போது பிறந்தவர் என சரித்திர பூர்வமாகவோ அல்லது விஞ்ஞான பூர்வமாகவோ இதுவரை கண்டறியப்பட வில்லை. அவர் பிறந்தது கி.மு மூன்றாம் நூற்றாண்டில் இருந்து கி.பி மூன்றாம் நூற்றாண்டுவரை உள்ள 600 வருடங்களில் எதுவாகவும் இருக்கலாம்.

> **"தொல்காப்பியத்தின் காலத்தில் இருந்து தமிழ் ஆண்டுகளை எண்ணினால் தற்போது தமிழ் புத்தாண்டிற்கு கிட்டத்தட்ட 7330 ஆவது ஆண்டாக இருக்கும். இது கூட தமிழின் தொன்மையை குறிக்கா விட்டாலும் 2042 ஆம் ஆண்டு என்று ஒரு கற்பனை திகதியில் இருந்து எண்ணுவதை விட தொன்மையானதாக இருக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக இவ்வாறு தொல்காப்பியத்தின் காலத்தில் இருந்து கணித்தால் இது தமிழில் தற்போதுள்ள மிகத் தொன்மையான நூலான தொல்காப்பியத்தின் தோற்றத்தில் இருந்து கணிக்கப்பட்ட ஆண்டு என ஒரு சரித்திர நிகழ்வையாதல் சுட்டிக் காட்டிக் கொண்டு இருக்கும்."**

உண்மை இவ்வாறு இருக்க தமிழ் அறிஞர்கள் சிலர் 1921 ஆம் ஆண்டு முற்று முழுதாக அரசியல் காரணங்களுக்காகவும் சைவசமயத்திற்கு எதிர்ப்பு கொள்கையை காட்டவும் தமிழ்நாட்டில் ஒன்று கூடி திருவள்ளுவர் கிறிஸ்துவிற்கு முன்னர் 31 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் திகதி பிறந்தவர் என எந்த ஒரு சரித்திர ஆதாரமும் இல்லாமல் பிரகடனப்படுத்தினார்கள். திருவள்ளுவர் பிறந்த ஆண்டையே சரியாக இன்னும் ஆய்வுகள் மூலம் கண்டுபிடிக்க முடியாமல் இருக்கும் போது இவர்கள் திருவள்ளுவர் ஜனவரி 15 கி.மு 31 இல் பிறந்தவர் என ஒரு கற்பனை திகதியை திருவள்ளுவரின் பிறந்ததினமாக அறிவித்தார்கள்.

இதைவிட நகைப்புக்குரிய விடயமாக தமிழர்கள் தங்கள் வருடத்தை திருவள்ளுவர் பிறந்ததாக கூறப்பட்ட ஒரு கற்பனை நாளில் இருந்தே ஆரம்பிக்க வேண்டும் எனவும் இவர்கள் முடிவு எடுத்தார்கள். இந்த தமிழ் அறிஞர்குழுவில் பல தமிழ் அறிஞர்கள் இருந்தார்கள். ஆனால் ஒரு சரித்திரவியலாளரோ அல்லது ஒரு விஞ்ஞான ஆய்வாளரோ அல்லது ஒரு அகழ்வாராய்ச்சியாளரோ இருக்கவில்லை. இவர்களது முற்றுமுழுதான நோக்கம் சைவசமயத்திற்கு எதிர்ப்பு காட்டுவதாகவே இருந்தது.

இவ்வாறு இவர்கள் 1921 இல் எடுத்த தீர்மானம் தமிழ் மக்களிடையே செல்வாக்கு பெறவில்லை. 2008 ஆம் ஆண்டில் தமிழக அரசின் முதல்வர் தனது சொந்த அரசியல் காரணங்களுக்காக தமிழ் அறிஞர்கள் 1921 இல் எடுத்த தீர்மானத்தை தமிழ்நாட்டு அரசின் சட்டமூலமாக பிரகடனப்படுத்தினார். அதாவது தமிழ்நாட்டு அரசின் சட்டப்படி (சரித்திர அல்லது விஞ்ஞான ஆதாரப்படியல்ல) திருவள்ளுவர் பிறந்தது ஜனவரி 15 கி.மு 31 தமிழர்கள் எல்லாரும் இக்கற்பனை திகதியில் இருந்து தான் தமது வருடங்களை எண்ண வேண்டும்.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன்தோன்றிய மூத்தமொழி தமிழ் மொழி என பெருமை பேசும் தமிழக அரசியல் வாதிகள் தமிழ் புத்தாண்டை ஜனவரி 15, கி.மு 31 இல் இருந்து ஆரம்பித்து எண்ணவேண்டும் என்பது எவ்வாறு பொருந்தும்? தமிழ்நாட்டு அரசியல் சட்டப்படி தமிழ் புத்தாண்டு இந்த ஜனவரி 15. 2011 இல் 2042 ஆவது ஆண்டாக பிறக்கிறது. இதைவிடுத்து, இப்போது எமக்கு இருக்கும் தமிழ் இலக்கண நூல்களில் காலத்தால் மூத்ததான 'தொல்காப்பியம்' பற்றிய தமிழ் அறிஞர்களது ஆராய்ச்சியை பார்ப்போம். திருக்குறள் பற்றிய ஆய்வுகள் போல் தொல்காப்பியம் பற்றிய ஆய்வுகள் செய்தவர்களும் பல்வேறுபட்ட காலத்தை தொல்காப்பியத்தின் காலம் எனக்கூறினாலும் எல்லோரும் ஒன்றுபடுவது தொல்காப்பியம் திருக்குறளைவிட பல ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதில் தான்.

வித்துவான் க. வெள்ளை வாரணன் அவர்கள் ஆராய்ச்சி செய்து தொல்காப்பியம் கி.மு 5320 ஆம் ஆண்டு எழுதப்பட்டது என பல ஆதாரங்களை காட்டி நிறுவியுள்ளார். எனவே தமிழன் தொன்மையை தமிழ் நாட்டு அரசோ அல்லது இலங்கைத் தமிழ் அறிஞர்களோ அறியவிரும்பினால் அவர்கள் தொல்காப்பியத்தின் காலத்தை சரித்திர பூர்வமாகவோ அல்லது விஞ்ஞான பூர்வமாக வோ ஆராய்ந்து அறிய வேண்டும். அதன் பின்னர் தொல்காப்பியத்தின் காலத்தில் இருந்து தமிழ் ஆண்டுகளை எண்ணலாம்.

தொல்காப்பியத்தின் காலத்தில் இருந்து தமிழ் ஆண்டுகளை எண்ணினால் தற்போது தமிழ் புத்தாண்டிற்கு கிட்டத்தட்ட 7330 ஆவது ஆண்டாக இருக்கும். இது கூட தமிழின் தொன்மையை குறிக்காவிட்டாலும் 2042 ஆம் ஆண்டு என்று ஒரு கற்பனை திகதியில் இருந்து எண்ணுவதை விட தொன்மையானதாக இருக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக இவ்வாறு தொல்காப்பியத்தின் காலத்தில் இருந்து கணித்தால் இது தமிழில் தற்போதுள்ள மிகத் தொன்மையான நூலான தொல்காப்பியத்தின் தோற்றத்தில் இருந்து கணிக்கப்பட்ட ஆண்டு என ஒரு சரித்திர நிகழ்வையாதல் சுட்டிக் காட்டிக் கொண்டு இருக்கும்.

தற்போது உள்ள விஞ்ஞான வசதிகளை கொண்டு, 'மனித இனம் இற்றைக்கு 160,000 வருடங்களுக்கு முன்னர் கிழக்கு ஆபிரிக்காவிலேயே தான் முதன்முதல் தோன்றியது என அகழ்வாராய்ச்சிகள் மற்றும் DNA பரிசோதனைகள் மூலம் அறியமுடிகிறது. எனவே கிட்டத்தட்ட 2000 ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்த வள்ளுவரின் பிறந்த திகதியை ஆய்வுகள் மூலம் கண்டுபிடிப்பது ஒரு கடினமான காரியம் அல்ல. நீங்கள் கொடுக்கும் உமிழ் நீர் மூலம் 20 ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் உங்கள் மூதாதையர் எப்போது எங்கே தோன்றினார்கள் என அறியமுடியுமானால் (நவம்பர் 01, 2010 விளம்பரம் இதழில் அ. முத்துலிங்கத்தின் கட்டுரை) வள்ளுவர் பிறந்ததினத்தையோ தொல்காப்பியர் பிறந்த தினத்தையோ அறிவது மிகவும் இலகுவான விடயம்.

தமிழ்நாடு அரசு வள்ளுவர் பிறந்த திகதி என ஒரு கற்பனை திகதியை அரசியல் காரணங்களுக்காக சட்டமாக்கி அமலாக்குவதை விடுத்து வள்ளுவரது உண்மையான பிறந்ததினத்தை ஆராய்ந்து அறியவேண்டும். அத்துடன் தொல்காப்பியம் தோன்றிய காலத்தையும் ஆராயவேண்டும். அதன்பின்னர் சரித்திரம் மற்றும் விஞ்ஞான ஆதாரங்களுடன் தமிழின் தொன்மையை குறிக்கும் ஆண்டில் இருந்து தமிழ் புத்தாண்டை கணிக்கலாம்.

இதை இன்று நாம் செய்யாவிட்டாலும் நாளை வரும் எமது இளம் சமுதாயம் நிச்சயமாக தமிழின் தொன்மை வள்ளுவரின் உண்மையான பிறந்த திகதி, தொல்காப்பியம் எழுதிய ஆண்டு போன்றவற்றை அப்போது இருக்கும் மிகவும் நவீன விஞ்ஞான வசதிகள் மூலம் இலகுவாக கண்டறிந்து சரித்திர மற்றும் விஞ்ஞான பூர்வமான ஆதாரங்களுடன் நிறுவப் போகிறார்கள். அதற்குள் எமது மூதாதையர் எமக்கு அளித்த பல விஞ்ஞான பூர்வமாக கணிக்கப்பட்ட நிகழ்வுகளை (தைப்பொங்கல், சித்திரைப்புத்தாண்டு) அரசியல் காரணங்களுக்காக கற்பனை நிகழ்வுகளாக மாற்ற வேண்டாம். இவ்வாறு செய்வதால் விஞ்ஞான அறிவு மிக்க எமது வருங்கால இளைஞர் சமுதாயம் எம்மையும் எமது செய்கைகளையும் எள்ளி நகையாடும்.

தமிழ் நாட்டு அரசின் இந்த கற்பனை திகதியில் இருந்து தமிழ் புத்தாண்டை எண்ணும் முயற்சிக்கு ஆதரவளிக்கும் எம்மவர்களில் சிலர் கூறும் ஒரு காரணம் சித்திரை புத்தாண்டு ஆங்கில ஆண்டுகள் போல் தொடர்ந்து எண்ணப்படுவதில்லை என்பதாகும். இது முற்று முழுதாக தவறானது. சித்திரைப்புத்தாண்டு 60 பெயர்களை திரும்ப திரும்ப பாவித்தாலும் ஆண்டுகள் தொடர்ந்து எண்ணப்பட்டே வருகின்றன. சித்திரை 13, 2010 இல் பிறந்த விகிர்தி வருடம் கலியுகத்தில் 5112 ஆவது வருடம். சித்திரை 14, 2011 இல் பிறக்கப்போகும் கர வருடம் 5113 ஆவது வருடம். சித்திரையில் பிறக்கும் புதுவருடம் தொடர்ந்து எண்ணப்படுவது இல்லை என்பது அரசியல் காரணங்களுக்காக தமிழ்நாட்டு அரசின் தமிழ்ப்புத்தாண்டு கொள்கையை ஆதரிப்பவர்கள் வேண்டும் என்று செய்யும் விதண்டாவாதமாகும். ஜனவரி 15 என்ற மாறாத திருவள்ளுவரின் பிறந்த நாள் (கற்பனை) திகதியை வானியல் நிகழ்வுகளால் மாறுகின்ற பொங்கல் திகதியுடன் எவ்வாறு சேர்க்கலாம்?

எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு -குறள்



**சிவ ஞானநாயகன்**
vlambaram@sympatico.ca

# உலகக் கோப்பை கிரிக்கெட் இன்னும் சில நாட்களில்

## விளையாட்டுத் தகவல்கள் 297

1844-ம் ஆண்டு செப்ரெம்பர் 24-ம் தேதி முதன் முறையாக சர்வதேச அளவில் கிரிக்கெட் விளையாடப்பட்டது. இந்த ஆட்டம் கனடா, அமெரிக்க நாடுகளுக்கு இடையில் நடை-பெற்றது.

டெஸ்ட் போட்டி 1877-ம் ஆண்டு ஆஸ்திரேலிய, இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் முதல் முறையாக நடைபெற்றது. அதன்பிறகு தொடர்ச்சியாக இவ்விரு நாடுகளுக்கு இடையிலான போட்டி ஆஷஸ் தொடர் என்ற பெயரில் இப்போதுவரை நடைபெற்று வருகிறது.

1900-ம் ஆண்டில் பாரீஸில் நடைபெற்ற கோடைகால ஒலிம்பிக் போட்டியில் கிரிக்கெட் சேர்க்கப்பட்டது. இந்தப் போட்டியில் பிரிட்டன், பிரான்ஸை வீழ்த்தி தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியது. அதன்பிறகு கிரிக்கெட் போட்டி ஒலிம்பிக்கில் சேர்க்கப்படவில்லை.

காலம் காலமாக வளர்ச்சிபெற்று வந்த கிரிக்கெட், 1960-களில் தான் உலக அளவில் புகழ்பெற ஆரம்பித்தது. அதற்கு இங்கிலாந்து கவுன்டி கிளப் போட்டிகள் முக்கிய காரணமாக அமைந்தன. அவர்கள் தான் ஒரேநாளில் நடை-பெற்று முடியும் வகையில் ஒருநாள் போட்டிகளை அறிமுகப்படுத்தினர். அதன்பிறகு 1962-ம் ஆண்டில் நான்கு நாடுகள் பங்கேற்கும் மிட்லேண்ட் கோப்பை போட்டி அறிமுகப்படுத்தப்பட்டது.

சர்வதேச அளவிலான முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டி 1971-ம் ஆண்டு நடை-பெற்றது. மெல்போர்னில் நடைபெற்ற இங்கிலாந்து, ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் போட்டியின் முதல் 4 நாள் ஆட்டம் மழையால் பாதிக்கப்பட்டது. இதனால் ஏமாற்றமடைந்த ரசிகர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும் வகையில் இறுதி நாளன்று 40 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி நடத்தப்பட்டது. அப்போது ஓவருக்கு 8 பந்துகள் வீசப்பட்டன. இதையடுத்து ஒருநாள் போட்டிகள் இங்கிலாந்து மட்டுமின்றி அனைத்து நாடுகளிலும் புகழ்பெற்றன.

இதையடுத்து உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியை நடத்த சர்வதேச கிரிக்கெட் வாரியம் (ஐசிசி) முடிவு செய்தது. அதில் பிறந்ததுதான் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி. முதல் உலகக் கோப்பை போட்டி 1975-ம் ஆண்டு ஜுன் 7-ம் தேதி தொடங்கியது. அப்போது ஓவருக்கு 6 பந்துகள் வீதம் 60 ஓவர்கள் வீசப்பட்டன. வீரர்கள் வெள்ளை நிற உடைகளை அணிந்திருந்தனர். சிவப்பு நிற பந்துகள் பயன்படுத்தப்பட்டன.

முதல் உலகக் கோப்பையில் டெஸ்ட் போட்டியில் விளையாடும் அந்தஸ்தைப் பெற்றிருந்த இந்தியா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள், நியூசிலாந்து, பாகிஸ்தான் மற்றும் டெஸ்ட் போட்டியில் விளையாடாத இலங்கை, கிழக்கு ஆப்பிரிக்கா என மொத்தம் 8 நாடுகள் பங்கேற்றன. இந்த உலகக் கோப்பையில் இந்திய அணி முதல் சுற்றிலேயே வெளியேறியது. லீக் சுற்றில் இந்தியா, இங்கிலாந்தை எதிர்கொண்டது. முதலில் பேட் செய்த இங்கிலாந்து 334 ரன்கள் குவித்தது. அந்த அணியின் டெனிஸ் அமிஸ் 137 ரன்கள் குவித்து உலகக் கோப்பையில் முதல் சதத்தைப் பதிவு செய்தவர் என்ற பெருமையைப் பெற்றார். அந்த ஆட்டத்தில் இந்திய வீரர் காவஸ்கர் 134 பந்துகளைச் சந்தித்து 36 ரன்களை மட்டுமே எடுத்து கடை-சிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். அதன்மூலம் ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் அதிக பந்துகளை சந்தித்து மிகக் குறைவான ஸ்கோரை எடுத்தவர் என்ற சா(சோ)தனைக்கு சொந்தக்காரரானார் காவஸ்கர்.

இங்கிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய அணிகள் அரைஇறுதிக்குத் தகுதிபெற்றன. அரை இறுதியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி நியூசிலாந்தையும், ஆஸ்திரேலிய அணி, இங்கிலாந்தையும் வீழ்த்தி இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றன.

மேற்கிந்தியத் தீவுகள் அணி 17 ரன்கள் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியாவை தோற்கடித்து கோப்பையைக் கைப்பற்றி கிரிக்கெட்டில் முதல் உலகச் சாம்பியன் என்ற பெருமையைப் பெற்றது. இறுதி ஆட்டத்தில் மேற்கிந்தியத்தீவுகள் கேப்டன் கிளைவ் லாயிட் 85 பந்துகளில் 102 ரன்கள் குவித்தார். இந்த ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவின் 5 முன்னணி வீரர்கள் ரன்அவுட் ஆகினர். அதில் 3 பேரை விவி யன் ரிச்சர்ட்ஸ் ரன்அவுட் செய்தது குறிப்பிடத்தக்கது.

இந்த உலகக் கோப்பையில் நியூசிலாந்தின் கிளன் டர்னர் 333 ரன்கள் குவித்து அதிக ரன்கள் குவித்தவர் என்ற பெருமையைப் பெற்றார். ஆஸ்திரேலியாவின் கேரி கில்மோர் 11 விக்கெட்டுகளை வீழ்த்தி அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவர் என்ற பெருமையைப் பெற்றார். இருப்பினும் இந்த உலகக் கோப்பையில் தொடர்நாயகன் விருது வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த உலகக் கோப்பையில் 15 ஆட்டங்கள் நடைபெற்றன. உலகக் கோப்பை போட்டியை 1 லட்சத்து 58 ஆயிரம் பேர் நேரில் கண்டுகளித்தனர்.

### பிரிட்டிஷ் பத்திரிகை வெளியிட்ட கர்வம் நிறைந்த வீரர்கள்

கர்வம் நிறைந்த விளையாட்டு வீரர்கள் பட்டியலை பிரிட்டிஷ் பத்திரிகை வெளியிட்டுள்ளது. 10 பேர் அடங்கிய இந்தப் பட்டியலில் இந்திய வீரர் யுவராஜ் சிங்கின் பெயரும் இடம்பெற்றுள்ளது. யுவராஜ் சிங், தனது டிவிட்டர் இணையத்தில் தன்னை ஒரு சிறந்த கிரிக்கெட் வீரர், தொழிலதிபர், கொடை-டயாளி என்றெல்லாம் பெருமையாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஐபிஎல் அணியில் கேப்டன் பதவியை இழந்துள்ளதோடு, இப்போது டெஸ்ட் அணியிலும் தனக்கான இடத்தை இழந்துள்ளார். அவருடைய வங்கிக் கணக்கில் பணத்தின் அளவு உயர்ந்திருக்கலாம். அதேசமயம் அவரது ஆட்டத்திறனை இழந்துவிட்டார். இலங்கைத் தொடரின் போது அவர் 12-வது வீரராக இருந்தார். அதனால் அவரை தண்ணீர் கொண்டு செல்லும் பையன் என்று இலங்கை கிரிக்கெட் ரசிகர்கள் கிண்டல் செய்தனர் என்று அந்த பத்திரிகை கூறியுள்ளது. இந்தப் பட்டியலில் யுவராஜோடு, குத்துச்சண்டை முகமது அலி, ரியல் மாட்ரிட் கால்பந்து அணியின் பயிற்சியாளர் ஜோஸ் மௌரினோ, அமெரிக்க கூடைப்பந்து ஜாம்பவான் மைக்கேல் ஜோர்டான், இங்கிலாந்து கோல்.்ப் வீரர் நிக் பால்டோ ஆகியோரின் பெயரும் இடம்பெற்றுள்ளன. அதேசமயம் கெவின் பீட்டர்சன் இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்களில் சற்று வித்தியாசமானவர், சுயநலமற்றவர் என்று தெரிவித்துள்ளது. அவரை அகங்காரம் நிறைந்தவர் என்று வார்னே தெரிவித்துள்ளார்.

பீட்டர்சன் ஆணவம் நிறைந்தவர் என்பதில் சந்தேகமில்லை என்று கூறியுள்ள அந்த பத்திரிகை, அவர் 94 ரன்களை எட்டினாலே தன்னை படம் எடுக்க வேண்டும் என்பதற்காக புகைப்படக்காரர்களை பார்க்க ஆரம்பித்துவிடுவார் என்று தெரிவித்துள்ளது.

### சிறந்த கால்பந்து வீரர் யார்?

ரொனால்டோவை விட மெஸ்சி சிறந்த கால்பந்து வீரரெனத் தெரிவிக்கப்படுகிறது. கால்பந்து அரங்கில் முன்னணி வீரர்களாக வலம் வருபவர்கள் கிறிஸ்ரியானோ ரொன-ால்டோ (போர்த்துக்கல்), லியோனல் மெஸ்சி (ஆர்ஜென்ரினா), உலகின் தலை சிறந்த கால்பந்து வீரருக்கான விருதை இருவரும் மாறி மாறி கைப்பற்றி வருகின்றனர். ஆனால் கால்பந்து வீரர்கள் மற்றும் ரசிகர்கள் மத்தியில் ரொனால்டோவை விட மெஸ்சிக்கு தான் வரவேற்பு அதிகம் உள்ளது. இதற்கு காரணம் மைதானத்துக்கு வெளியே ரொன-ால்டோவின் நடவடிக்கைகளில் உள்ள குறைபாடுகள் தான்.

இது குறித்து பார்சிலோனா கிளப் அணி வீரரான டேனி ஆல்வ்ஸ் (பிரேசில்) கூறுகையில், "கிறிஸ்ரியானோ ரொனால்டோ திறமைமிக்கவர் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் இதன் அடிப்படையில் இவர் சிறந்த வீரர் என்று கூறி விட முடியாது. ஒரு சிறந்த வீரர் என்பவர் மைதானத்துக்கு வெளியிலும் சிறப்பாக நடக்க வேண்டும். ரொனால்டோவை பொறுத்த வரை சக வீரர்கள் யாரையும் மதிக்க மாட்டார். எப்போதும் திமிராகவே இருப்பார். அமைதி என்பதே அவர-ிடம் இல்லை. ஆனால் அதேசமயம் மெஸ்சி ஒரு பண்புள்ள மனிதர். மைதானத்தில் திறமையான ஆட்டத்தை வெளிப்படுத்தும் இவர் சக வீரர்களிடம் நல்ல முறையில் பழகக் கூடியவர். அமைதி, மரியாதை காட்டுதல் உள்ளிட்ட நல்ல பண்புகள் அவரிடம் உள்ளன. இதனால் தான் ரொனால்டோவை விட மெஸ்சிக்கு ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது" என்றார்.

### லயோனல் மெஸ்ஸி மீண்டும் சிறந்த வீரராகத் தேர்வு

.்பீபா உலகக் கால்பந்துக் கூட்டமைப்பின் உலகத்தின் சிறந்த வீரராக மீண்டும் அர்ஜென்டினா கால்பந்து நட்சத்திரம் லயோனல் மெஸ்ஸி தேர்வு செய்யப்பட்டுள்ளார். இந்த ஆண்டு இனியெஸ்டா அல்லது சாவி போன்ற ஸ்பெயின் வீரர்களுக்கு இந்த விருது கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் மெஸ்ஸி அவர்களை வீழ்த்தினார்.

1988/89 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக ஹாலந்து கால்பந்து நட்சத்திரம் வான் பாஸ்டன் அடுத்தடுத்து உலகின் சிறந்த வீரர் விருது பெற்றார். அதன் பிறகு தற்போது லயோனல் மெஸ்ஸி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

எஸ். கணேஷ்





# அன்றும் இன்றும் ஆதனம்

கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக நாம் வாழும் வீடு/மனை எவ்வாறு மாற்றம் அடைந்துள்ளது என்று பார்க்கும்போது மிகவும் ஆச்சரியப் படக்கூடியதாக உள்ளது. முக்கியமாக நாம் வாழும் பிரதேசமாகிய ஒன்ராறியோ ரொறொன்ரோவில் கனவில் கூட எதிர்பார்க்காத மாற்றங்களே காணப்படுகிறது.



கனடாவில் வீடு வாங்குபவர்களின் நலனை நோக்காக கொண்டு இயங்கும் Canada Mortgage and Housing Corporation (CMHC) அண்மையில் கடந்த 60 வருடங்களில் எவ்வாறு நாம் வாழும் இடம் மாறியுள்ளது என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது. உதாரணமாக 1940களின் ஆரம்பத்தில் இருந்த 3 மில்லியன் வீடுகளில் கிட்டத்தட்ட 1.5 மில்லியன் வீடுகளில் மட்டுமே குளிக்கும் bathtub அல்லது shower இருந்துள்ளது. 30% வீதமான வீடுகளில் பெரிய திருத்த வேலைகள் காணப்பட்டே உள்ளன. அத்துடன் 44% வீடுகளில் Flushing Toilet இல்லாமல் இருந்துள்ளது. (அந்தக்காலத்தில் எவ்வாறு மக்கள் வாழ்ந்துள்ளார்கள்? அத்துடன் 93% ஆன வீடுகள் வெப்பமாக்குவதற்கு Coal, அல்லது wood பாவிக்கப்பட்டுள்ளது. அண்மைக்காலம்வரை இருந்து வந்த oil Heating, electrical heating மெல்ல மெல்ல மறைந்து போயுள்ளது. அனேகமான இன்றைய வீடுகளில் Gas Heating காணப்படுகின்றது. விஞ்ஞான மாற்றத்தால் Solar Panel வெப்பமாக்கும் முறை முன்னோக்கி வருகின்றது. ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக ஜேர்மனியில் இம்முறை மிகவும் முன்னணியில் உள்ளது. வட அமெரிக்காவில் இப்பொழுது சிறிது சிறிதாக இவ்வாறான Heating முறை வரத்தொடங்கியுள்ளது.

இதற்கு முக்கிய காரணமாக அதிக மக்கள் சுற்றல் சூழலில் ஏற்படும் மாற்றங்கள் பற்றிய அறிவு அக்கறை சூழலில் ஏற்படும் வெப்பநிலை மாற்றம் (Global, climate change) பாவிக்கப்படும் energy மாதாந்த செலவு இதனால் எவ்வாறு மாதாந்த Heating கட்டுப்பணத்தை குறைக்கலாம், என்பதற்காக வீடு - மனை நிர்மாணம் செய்யும் நிறுவனங்கள் புதிய புதிய முறைகளைக் கையாளுகின்றன. இதனால் 700 இற்கு மேற்பட்ட Technical Changes நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

**தொடர் - 334**

உதாரணமாக புதிய வீடுகளிற்கான LEED மற்றும் Energy Star போன்றவற்றை குறிப்பிடலாம். இதன் முக்கியமான குறியீடு என்ன என்றால் எவ்வாறு Energy மிச்சப்படுத்தும் உபகரணங்களை வீட்டில் பாவிப்பது என்பதே. புதிதாக கண்டுபிடித்து நடைமுறைக்கு பாவனைக்கு கொண்டு வரப்படும் வீட்டு உபகரணங்களை பரிசோதித்து இவ் உபகரணங்களால் எது கூடியவரை Energy வழங்குகின்றது என்ற

தொடர்ச்சி 26ஆம் பக்கம்

Home Life / GTA Realty Inc., Brokerage*

"கனவு உங்களுடையது
பொறுப்பு எங்களுடையது"



1711 Mccowan Rd. #206, Toronto - Tel: 416.321.6969
145 Trades Blvd #29, Mississauga - Tel: 905.712.2666

Raja M. Mahendran, P. Eng.
(Broker/Owner)

CONDO FOR SALE



MARKHAM / SHEPPARD
2 Bedrooms + Den Condo for sale.
Brand New building. Parking included.
Avail. Anytime. Asking Only $314k.

STORE FOR SALE



FINCH / MIDDLEFIELD
Main Floor Unit in GTA Square Shopping Mall. Unit is Close to a main entrance, high traffic area & plenty of surface and underground parking available. 1 Parking and locker included in the price.



METROGATE
(KENNEDY/ HWY 401)
Completion (2011, 2012)
Price starts from $ 249,900.

BRAND NEW
CONDO FOR SALE



BLOOR / SHEBOURNE
2 Bedroom + den in downtown.
Avail. March 2011. 1 Parking.
Further details Please Call.



CENTRO
(Close to Scarborough Town centre)
Completion (2011). Price starts
$239,000 (special condition).

BRAND NEW CONDO
FOR SALE
DOWNTOWN
(SPADINA /WELLINGTON)
Completion (2013) price starts to $249,900.00. special package available for the buyers.

DOWNTOWN
2 Level Town house for lease in downtown.
Close to Rogers Center & CN tower.
2 Washrooms 1 parking & locker.
Avail. February01, 2011.

MAXX RESTAURANT
MAXX Restaurant is opening soon.

Retail space GTA Square. Main floor & second floor. Avail. Anytime for Lase or sale. Only certain units Avail. building. Don't miss the chance. 7 Days opening. Resonable rent.

*Independently Owned & Operated

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931

COLDWELL BANKER

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

Buying or Selling

Relocation Service
Ottawa> > > < < < GTA



நந்தா ஐயாத்துரை

Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# வாழத்துடிக்கும்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

பனை மரங்களும் இங்கு அதிகம். அதனால் பனை உற்பத்தியிலும் இங்குள்ளவர்கள் ஈடுபட்டிருந்தார்கள்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பனைவளம் அதிகமாக உள்ள இடங்களில் கண்டாவளையும் ஒன்று. மற்றது பூனகரி. பூனகரியில் இப்போது பனை வளம் குறைந்துவிட்டது என்று சொல்லப்படுகின்றது. கண்டாவளையில் பனைகள் நிறைய நிற்கின்றன. பனைவெல்லத்திற்குக் கண்டாவளை பேர்போனது. பனைவெல்ல உற்பத்திக்கென ஒரு நிலையம் இங்கு இயங்கி வந்தது.

அதுமட்டுமல்ல. ஒரு காலத்தில் இங்கு ஓடு உற்பத்தியும் இருந்தது. 'கண்டாவளை ஓடு' என்று இங்கு உற்பத்தி செய்யப்பட்ட ஓடுகளுக்கு தனி மதிப்பே இருந்தது. பனை உற்பத்தி நிலையம் தொடர்ந்து இயங்கி வந்தது. தனியார் முயற்சியில் மேற்கொள்ளப் பட்டு வந்த ஓடு உற்பத்தி கடந்த 1990 ஆம் ஆண்டிற்குப் பின்னர் அற்றுப் போய்விட்டது.

நடந்து முடிந்த யுத்தத்தின்போது கண்டாவளையும் பேரழிவைச் சந்தித்துள்ளது. வீடுகள், கோவில்கள், பாடசாலைகள் என எல்லாமே அழிந்து போயுள்ளன. பனைவெல்ல உற்பத்தி நிலையமும் யுத்த பாதிப்பிலிருந்து தப்பவில்லை. அது உடைந்து கிடக்கின்றது. போர் அழிவினால், ஊர் பாழடைந்து போனது. மீள்குடியேற்றத்தையடுத்து, அங்கு மனித வாழ்க்கை இப்போது துளிர்விடத் தொடங்கியிருக்கின்றது.

உற்பத்தி வளம் மிக்க கண்டாவளையின் கல்விக்கு ஊற்றாக கண்டாவளை மகா வித்தியாலயம் திகழ்கின்றது. நூற்றுப் பத்து ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வருகின்றது. பின்தங்கிய பிரதேசத்துப் பாடசாலை. கடந்த 1897 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலையின் நூற்றாண்டு விழா 1997 ஆம் ஆண்டு வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. நூற்றுக் கணக்கான பட்டதாரிகளை உருவாக்கியிருக் கின்றது. இங்கு கல்வி கற்றவர்களில் பலர் இப்போது வெளிநாடுகளில் வசதியோடு வாழ்கின்றார்கள். புலம் பெயர்ந்து சென்றிருந்தாலும், தமது பாடசாலையை அவர்கள் மறந்துவிடவில்லை. தனியான கணினி பிரிவு. தனியான கட்டிடத்தில் நூலகம். இவையெல்லாம் வெளிநாடுகளில் உள்ள பழைய மாணவர்களின் பங்களிப்பு கலந்த வளர்ச்சியின் அடையாளங்கள்.

இறுதிப் போருக்கு முன்னர் சுமார் ஆயிரத்து அறுநூறு மாணவர்கள் இங்கு கல்வி பயின்றார்கள். பாடசாலைக்கென இரண்டு ஜெனரேற்றர்கள், தண்ணீர் இறைக்கும் இயந்திரம், குழாய் மூலமான நீர்விநியோக வசதி, அத்துடன் சற்றிலைட் அன்ரெனா போன்ற பல வசதிகளுடன் இந்தப்பாடசாலை இயங்கி வந்தது. பாடசாலையின் சற்றிலைட் அன்ரெனாவின் உதவியோடு இந்தப் பாடசாலையும், இந்தக் கிராமத்து மக்களும் சர்வதேச நாடுகளுடன் தொடர்பு கொள்ளக் கூடியதாக இருந்தது. தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டுள்ள சிவஞானம் சிறிதரன் இந்தப் பாடசாலையில் நான்கு வருடங்கள் அதிபராக இருந்து இந்தப் பாடசாலையின் முன்னேற்றத்திற்குப் பணிபுரிந்துள்ளார். 2003 தொடக்கம் 2007



ஆம் ஆண்டு வரையில் அவர் இங்கு அதிபராகப் பணியாற்றி பின்னர் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் அதிபராக மாற்றம் பெற்றுச் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பாடசாலையிலேயே கல்வி கற்று பட்டதாரியாகி, ஆசிரிய பணியில் இணைந்திருந்த இந்த ஊரைச் சேர்ந்த திருமதி கோமதி மதியழகன்தான் இப்போதைய அதிபர்.

யுத்தத்தினால் இந்தப் பாடசாலை முற்றாக அழிக்கப்பட்டிருப்பதாக அந்தப் பாடசாலையின் துணை அதிபர் ஞானப்பிரகாசம் இளையதம்பி கூறுகின்றார். "கட்டிடங்களின் கதவுகள் ஜன்னல்கள் எதுவுமே இல்லை. நூலகம் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளது. நிரந்தர கட்டிடங்களுக்கு மேலதிகமாக 6 கொட்டில் இருந்தன. அவற்றில் 3 முற்றாக அழிந்து கிடக்கின்றன. 3 மண்டபங்கள் அவற்றின் கூரைகள் சீற்றுகள் எல்லாம் கழற்றி எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன. அழகான பூங்கா இருந்தது. நிறைய பூச்சாடிகள் வைத்திருந்தோம். இரண்டு லட்சம் ரூபா பெறுமதி வரும். பூச்சாடிகளும் இல்லை. பூங்கன்றுகளும் இல்லை. கணினி அறை, களஞ்சிய அறை, மின்சாதனங்கள், போட்டோ கொப்பி இயந்திரம் உட்பட நவீன அலுவலக உபகரணங்கள், இசைக்கருவிகள் எல்லாம் இருந்தன. இப்போது எதுவுமே இல்லை. 20 லட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான சேதம் ஏற்பட்டுள்ளது. இப்போது சுமார் 300 மாணவர்கள் வருகின்றார்கள். 20 ஆசிரியர்கள்தான் இருக்கிறார்கள். வசதிகள் இல்லை. தளபாடங்கள் தொடக்கம் குடி தண்ணீர் வரையில் அடிப்படை வசதிகளற்ற நிலையில் தான் பாடசாலை நடைபெறுகின்றது. ஆசிரியர்களுக் கான பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது" என்றார் துணை அதிபர் இளையதம்பி.

இந்தப்பாடசாலை மீண்டும் பழைய நிலைமைக்கு வரவேண்டும் மாணவர்களின் கல்விக்கு சிறந்த முறையில் செயற்பட வேண்டும். இதற்கு வேண்டிய உதவிகளைச் செய்து தரவேண்டும் என்று பாடசாலை சமூகத்தினர் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டார்கள்.

கண்டாவளையில் இருந்து புளியம் பொக்கணையைப் போய் பார்த்து வரலாம் என புறப்பட்டது நாடாளுமன்றக் குழு.

கண்டாவளை கிராமிய வீதிகள், பராமரிப்பும், பாவனையுமின்றி, பாழடைந்து கிடந்தன. வாகனங்கள் பெரும் சிரமத்துடன்தான் அந்த வீதிகளில் ஊர்ந்து சென்றன. கண்ணி வெடிகள் இருக்குமோ என்ற அச்சமும் உள்ளுக்குள் எழுந்தது. புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்திற்குச் செல்லும் வரையில் கிராமிய வீதிகளில் மனித நடமாட்டத்தையே காணவில்லை.

புளியம்பொக்கணை ஆலயத்தை நெருங்கியபோது அந்தப் பிரதேசத்தில் இருந்த கல்வீடுகள் அனைத்தும் சிதைந்து கிடந்தன. இடிந்த வீடுகளுக்கிடையில் செடிகளும் முளைத்திருந்தன. ஆலயச் சுற்றாடல் அலங்கோலமாக இருந்தது. அந்தப் பகுதி ஆளரவமற்று வெற்றுப் பிரதேசமாக இருந்தது. நிமிர்ந்து கம்பீரமாக் காட்சி தந்த ஆலயம் பூட்டிக் கிடந்தது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கு சென்று இறங்கிய சிறிது நேரத்தில் அந்த ஆலயத்தின் அறங்காவலர் சபைத் தலைவர் வீரகத்தி பிள்ளை இராமநாதன் அங்கு வந்து சேர்ந்தார்.

வன்னிப்பிரதேசத்தின் புராதன ஆலயங்களில் புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோவிலும் ஒன்று. மிகவும் சக்தி வாய்ந்த தெய்வம் என்பது மக்களின் நம்பிக்கை. புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்தப் பொங்கல் என்றால் வடபகுதியில் பிரசித்தமானது. வன்னிப்பிரதேசம், யாழ். குடாநாடு என்று வடமாகாணப் பகுதிகளில் இருந்து மக்கள் வெள்ளமாக ஆண்டுப் பொங்கலின்போது ஆலயத்தில் கூடுவார்கள்.

"கிட்டடிலதான் மீளக்குடியேற்றத்தில வந்திருக்கிறம். முந்தி 200 குடும்பங்கள் இருந்தன. இப்ப 100 குடும்பங்கள் மட்டிலதான் ஊருக்குத் திரும்பியிருக்கினம். இருக்க இடமில்ல. கூடாரங்களும் கொட்டில்களும் போட்டுத்தான் இருக்குதுகள். அழிஞ்ச வீடுகளின்ர மொட்டைச் சுவர்களுக்கு மேல தரப்பாளைப் போட்டு சிலபேர் குடியிருக்கினம். குடி தண்ணிக்கு சரியான கஸ்டம். கிணறுகள இறைச்சுத் தரேல்ல. கோவில் கிணற்றிலதான் இப்ப சனம் தண்ணி அள்ளுது. ஊர் ஆக்களை திரட்டி கோயில சுத்தம் செய்து பூசைகளைத் தொடங்கலாம் எண்டிருக்கிறம். கோயில்ல இருந்த பொருட்கள் எதுவுமே இல்ல. அயன் சேவ் இருந்தது. அதை உடைச்சு எடுத்திட்டினம். பெரிய விலையுயர்ந்த குத்து விளக்குகள் உட்பட பெறுமதியான கோவில் பொருட்கள் எதுவுமே இல்லை. வாட்டர் பம்ப், லைட் என்ஜின், ஒலிபெருக்கி செட் ஒன்றுமே இல்லை. கோவில் சீற்றுகளக்கூட கழற்றி எடுத்திட்டினம். கல்லில செதுக்கின சிலையெல்லாம் இருக்கு. பொருட்களுக்குத்தான் சேதம்" என்றார் வீரகத்திபிள்ளை இராமநாதன்.

இந்த ஆலயச் சுற்றாடலில் உள்ள புளியம் பொக்கணை, கண்டாவளை, கல்மடுநகர், முரசுமோட்டை பெரியகுளம், இராமநாதபுரம் போன்ற கிராமங்களைச் சேர்ந்த 75 வீதமான மக்கள் மீளக்குடியமர்ந்திருந்தார்கள்.

"ஊருக்குத் திரும்பினதில சந்தோஷம்தான். ஆனா வீட்டுக்குவீடு உயிரழப்புக்கள். ஊனமடைஞ்சவங்களுக்கு குறைவில்ல. வெறும் கையோடதான் திரும்பியிருக்கிறம். எல்லாத்தையும் இழந்து ஊருக்கு வந்தா, ஊர் முழுதும் பாழடைஞ்சு கிடக்குது. ஆலயம்கூட அழிவிலிருந்து தப்பேல்ல. மனதுக்கு வருத்தமா இருக்கு. எதிர்காலமாவது நல்லா இருக்க வேணும். இந்தத் துயரங்களுக்கு இதோடை முடிவேற்பட வேணும் என்றதுதான் ஆசை" பெருமூச்சோடு கூறினார் புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய அறங்காவலர் அவைத் தலைவர் வீரகத்திபிள்ளை இராமநாதன்.

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# வைகோவின் முன்னால் உள்ள வாய்ப்புகள்-2

## தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2011

தமிழ்நாட்டில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆருக்குப் பிறகு தொண்டர்களை ஈர்க்கும் காந்த சக்தியைக் கொண்டிருந்த தலைவன் வைகோதான். எந்த ஒரு திட்டமிடுதலும் இல்லாமல், அடிமட்ட தொண்டனாக தொடங்கிய வைகோ, தன்னுடைய தனிப்பட்ட பண்புகளாலும் திறமையினாலுமே வளர்ச்சி அடைந்தார். அவரது கடந்த கால அரசியல் வாழ்க்கையைக் கவனித்தால் மிக இயல்பாக வளர்ந்து ஒரு உச்சத்தை அவர் அடைந்திருப்பதைக் கவனிக்கலாம்.

மே 22, 1944ஆம் தேதி பிறந்த வைகோவின் இயற்பெயர், வை.கோபால்சாமி. பிறந்த ஊர்: திருநெல்வேலி மாவட்டம் கலிங்கப்பட்டி. திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய உறுப்பினராக இருந்த வைகோ மூன்று முறை நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராகவும், இருமுறை நாடாளுமன்ற மக்களவை உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

கட்சியின் மூத்த தலைவர்களையும் தொண்டர்களையும் மதிக்கிற, நேசிக்கிற தலைவர், தனக்கு வந்த மந்திரி பதவி வாய்ப்புகளைக் கூட தனது சகாக்களுக்கு ஒதுக்கித் தந்தவர், ஒரு மிகச் சிறந்த நாடாளுமன்றவாதி. நாடாளுமன்றத்தில் தமிழ் இனத்துக்காக குரல் கொடுத்தவர். வைகோ பாராளுமன்றத்தில் இருந்த காலத்தில்



தமிழ்நாட்டைப் பார்த்து டெல்லியே அஞ்சியது. கட்சியை குடும்பத்திற்காக பயன்படுத்த வேண்டும் என்ற குறுகிய நோக்கம் இல்லாதவர். யாரும் எப்பொழுதும் தொடர்புகொள்ளக் கூடியவர். எளிமையானவர், பகட்டில்லாதவர், அவரது வீட்டிற்கு எந்தவொரு அப்பாயிண்மெண்டும் இல்லாமலேயே சென்று, அவரைச் சந்திக்க முடியும். அவர் செல்லும் வழியில் யாரும் அவரது காரை நிறுத்தி உதவி கேட்டாலோ அல்லது ஏதேனும் விபத்தில் அடிபட்டுக் கிடந்தாலோ நேரடியாக களத்தில் இறங்கி உதவக் கூடியவர். லட்சக்கணக்கான பேருக்கு படிப்பதற்கு சிபாரிசும், வேலை வாங்கியும் கொடுத்தவர். அவர்களிடம் கட்சி நிதிக்கென்று கூட ஒரு ரூபாய் காசு கூட வசூலிக்க அனுமதிக்காதவர். தனிமனித ஒழுக்கம் உள்ளவர். ஈழத்தில் தமிழரின் உரிமையை நிலைநாட்ட அயராது பாடுபடுபவர் போன்றவைதான் வைகோ பற்றி பொதுவாக மக்கள் மத்தியில் இருக்கும் மதிப்பீடுகள். இதில் பெரும்பகுதி உண்மையும்கூட.

"நான் தமிழ்நாட்டு மக்களின் ஊழியன். இந்த நாட்டுக்காக, மொழிக்காக உழைப்பவன்" என்பதுதான் வைகோ மேடைகளில் அடிக்கடி உச்சரிக்கும் வார்த்தைகள்.

இவையெல்லாம் சேர்ந்துதான் திமுகவில் வைகோவின் எழுச்சியை உருவாக்கியது. தொண்டர்களிடம் அவர் கொண்ட நெருக்கத்தால் அது இன்னும் பலப்பட்டது. பேச்சாற்றல், அவரது கம்பீரம் நிறைந்த கவர்ச்சி, தொண்டர்களை அரவணைக்கும் முறை போன்றவற்றாலேயே வைகோ திமுகவில் ஒரு முக்கிய தலைவராக வளர்ந்தார்.

ஆனால், வைகோவை கலைஞருக்கு மாற்றாக திமுக தொண்டர்கள் நினைக்கவில்லை. கலைஞரின் போர்வாள், கலைஞருக்கு அடுத்த திமுகவின் தலைவர் என்பதாகவே வைகோவை கருதினர். எனவேதான் வைகோ, கலைஞருக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தியதை நிறைய திமுக தொண்டர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. வைகோ, திமுகவை கைப்பற்றுவார் அல்லது குறைந்தபட்சம் கட்சியை இரண்டாக பிளப்பார் என்று கருதப்பட்ட நிலையில், வைகோவால் ஒரு சிறு பிரிவையே தன்னுடன் வெளியே கொண்டுச் செல்ல முடிந்தது.

ஆனாலும், கலைஞரின் கவர்ச்சிதான் வைகோவின் எழுச்சிக்குப் பிரச்சினை என்பதால், கலைஞருக்குப் பிறகு வைகோவுக்கு பெரிய எதிர்காலம் இருக்கும் என நம்பப்பட்டது. திமுக தொண்டர்கள் போர்க்குணம் நிறைந்த, பேச்சாற்றல் மிக்க வைகோவை ஏற்பார்களா, ஸ்டாலினை ஏற்பார்களா என்று கேட்டால், அனைவரும் சுலபமாக வைகோவையே கைகாட்டுவார்கள்.

ஸ்டாலின், கலைஞரின் ஆளுமையின் பின்னால் ஒளிந்து கொண்டிருக்கிறார். திமுகவின் அடுத்த தலைவரிடம் இருக்க வேண்டிய குணநலன்களோ, ஆளுமைத் தன்மையோ, போர்க்குணமோ, சாணக்கியத்தன்மையோ ஸ்டாலினிடம் இல்லை. கலைஞரின் மகன் என்பதால்தான் ஸ்டாலினுக்கு மரியாதையும் தலைவர்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்





குழந்தைகளின் நடவடிக்கைகளுக்கான உலகம் ஒன்று இருக்கிறது. ஹாக்கியிலிருந்து நடனம் வரை, சமையலிலிருந்து மொழி கற்கும் வகுப்புகள் வரை, உங்கள் குழந்தை எதில் ஈடுபட்டிருந்தாலும் வரி வரவைப் பெறுங்கள். ஒன்டாரியோ குழந்தைகள் நடவடிக்கை வரி வரவு ஒவ்வொரு நழந்தைக்கும் 500 டொலர்கள் வரை உரிமை கோரிப் பெற உங்களுக்கு வழி வகுக்கிறது.ஒவ்வொரு குழந்தைக்கும் 50 டொலர்கள் வரை திரும்பிப் பெறலாம்.உங்கள் ரசீதுகளைப் பத்திரமாக வைத்திருங்கள்.நீங்கள் வருமானவரி விவர அறிக்கையைப் பூர்த்தி செய்யும் போது இந்த வரவின் உரிமையைக் கோர உங்களுக்கு அவை தேவைப்படும். மேலும் அதிக தகவல்களுக்கு வருகை புரியுங்கள் அல்லது தொடர்பு கொள்ளுங்கள்.

ontario.ca/kidscredit • 1 866 668-8297 • TTY: 1 800 263-7776

ஒன்டாரியோ அரசினால் பணம் செலுத்தப்பட்டுள்ளது

Ontario

# உங்களின் மிகப் பெரிய சொத்தைப் பாதுகாக்கிறீர்களா?

எல்லாத் தொழில்களிலும் சரியில்லாத காரியங்களைச் செய்யக்கூடியவர்கள் ஓரிருவர் இருக்கலாம்; பெரும்பான்மையோர் தொழில் தர்மம் காப்பவர்களே! அத்தகைய விதிவிலக்குகளைப் பற்றி எழுதுவது என்பதும் பத்திரிகைத்தர்மமாகத் தான் இருந்து வந்துள்ளது. அத்தகைய முறையில் சென்ற 'விளம்பரத்தில் ஆங்கிலச் செய்தித்தாள் ஒன்றில் சுடச்சுட காப்புறுதி முகவர்களை சாடி வந்து கொண்டிருந்த கட்டுரைகளின் சுருக்கத்தையும், என் கருத்தையும் தெரிவித்திருந்தேன். அதன் தொடர்ச்சியாக காப்புறுதிகளின் எளிமை யான விளக்கத்தை இங்கே தருகின்றேன்.

இதற்கிடையில் உங்களிடம் ஒரு கேள்வி, வாழ்வில் உங்களின் மிகப் பெரிய சொத்து என்ன?.... பதில்... நீங்கள் தான். நீங்களும், உங்களின் சம்பாதிக்கும் திறனும் தான். அதற்குப்பிறகு உங்களின் அன்புச் சொந்தங்கள்.

சரி விளக்கத்துக்கு வருவோம். விளக்கத்தை மூன்று காப்புறுதி பிரிவுகளில் பார்ப்போம்.

1. வீட்டுக்கடன் ஆயுட்காப்புறுதி.
2. தவணைக்கால ஆயுட் காப்புறுதி.
3. முழு ஆயுட் கால காப்புறுதி.

### முதலில் வீட்டுக் கடன் ஆயுட் காப்புறுதி

நோக்கம் - வீட்டுகடன் இருக்கும் காலத்தில் இறக்க நேரிட்டால், மீதமுள்ள வீட்டுக்கடனை முழுவதுமாக செலுத்துதல்.

பயன்கள் - மரணம் நேர்ந்தால் சொந்தங்கள் வீட்டுக்கடன் கட்ட முடியாமல் நடுத் தெருவிற்கு வரும் நிலை தவிர்க்கப்படு கின்றது. புகைப்பவர்களுக்கு இந்தக் காப்புறுதி சிறந்தது. புகைப்பவர்களுக்கு முகவர் மூலம் எடுக்கும் காப்புறுதிக்கு பிரிமீயம் கூடுதலாக இருக்கும். மற்றவர்களுக்கு முகவர் மூலம் எடுக்கும் தவணைக் கால காப்புறுதி குறைந்த பிரிமீயத்தில் கிடைக்கும்.

### குறைபாடுகள்:-

1. பிரிமீயம் நிலையானது, வீட்டுக்கடனோ குறைந்து வரும், பிரிமீயம் குறையாது.
2. வங்கியை வீட்டுக்கடனுக்கு மாற்றும் போது வீட்டுக்கடன் ஆயுட்காப்புறுதியையும் சேர்த்து மாற்ற முடியாது.
3. பயனாளி : கடன் கொடுத்த வங்கி அல்லது நிறுவனமோ பயனாளி உங்கள் குடும்பம் அல்ல. மரணம் சம்பவித்தால் பணம் வங்கிக்கு வரும். உங்கள் குடும்பத்துக்கு அல்ல, கடன் தள்ளுபடி செய்யப்படும்.
4. இதை 'Post claim' காப்புறுதி என்று சொல்வார்கள். அதாவது நீங்கள் கொடுத்த விபரங்கள் உங்கள் Claim வரும் வரை சரி பார்க்கப் படமாட்டாது. தவறான விபரம் மற்றும் உறுதிமொழி கொடுக்கப்பட்டிருந் தால் உங்கள் கோரிக்கை நிராகரிக்கப்படும்.

விலை : நியாயமானது, தவணைக்கால ஆயுட்காப்புறுதியுடன் ஒப்பிடலாம்.

சிபார்சு : நீங்கள் புகைப்பவராயிருந்தால் இது சிறந்த காப்புறுதி, இல்லையேல் தவணைக் காப்புறுதியே சிறந்தது.

### தவணைக்கால ஆயுட் காப்புறுதி:

நோக்கம் : குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் பாதுகாப்பு தேடல். அடிப்படைக் காப்புறு தியை குறைந்த பிரிமீயத்தில் பெறலாம். கடன் மற்றும் சொத்துக்களை குறிப்பிட்ட காலம்வரை கடன் தீரும்வரை பாதுகாத்தல்.

பயன் : குறைந்த பிரிமீயம், குழந்தைகள் பெரியவர்கள் ஆகும் வரை மட்டும் பாதுகாப்பு தேவை என்றால் இது பயன்தரக்கூடியது.

குறைபாடுகள்: புதுப்பிக்கக் கூடியதா யிருந்தால், பின்வரும் வருடங்களில், புதுப்பித்தபின், பிரிமீயம் மிகக்கூடுதலாக இருக்கும் என்றாலும் பின்னால் எவ்வளவு பிரிமீயம் வரும் என்பதையும் முன்னாலேயே தெரிந்து கொள்ள முடியும்.
2. 10 வருடம், 20 வருடம் என்று தவணைக் காலத்துக்கு எடுக்கும் போது, மரணம் தவணைக்காலத்துக்குப் பின்னால் சம்பவித்தால் காப்புறுதி ஒன்றும் கிடைக்காது. தவணைக் காலத்துக்குள் மரணம் சம்பவித்தால் மட்டுமே காப்புறுதி கிடைக்கும்.

விலை : 20 வருடத்தை விட 10 வருடம் விலை மலிவாக இருக்கும்.

சிபார்சு : 'தவணைக் காப்புறுதியை வாங்குங்கள், மீதிப் பணத்தை முதலீடு செய்யுங்கள்' என்பது பிரபல்யமான ஒரு சிபார்சு, இது எல்லோருக்கும் பொருந்தும் என்று சொல்ல முடியாது. பண நெருக்கடி உள்ளவர்கள் தவணைக் காப்புறுதியை எடுக்கலாம். தவணைக்காப்புறுதி எடுக்கும் பட்சத்தில் அது புதுப்பிக்கப்படக் கூடியதாக வும், தேவைப்பட்டால் முழுஆயுள்காலத்தை யும், பாதுகாக்கும் படி பின்னால் மாற்றிக் கொள்ள வசதி உள்ளதாகவும் இருப்பதாக உறுதி செய்து கொள்ளுங்கள்.

### யூனிவர்சல் / முழுஆயுட்கால காப்புறுதி

நோக்கமும் பயனும் : வாழ்நாள் முழுவதற்குமான ஆயுட்காப்புறுதி, தேவைப் பட்டால் முதலீடுகளையும் வாங்கக்கூடிய வசதி. வரிச்சலுகையுடன் கூடிய முதலீட்டு வளர்ச்சி - இதில் தான் கவனமாக இருக்க வேண்டும். இது கத்தி போன்றது. பயனும் தரலாம். துன்பமும் தரலாம். இறப்பின் போது வருமான வரி கட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்றால், அதற்கான பணத்தை ஆயுட்கால காப்புறுதியின் மூலம் வரியில்லாமல் பெற்றுக்கொள்ள வகை செய்தல். என்றைக்கு இறப்பு நேர்ந்தாலும் பிரியமானவர்களுக்குப் பணம் பெற வழிவகை செய்தல் போன்றவை ஆகும்.

### குறைபாடுகள் :

1. மற்ற எல்லா காப்புறுதிகளையும் விட விலை அதிகம் உள்ளது.
2. முதலீடுகள் Segregated Funds களைக் கொண்டிருந்தால், அதிகமான தொகையை நிர்வகிக்கக் கொடுக்க வேண்டியிருந்தல். (Management Expense Ratio MER)
3. ஒரே ஒரு நிறுவனத்தில் மட்டுமே முதலீடு செய்ய வேண்டிய கட்டாயம்.
4. எல்லாவற்றையும் விட புரிந்து கொள்ள கடினமாக இருக்கும் பல அம்சங்கள்.

விலை : எல்லாவற்றையும் விட விலை (பிரிமீயம்) அதிகம்.

சிபார்சு : முதலில் புரிந்து கொள்ளுங்கள். சந்தையில் பலதரப்பட்ட யுனிவர்சல் மற்றும் முழு ஆயுட்கால காப்புறுதிகள் உள்ளன.

உங்களுக்கு காப்புறுதி மட்டும் தான் வேண்டும் என்றால் அதற்கேற்ற காப்புறுதியைத் தேர்ந்தெடுங்கள். இந்தக் காப்புறுதிகளை விற்கும் விற்பனை முகவர் உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களைத் தெளிவாக விளக்கிக் கூறுபவராகவும், நம்பகத்தன்மையும், நல்ல விபரம் அறிந்தவராகவும் இருக்க வேண்டும். இல்லையேல் சென்ற விளம்பரத்தில் குறிப்பிட்டிருந்ததைப் போன்ற சிக்கல்களும், பொருள் நட்டமும் வர வாய்ப்பு உள்ளது. யுனிவேர்சல் காப்புறுதியின் விலை, தவணை 100இன் விலையை விடக் குறைவாக இருக்குமானால் சிறந்தது. உறுதி செய்யப்பட்ட (Guaranteed) யுனிவேர்சல் ஆயுட்காப்புறுதிகளும் சந்தையில் உள்ளன. இதுதான் எல்லாவற்றிற்கும் மேலான சிபார்சு. புரிந்து செயல்படுங்கள். புரியும் வரை முடிவு எடுப்பதைச் சற்றே தள்ளிப் போடுங்கள். விளக்கம் கேட்பது உங்கள் உரிமையும், கடமையும் ஆகும். ஆயுட்காலம் முழுவதற்குமான காப்புறுதி எனக்குத் தேவையா?

இது உங்கள் தேவைகளையும் சந்தர்ப்பங் களையும் பொறுத்தது. பின்குறிப்பிடப்படும் சந்தர்ப்பங்களில் பெரும்பாலும் தேவையில்லை என்றே சொல்லலாம்.

1. குழந்தைகள் பெரிதாகும் வரை மட்டுமே பணவரவுக்கு ஒரு பாதுகாப்பு தேவையும் உள்ளது. குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களான பின்பு பெரிய பணவரவு தேவையில்லை என்று நினைக்கும் மனப்போக்கு.
2. உங்கள் காலத்துக்குப் பின் பெரும் பணத்தை யாரும் வாரிசாகப் பெற வேண்டிய அவசியமில்லை என்று நினைப்பது.

3. உங்களிடம் சொத்துக்கள் நிறைய உள்ளன. அதே சமயத்தில் அந்தச் சொத்துக்களுக்கு இறப்பின் போது வரி கட்டத் தேவையான பணம் RRSP மற்றும் TFSA போன்ற சேமிப்புகளில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். வரி கட்டுவதற் காக சொத்துக்களை அவசரகதியில் விற்க வேண்டிய சூழ்நிலை ஏழாது என்றநிலை. இந்த விவாதம் சொத்துக்களைச் சுமுகமாக குடும்பத்தினரிடையே பிரிப்பதற்கும் கூடப் பொருந்தும். உதாரணத்துக்கு ஒருவர் வீட்டை எடுத்து கொள்ளலாம். மற்றவர் பணத்தை எடுத்துக் கொள்ளலாம். இங்கே குறிப்பிடப்பட்டிருக்கும் எல்லா விபரங்களும் பொதுவான செய்திகளே. உங்கள் சூழ்நிலைக்கு ஏற்ற ஆலோசனைகளைத் தக்க ஆலோசகரிடம் பெறவும். இக்கட்டுரை ஆசிரியரிடம் ஆலோசனை பெற தொலைபேசி எண் : 416.473.6100



**பெரி. முத்துராமன்**


# கர்நாடக சங்கீத வகுப்புக்கள்



ஈழத்தின் பிரபல சங்கீத வித்துவான்
**திரு. பத்மலிங்கம்**
அவர்களின் மகளும்
மாணவியுமான ஜெயகீதா தயாளன்
அவர்களினால் வாய்ப்பாட்டு
வகுப்புக்கள்
பயிற்றுவிக்கப்படுகின்றன.

**தைப்பூசத்தினை முன்னிட்டு புதிய வகுப்புக்கள் ஆரம்பிக்க உள்ளன.**

**இடம்: MCCOWAN & FINCH BIRCHMOUNT & ELLESMERE**

**தொடர்புகளுக்கு: 416.293.2009 647.680.7323**

# நினைவாற்றல் - MEMORY - 2

அன்பான வாசகர்களே!

முந்திய இதழில், சில 'நிமோனிக் (Mnemonic)' என்ற நினைவாற்றல் நுட்பங்களைப் பற்றி பார்த்ததோடு மேலும் பலவற்றை நாமாகவே உருவாக்கிக் கொள்ளலாம் என்ற குறிப்புடன் கட்டுரை நிறைவு செய்யப்பட்டு இருந்தது. அந்தக் கட்டுரையில் முக்கியமாக விடயங்களை நினைவில் வைத்திருப்பதற்கு எவ்வாறு மீட்டல் செய்து கொள்ளலாம் என்பது பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது.

சிலரால் பாடல்களை இலகுவாக நினைவில் வைத்திருக்க முடிகின்றது. வேறு சிலருக்கு தொலைபேசி எண்களை அல்லது சில குறிக்கப்பட்ட பாட விடயங்களை இலகுவாக நினைவில் வைத்திருக்க முடிகின்றது. நினைவாற்றல் வெற்றிக்குரிய அடிப்படைக் காரணமாக அமைவது நாம் ஒரு விடயத்தில் அல்லது ஒரு குறிக்கப்பட்ட பாடத்தில் வைக்கும் ஆவல்தான். நாம் அதிகளவு ஆவலை வைக்கும்பொழுது நினைவாற்றல் இலகுவாக்கப்படுகிறது. எமது மூளையால் விருப்பப்படும் விதமாக விடயங்களை உள்வாங்கும் பொழுது அவை இலகுவாக நினைவில் வைக்கப்படும். இதை உணர்ந்து கொண்ட ஆய்வாளர்கள் கண்டறிந்த ஒரு நினைவாற்றல் நுட்பம் இந்த கட்டுரையில் அறிமுகம் செய்யப்படுகிறது. மேலும் இந்த நுட்பம் புரியாத பாடத்தை புரிய வைக்கும் தன்மை கொண்டதாகவும் அமைவது சிறப்பானதாகும்.

> கட்டுரையாசிரியர் இந்த இதழில் முக்கியமாக 'மைன்ட் மப் (Mind Map)' என்ற ஒரு நினைவாற்றல் நுட்பத்தை அறிமுகம் செய்கின்றார். இந்த நுட்பத்தை அவர் பல ஆண்டுகளாகப் பயன்படுத்தியதன் மூலமும், கட்டுரையாசிரியரால் இந்த நுட்பத்தைக் கற்றுக்கொண்ட பலர் வழங்கிய கருத்திற்கேற்பவும் இந்த அணுகுமுறை ஒரு நல்ல வழிமுறையாக உள்ளது என்பது கட்டுரையாசிரியரின் கருத்தாகும். இந்தக் கட்டுரை பற்றிய உங்கள் கருத்துக்களையும் அறிய விரும்புகின்றோம்.

மன வரைபடம் - 'மைன்ட் மப் (Mind Map)' நாம் கற்கும் எந்த ஒரு பாடத்தையும் தெளிவாக விளங்கிக் கொள்ளவும், நினைவில் நிறுத்திக் கொள்ளவும், மீட்டல் செய்வதற்கும் உகந்த ஒரு வழிமுறையாக பல வருடங்களுக்கு முன் இங்கிலாந்தைச் சேர்ந்த ஆய்வாளரும், படைப்பாளியுமாகிய ரொனி புசான் (Tony Buzan) அவர்கள் 'மைன்ட் மப் (Mind Map)" என்ற ஒரு அணுகு முறையை உருவாக்கினார்.




பல உயர்தர பாடசாலை பாட நூல்களில் 'கொன்சப்ற் மப் (Concept Map)' என்ற ஒரு வழிமுறையைக் கவனித்திருப்பீர்கள். அந்த முறையில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்த வழிமுறையாக 'மைன்ட் மப் (Mind Map)' உள்ளது. மனித மூளையின் தொழிற்பாட்டு முறையை ஆய்வு செய்து அதற்கேற்ப இந்த வழிமுறை உருவாக்கப்பட்டுள்ளது. நாம் சாதாரணமாக கல்விக் குறிப்பு (Study Notes) எடுக்கும்போது சுருக்கமாக விடயங்களைக் குறித்துக் கொள்வோம். பின்பு இந்தக் குறிப்பு நாம் பாடத்தை மீட்டல் செய்வதற்கு உதவியாக இருக்கும். நாம் மீட்டல் செய்யும் பொழுது அந்தப் பாடத்தை முதல் முறையில் படிக்கும் அளவுக்கு நேரம் செலவழித்து மீட்டல் செய்யமுடியாது. நினைவாற்றல் செய்வதற்கு சில கால இடைவெளிக்கு ஒருமுறை மீட்டல் செய்வது அவசியமானது என ஆய்வுகள் கூறுவதாக இந்தக் கட்டுரை யின் முற்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாம் இப்பொழுது சாதாரணமாக எடுக்கப்படும் சுருக்கமான பாடக்குறிப்புகளில் உள்ள குறைபாடுகளை ஆராய்வோம். இந்தக் குறிப்புக்களில் குறிக்கப்பட்டுள்ள விடயங்களிற்கிடையில் உள்ள தொடர்புகளை எம்மால் காணமுடியாது.

**தொடர்ச்சி 16ஆம் பக்கம்**

MATH REVISION

15 years of experience

5 Days Revision of Math for Final Exams

Gr.10, Gr. 11 & Gr. 12 (20 hrs. of Exams & 20hrs. of revision)

Review Questions are very advanced. Requirements well understanding of Algebra.
(should pass the prerequest test)

New classes for second semester start in end of January

Advanced University preparation
for Gr. 6 & Gr. 7, Gr. 9 & Gr.10
only weekend classes

Sharma - 416-666-5515 / 416.878.3215

# வைகோவின்...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

மதிப்பும் ஏற்பட்டதே தவிர ஸ்டாலின் இயல்பாக தலைவராக இருக்கக் கூடிய தகுதி வாய்ந்தவர் இல்லை. பெரியார், காமராஜர் தொடங்கி இன்றைய தலைவர்களான ராமதாஸ், திருமாவளவன் வரை தமிழக அரசியல்வாதிகளிடம் இயல்பாக தெரியக்கூடிய ஆளுமைத் தன்மை, போராட்டக்குணம், மக்களை கவரும் தன்மை போன்றவை ஸ்டாலினிடம் காணப்படவில்லை. இதனால் கலைஞருக்குப் பிறகு ஸ்டாலினால் கட்சியை கொண்டு செல்ல முடியுமா என்ற ஐயம் திமுகவின் முக்கிய மூத்தத் தலைவர்கள் முதல் புதிய தலைமுறை தொண்டர்கள் வரைக்கும் இருக்கிறது.

எனவே, ஸ்டாலினிடம் இருந்து சுலபமாக திமுக தொண்டர்களை வைகோவால் கவர முடியும். ஆனால், இந்த அழகிய கற்பனை அழகிரி என்கிற ஒருவர் உருவாகிற வரைக்கும்தான். வைகோ, திமுகவில் இருந்து பிரிந்து சென்ற போது கிட்டத்தட்ட தென்மாவட்டங்களில் திமுகவே இல்லை என்னும் நிலை. தலைவர்கள் முதல் தொண்டர்கள் வரை பெரும்பகுதியினர் வைகோ பின்னால் சென்றுவிட்டனர். ஒருவகையில் அழகிரியின் அரசியல் பிரவேசமே இதனால்தான் நிகழ்ந்தது எனலாம். தென்மாவட்டங்களில் திமுகவுக்கு கவர்ச்சியான ஒரு தலைவர் இல்லாத நிலையில் அரசியலுக்குள் நுழைந்த அழகிரி, பேரழிவில் சிதைந்தவிட்ட ஊரை மீண்டும் கட்டி எழுப்புவதுபோல், தென்மாவட்ட திமுகவை மீண்டும் கட்டி எழுப்பினார். வைகோவின் தென்மாவட்ட ஓட்டு வங்கி மற்றும் தொண்டர்கள் பலத்தைக் குறைத்து அவருக்கு சிம்ம சொப்பனமானார்.

## அழகிரியிடம் பேச்சாற்றல் இல்லாததை பலரும் ஒரு பெரிய பலவீனமாக சுட்டிக் காட்டுகிறார்கள்.

பொதுவாக அரசியல்வாதிகளிடம் நல்ல பேச்சாற்றல் இருக்க வேண்டும் என்ற கருத்து உலகம் முழுக்க இருக்கிறது. லெனின், பிடல் காஸ்ட்ரோ போன்ற கம்யூனிஸ்ட் தலைவர்கள் தொடங்கி தற்போதைய ஒபாமா வரை பெரிய தலைவர்கள் எல்லோருமே நல்ல பேச்சாற்றல் உள்ளவர்கள். அதுவும், தமிழகத்தில் தலைவர்களாக வேண்டுமென்றால் பேச்சாற்றல் மிக அவசியம். குறிப்பாக திமுக மேடைப் பேச்சாலேயே வளர்ந்த கட்சி என்பது அவர்கள் வாதம். ஆனால், அந்த தலைமுறை முடிந்துவிட்டது. இப்பொழுது தமிழக மக்கள் பேச்சாற்றலை மட்டுமே வைத்து தங்கள் தலைவர்களை உருவாக்கிக் கொள்வதில்லை. பேச்சாற்றல் சுத்தமாக இல்லாத ராமதாஸ் ஒரு தலைவராக உருவாகி வந்திருக்கிறார். இன்றைய தமிழக அரசியல் தலைவர்களில் மோசமான பேச்சாளர் என்றால் அது டாக்டர் ராமதாஸ் தான். அழகிரியின் செயல்பாடுகள், அவர் மேற்கொள்ளும் 'அதிரடி' நடவடிக்கைகள், பிரச்சினைகளை அணுகும் முறை, போராட்டக் குணம் போன்றவை திமுக தொண்டனை மட்டுமல்ல சாதாரண மக்களையும் கவருகிறது. தொண்டர்களிடம் நெருக்கமாக பழகுவது, உடனுடனே அவர்களது பிரச்சினைகளைத் தீர்ப்பது கட்சிக்குள் அவரது செல்வாக்கை உயர்த்தியிருக்கிறது என்கிறார்கள் இன்னொரு தரப்பினர்.

ஆனாலும், சாதாரண திமுக தொண்டன் இன்றும் வைகோவை விரும்புகிறான் என்பதுதான் பெரும்பாலானவர்கள் நம்பிக்கை. ஸ்டாலின், அழகிரியுடன் ஒப்பிடும் பொழுது வைகோவிற்கு கவர்ச்சியும் அதிகம். ஆனால், வைகோ, ஜெயலலிதாவுடன் இருப்பது திமுக தொண்டனுக்கு வெறுப்பு ஏற்படுகிறது. ஏனெனில், அவனால் எந்தக் காலத்திலும் ஜெயலலிதாவுடன் உறவாடுவதை ஏற்க முடியாது.

திமுக தொண்டர்கள் மத்தியில் வைகோவுக்கு ஏற்பட்ட வீழ்ச்சி இதுவென்றால், மக்கள் மத்தியில் வைகோவுக்கு ஏற்பட்ட வீழ்ச்சிக்கு காரணம் தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை.

தென் மாவட்ட மக்களின் உயிருக்கே உலை வைக்கக் கூடிய ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக, அந்த ஆலை துவங்கப்பட்ட 1996ஆம் ஆண்டு முதல் தூத்துக்குடியை மையப்படுத்தி பல போராட்டங்கள் நடைபெற்றன. பல்வேறு சிறு சிறு அமைப்புகள் இணைந்து நடத்திய ஸ்டெர்லைட் எதிர்ப்பு இயக்கம் இதில் முழு வீச்சில் இயங்கியது. முற்றுகை, கப்பல் சிறை பிடிப்பு என்று பல கட்டப் போராட்டங்களை இந்த இயக்கம் நடத்தியது. இந்தப் போராட்டங்களையும் இதற்கு தென்மாவட்ட மக்கள் மத்தியில் இருந்த ஆதரவையும் பார்த்து வைகோவும் ஸ்டெர்லைட் எதிர்ப்பு போராட்டத்தைத் தொடங்கினார். ஆனால், ஏற்கெனவே போராடிக் கொண்டிருந்த அமைப்புகளுடன் இணையாமல் தனியாக ஆலைக்கு எதிராய் போராட்டத்தை நடத்தினார். அப்பொழுதுதான் தனது தாய்க் கழகத்தில் இருந்து தனிக்கட்சி



தொடங்கியிருந்த நேரம். வைகோவுக்கு தென்மாவட்டத்தில் இருந்த அரசியல் செல்வாக்கினாலும், வல்லமை மிக்க பேச்சினாலும், ஊடக பலத்தினாலும் வைகோவின் போராட்டங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டது. ஸ்டெர்லைட் எதிர்ப்பு என்றால் வைகோ மட்டுமே என்ற நிலை. இது வைகோவின் மதிப்பை தென்மாவட்டங்களில் அதிகரித்தது.

ஆனால், சிறிது நாட்களிலேயே ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான போராட்டங்களில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக விலகிக்கொண்டார், வைகோ. ஆலை நிர்வாகத்திடம் பெரும் தொகையை வாங்கிக்கொண்டார் வைகோ என்ற பேச்சு தென்மாவட்டங்களில் பரவத் தொடங்கியது. அதுபோக தனது தம்பியின் பெயரில் ஸ்டெர்லைட் ஆலையில் மிக முக்கிய காண்ட்ராக்டுகள் பலவற்றையும் வாங்கிக்கொண்டார். தமிழகத்தின் எந்தப் பகுதியில் வைகோவுக்கு மதிப்பும் செல்வாக்கும் அதிகமோ, ஓட்டு அதிகம் விழுமோ அப்பகுதியில் மக்கள் அவரை சந்தேகத்துடன் பார்க்கத் தொடங்கினார்கள். வைகோவும் மற்ற அரசியல்வாதிகளைப் போல்தான் என்று அவரிடம் இருந்து விலகிச் சென்றார்கள்.

வைகோவின் மற்ற எல்லா முகங்களையும் விட அதிகம் அறியப்படும் முகம், இவர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தொடர்ச்சியாக ஆதரவளித்து வருபவர் என்பதுதான். புலிகளுக்கு ஆதரவாகப் பேசியதற்காக 2001இல் பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 19 மாதங்கள் சிறையிலிருந்தார். இன்று, வைகோவுடன் மிஞ்சியிருக்கும் தொண்டர்கள் அவரது இந்த ஈழ ஆதரவு நிலைப்பாட்டுக்காகவே இருப்பவர்கள். சமீபத்தில் ஈழத்தில் நிகழ்ந்த மிகப் பெரிய இன அழிப்புக்குப் பின்னரும், பிரபாகரன் உயிரோடு இருக்கிறார், விரைவில் வருவார் எனப் பேசியே நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கிறார் வைகோ. எனவே, இப்பொழுது இதிலும் வைகோ மேல் சந்தேகங்கள் உருவாகத் தொடங்கியுள்ளது. "இவர் எப்பவுமே இப்படித்தான். நாம் நம் சொந்த வேலைகளையாவது பார்ப்போம்' என தொண்டர்கள் கலைந்து செல்லத் தொடங்கி விட்டார்கள்.

இன்று வைகோவுடன் இருப்பது: திருமாவளவன், ராமதாஸ் போன்ற சாதிக் கட்சி தலைவர்கள் பின்னால் இருக்கும் அளவுக்கான தொண்டர்கள்தான். ஓட்டு வங்கியும் அதுபோல்தான். ஓட்டு வங்கியைப் பெருக்கவும் தொண்டர்களைக் கவரவும் வைகோ என்ன செய்யப் போகிறார் என்பதுதான் இன்று அவர் முன்னால் உள்ள முக்கியமானக் கேள்வி.

ஆனால், அதற்கு முன்னால், தமிழக சட்டமன்றத் தேர்தல் 2011 அவரை நெருங்கிக் கொண்டிருக்கிறது. வைகோவின் எழுச்சியை குலைத்து, அவரது வீழ்ச்சிக்கு வித்திட்ட தேர்தல் அரசியல் மீண்டும் அவர் முன்னால் பூதாகரமாக நின்று கொண்டிருக்கிறது.

**- நித்திலன் -**

## வைகோ என்ன செய்யப் போகிறார்?

தற்பொழுது மதிமுக, அதிமுகவின் கூட்டணியில் இருக்கிறது. அதிமுகவிற்கு ஜெயலலிதாவை விட்டால் வேறு நல்ல பேச்சாளரும், தொண்டர்களை ஈர்க்கும் தலைவர்களும் இல்லையென்பதால், வைகோ தேர்தல் பிரசாரத்தின் போது மிகவும் உதவிகரமாக இருப்பார். இருந்தும், சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் வைகோவைவிட ராமதாஸிற்கே அதிக முக்கியத்துவமும் சீட்டும் கொடுத்தார் ஜெ என்ற அவமான வரலாறும் இருக்கிறது. ராமதாஸ் போல், மதிமுகவிற்கு தற்போதைய சிக்கல் விஜயகாந்த். கூட்டணிக்குள் சீட்டுகளை பங்கு போடுவது மட்டுமல்லாமல், மதிமுகவின் வாக்கு வங்கியான நாயக்கர் இன வோட்டுகளையும் விஜயகாந்த் பங்கு போடுவார்.

அதிமுகவுடன் காங்கிரஸ் கூட்டணி அமைக்கலாம் என்ற பேச்சு பரவலாக உள்ளது. காங்கிரஸும் தேமுதிகவும் ஜெ. பக்கம் வந்துவிட்டால், அங்கு வைகோவிற்கான தேவை இருக்குமா என்பதே சந்தேகம். மேலும், ஈழத் தமிழர் பிரச்சினை காரணமாக வைகோவின் இருப்பு காங்கிரஸை சங்கடப்படுத்தவே செய்யும். அதையும் மீறி வைகோ அங்கு இருந்தாலும் சொற்ப சீட்டுகளைக் கொடுத்து அவமானப்படுத்தவும் ஜெ. தயங்க மாட்டார். காங்கிரஸ் இல்லாமல் தேமுதிக - அதிமுக கூட்டணி மட்டும் அமைந்தால் ஓரளவு மரியாதையான சீட்டுகளை வைகோ எதிர்பார்க்கலாம். ஆனாலும், விஜயகாந்தை விட அதிக சீட்டுகளை ஜெ.யிடமிருந்து வைகோ பெற முடியுமா என்பதும் சந்தேகமே.

மீண்டும் கலைஞரிடம் செல்ல வேண்டிய சூழல் வைகோவுக்கு ஏற்பட்டாலும் ஏற்படலாம். அரசியலில் எதுவும் நடக்கலாம்.


## நீங்கள் பாவித்த கணனிகளை உங்கள் உறவுகளுக்காகத் தந்துதவுங்கள்

வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையமானது போரின்போது குடிபெயர்க்கப்பட்டு மீளக்குடியேற்றிய மக்களுக்காக வன்னிப் பிரதேசத்தில் இலவசக் கணனி வகுப்புக்களை ஆரம்பிப்பதற்குத் திட்டமிட்டுள்ளது. இப் புதிய இலவசக் கணனி வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கு ஒரு தொகைக் கணனிகள் தற்போது தேவைப்படுகின்றன. எனவே தங்களிடம் உள்ள பாவித்த அதேநேரத்தில் நல்ல நிலையில் உள்ள கணனிகளை உங்களுக்குத் தேவையில்லாதவிடத்து உங்கள் உறவுகளுக்காகத் தந்துதவுமாறு அன்போடு கேட்டுக் கொள்கின்றோம். இதே நேரத்தில் புதிய கணனிகளைத் தந்துதவ விரும்புபவர்களும் அன்பளிப்புச் செய்யலாம். கணனிகள் Desktop's, Laptop's ஆக இருக்கலாம். Pentium4 தரத்திலான கணனிகள் விரும்பத்தக்கதாகும்.

கணனிகள் நன்கொடையாக ஏற்றுக் கொள்ளப்படும் முகவரி:

தொடர்புகளுக்கு: தொலைபேசி இலக்கம்: 416-644-1113.

1. 2929 Lawrence Ave. E, Unit# 203. 416-520-1412.
2. 3351 Markham Rd, Unit 1,2,3. 647-282-1877.
3. To pickup the computer at your place, inform us please.

மின்னஞ்சல்: vannitamil2009@gmail.com

அன்புடன்
திரு. கா. திருச்செல்வம்
தலைவர் - வ.த.ச.க.அமையம்.

# மிகத்தவறான கண்டுபிடிப்பு

## ஓடும் நீர் உறைவதில்லை 16
## இரண்டாம் பாகம்

மரத்திற்கு உயிர் இருக்கின்றது ஆனால் உணர்வில்லை. மிருகங்களுக்கு மூளை இருக்கின்றது ஆனால் விழிப்புணர்வில்லை. ஆனால் மனிதனுக்கு எல்லாமே இருக்கின்றது. இருந்தும் ஏன் மிகவும் தவறான, அறிவியல் அநாகரிகமான ஒன்றைக் கண்டுபிடித்தான்? அப்படிக் கண்டு பிடித்தது என்ன என்பதை நாம் அறியும் முன்னர் மனிதனின் கண்டு பிடிப்புக்கள் பற்றி சில விடயங்களைப் பார்ப்போம். மனிதனின் கண்டுபிடிப்புக்கள் எல்லாம் இயற்கையில் உள்ளதை உருமாற்றம் செய்வது மட்டுமே. இயற்கையால் படைக்கப்பட்டவற்றை தனது தேவைக்கேற்ப மாற்றி அமைப்பது தான் மனிதனின் செயற்பாடு. இந்த மாற்றி அமைத்தலுக்குப் பெயர் "கண்டுபிடிப்பு" என்கிறோம். இங்கே தான் மனிதனின் திறமையின் எல்லை எது என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டி இருக்கின்றது.

**KG Master**-kgmaster@rogers.com

இயற்கையின் படைப்பில் மனிதப் படைப்பு மகத்துவமானது. ஒப்பீட்டு ரீதியில் மனிதப் படைப்புக்கு மிக நெருக்கமாக இருக்கக் கூடிய படைப்பு என்று ஒன்று இல்லை. மிகவும் தனித்துவமான படைப்பாகிய மனிதப்படைப்பு தனக்கென்றே சில தன்மைகளைப் பெற்றுள்ளது வெளிப்படை யானதுதான். இருப்பினும் இந்தத் தன்மைகள் வெளிப்படுத்தப்படாமல், அல்லது வெளிப்படுத்த விரும்பினாலும் வெளிப்படுத்த முடியாமல் இருப்பதற்கும் மனிதனே காரணமாகின்றான். இதற்கு அடிப்படையாக அமைவது அவனது தவறான கண்டு பிடிப்புக்களே. அதிசயிக்கத்தக்க பல கண்டு பிடிப்புக்களைத் தந்துதவிய மனிதன் ஒரு சில தவறான, அசிங்கமான அறிவியலுக்கு ஒவ்வாதவற்றையும் கண்டுபிடித்துவிட்டான். இந்தத் தவறான, கண்டுபிடிப்புகளுக்குள் அகப்பட்டு அல்லற்படுவதை எண்ணும் போது மூளையிருந்தும் விழிப்புணர்வில்லாத நிலையை நாம் அடைந்துள்ளோமா என்ற கேள்வியும் எழுகின்றது.

மனிதனின் கண்டுபிடிப்புக்கள் தான் என்ன? உருமாற்றம் செய்வதுதானே அது.

இயற்கையில் கிடைக்கும் ஒன்றின் உண்மையான தன்மையை உருமாற்றம் செய்வது தான் கண்டுபிடிப்பு. இதுவரையில் நாம் அறிந்த கண்டுபிடிப்புகள் அனைத்தும் ஏற்கெனவே இருந்தவற்றின் உருமாற்றம் மட்டுமே. இனி வரப்போகும் கண்டு பிடிப்புக்களும் அவ்வாறு மட்டுமே அமையமுடியும். இயற்கையில் உள்ளதை உள்ளபடியே ஏற்றுக்கொண்டால் அது கண்டுபிடிப்பல்ல. உருமாற்றம் இடம்பெறும் போது அது கண்டுபிடிப்பாகின்றது. அது



மட்டுமல்ல, கண்டுபிடிப்பு என்பது உருவாக்கம் அல்ல. உருமாற்றம் மட்டுமே. மனிதனால் எதையுமே உருவாக்க முடியாது. உருவாக்குவது இயற்கையின் செயற்பாடு. உருமாற்றுவது மனிதனின் தொழிற்பாடு. இந்த உருமாற்றத்தில் மனிதன் மேற்கொள்ளும் நடவடிக்கை மிகவும் வேடிக்கையானது. ஒன்றில் உயிரற்ற ஒன்றை உருமாற்றம் செய்வது. (உதாரணமாக கல்லைச் சிலையாக்குவது). அல்லது உயிருள்ள ஒன்றை உயிரற்றதாக்கி உருமாற்றம் செய்வது. (உதாரணமாக மரத்தைக் கதிரை யாக்குவது). எனவே மனிதனால் உருமாற்றம் செய்யப்படுபவை சடப்பொருளாக இருக்க வேண்டும் அல்லது சடப்பொருளாக்கப்பட வேண்டும். மனிதனது இவ்வாறான கண்டு பிடிப்புக்கள் ஆக்கத்திற்கும் அழிவுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. இதில் மிகவும்

வினோதமான விடயம் என்னவெனில் அழிவுக்கான கண்டுபிடிப்புக்களில் பெரும்பா லானவை ஒரு மனிதன் இன்னொரு மனிதனை அழிப்பதற்குப் பயன்படுவதற் காகக் கண்டுபிடிக்கப்பட்டவைகள் என்பதுதான். இவை அனைத்தும் தவறான கண்டுபிடிப்புக்களே. இருப்பினும் இதை விட மோசமான கண்டுபிடிப்பு ஒன்றைப் பற்றியே உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

இதுவரை உருமாற்றத்துடன் கூடிய மனிதனி ன் கண்டுபிடிப்புக்களைப் பார்த்தோம். இந்தக் கண்டுபிடிப்புக்கள் உருவம் உடையதாகவும் உருவமற்றதாகவும் (மின்சாரம்) உள்ளன. இவை அனைத்தும் ஏற்கெனவே இருந்தவற்றில் இருந்துதான் கண்டு பிடிக்கப்பட்டன. ஆனால் உணர்வும், மூளையும், விழிப்புணர்வும் கொண்ட ஒரேயொரு இனமான மனித இனம் இயற்கையில் இல்லாத ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிறது. இயற்கையில் இல்லாத ஒன்றைக் கண்டுபிடித்ததாலோ என்னவோ அது தன்னைத் தானே கொல்லும் ஒன்றாக அமைந்துவிட்டது. அது மட்டுமல்ல ஒவ்வொருவரும் தாமாகவே அதைக் கண்டு பிடித்துவிடுகிறார்கள். அதைப் பயன்படுத்துப வர் தன்னைத் தானே கொன்று கொண்டிருப்பதை அறியமுடியாத அளவுக்கு தனது கண்டுபிடிப்புக்குள் அகப்பட்டு அல்லற்படுகின்றனர். அந்தக்

கண்டுபிடிப்பு என்ன தெரியுமா? ஒப்பீடு செய்தல் (Comparison). உண்மையில் மனித அறிவீனத்தின் உச்ச நிலைக் கண்டு பிடிப்புத்தான் ஒப்பீடு செய்தல். இயற்கை யின் படைப்பில் ஒவ்வொன்றும் தனித்துவமானது. ஒன்றைப்போல இன்னொன்று படைக்கப்படுவதில்லை. கல்லாகட்டும், மண்ணாகட்டும், மரமாகட்டும், பூவாகட்டும், காயாகட்டும், விலங்குகளா கட்டும் அல்லது மனிதர்களாகட்டும். ஒவ்வொரு உயிரினமும், ஒவ்வொரு படைப்பும் தனித்துவமானது. அப்படியிருக்கும் போது எதற்காக மனிதன் தன்னை மற்றவர்களுடன் ஒப்பீடு செய்வதைக் கண்டு பிடித்தான். நமது வாழ்க்கை ஏற்றத்தாழ்வுகளுக்கு இடமளித்தாலும் அவை எந்த விதத்திலும் எமது தனித்துவத்தைப் பாதிப்பதாக இருப்பதில்லையே. ஏனெனில் தனித்துவம் என்பது எல்லாவற்றையும் விட உயர்ந்ததல்லவா. என்னைப்போல இன்னொரு மனிதன் இருந்ததும் இல்லை, இருக்கப் போவதுமில்லை என்பது எம்மால் அறியப்பட்ட ஒன்றாக இருந்தும் கூட ஏனிந்த ஒப்பீடு?. யாருடன் யாரை ஒப்பிடுகிறோம்? என்னையும் கந்தனையும் ஒப்பிடுவது கத்தரிக்காயையும் புடலங்காயையும் ஒப்பீடு செய்வது போலல்லவா இருக்கும். என்ன பொருத்தத்தைக் காணப்போகின்றோம். எப்படி இது புத்திசாலித்தனமானதாக அமையும்? என்னை மற்றவர்களுடன் ஒப்பீடு செய்வது கோழைத்தனம் அல்லவா. அப்படியிருக்கும் போது கணவனையோ, மனைவியையோ, குழந்தைகளையோ மற்றவர்களுடன் ஒப்பீடு செய்வதை எப்படிச் சொல்வது? ஒப்பீடு செய்வதில் மிகவும் கேவலமான ஒப்பீடு என்ன தெரியுமா? எமது குழந்தைகளை அவர்களிடையே ஒப்பீடு செய்வது.

ஆம் வாசகர்களே, ஒப்பீடு வேண்டவே வேண்டாம். உங்களையோ, உங்கள் கணவன் அல்லது மனைவியையோ, குழந்தைகளையோ அல்லது இன்னொரு மனித உயிரையோ உயர்வாக அல்லது தாழ்வாக ஒப்பீடு செய்து பொருத்தமாக்கு வதற்கு இதுவரையில் எவரும் பிறந்ததில்லை. வாழ்ந்து கொண்டிருப்பவர் களில் எவருமில்லை. இனிமேல் பிறக்கப்போவதுமில்லை. ஒப்பீடு என்பது நாம் ஒவ்வொருவரும் நாமாகக் கண்டு பிடித்துக் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கும் ஒரு கொடிய நோய். நாமாகக் கைவிட்டால் அது தானாகப் போய்விடும்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- நன்றியுடன் KG Master


**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

**1-877-707-3221 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**



மஹாராஜியின் உரைகள்

| On DVD | On TV |
|---|---|
| இலவச DVDக்கு அழையுங்கள் (416) 431-5000 1 877 707 3221 | Saturdays at 11:00 am<br>Rogers Cable Channel - 20<br>Bell Express vu Channel - 219 |

# திருமண வாழ்த்து

நாள்: 03.04.2010, சனிக்கிழமை
இடம்: கொண்டாட்ட விருந்துபசார மண்டபம்
(Celebration Banquet Hall)
நிகழ்வு: ஜனார்த்தனன்-கார்த்திகாஜினி திருமணம்

## வாழ்த்து

அன்புக்குரிய மணமக்களே! அவர்களது உறவினர்களே! நண்பர்களே!

விஞ்ஞான வசதிகளால் உலகம் சுருங்கி ஒரு கிராமமாகிவிட்டது என்பதற்கு இத்திருமணம் நல்ல உதாரணம். இந்தத் திருமணத்தைத் தாயகத்தில் இருந்தவாறே மணமகனுடைய தந்தையார் சட்டத்தரணி மகாதேவன் அவர்களும் தாயார் பவானி அவர்களும் மற்றைய உறவினரும் பார்த்து மகிழக்கூடிய வசதிகளைச் செய்திருக்கும் தொழில்நுட்ப வல்லாளருக்கு எனது பாராட்டுக்கள்.

இப்பொழுது நான் இங்குள்ளவருக்கு மட்டுமல்லாது தாயகத்தில் இதனைப் பார்த்து மகிழ்ந்துக் கொண்டிருப்பவர்களுக்கும் பேசவேண்டியிருக்கின்றது. வணக்கம் மகாதேவன் - பவானி தம்பதியர்களே!

இந்தத் திருமணத்திற் கலந்துகொள்வதற்கு எனக்கு இரு பகுதியார் வழியாலும் உரிமை இருக்கிறது. நான் சாவகச்சேரி. மணப்பெண் கார்த்திகாஜினியும் சாவகச்சேரி. எனது மனைவி தவமணி குரும்பசிட்டி. மாப்பிள்ளை ஜனார்த்தனனும் குரும்பசிட்டி. அந்த வகையில் இது சாவகச்சேரிக்கும் குரும்பசிட்டிக்கும் நடக்கின்ற திருமணமாகின்றது.

திருமணம் என்றாற் பொதுவாக நீங்கள் நினைப்பதுபோல ஆணுக்கும் பெண்ணுக்கும் நடக்கின்ற கல்யாணம் மட்டுமல்ல. அது இரண்டு குடும்பங்கள் சம்பந்தப்படும் சடங்கு. சம்பந்தி என்ற சொல் வழக்கு இந்தச் சம்பந்தத்திலிருந்துதான் வந்தது. அதுமட்டுமன்றி இது இரண்டு ஊர்கள் உறவுகொள்ளும் திருமணமாகவும் இருக்கின்றது.

சாவகச்சேரி சாவகர் குடியேறிய பகுதி. அதனையும் அதனைச் சார்ந்த பகுதிகளையும் தென்மராட்சி என்று அழைப்பர். குரும்பசிட்டி குறும்பன் தலைநகரம் கொண்ட திட்டி. குறும்பன் - குறுநில மன்னன். எனவே அக்காலத்தில் இரு ஊர்களும் ஆட்சி நடத்திய ஊர்களாக விளங்கின. சாவகச்சேரி நெற்செய்கைக்குப் பெயர் பெற்றது. குரும்பசிட்டி தோட்டப் பயிர்களுக்குப் பெயர் பெற்றது.

இக்காலத்தில் சாவகச்சேரியைக் குழைக்காடு என்கிறார்கள். குரும்பசிட்டியை வடலிக்காடு என்கிறார்கள்.

குழைக்காட்டுமண் வெள்ளை மண். வெள்ளை மண்ணைப் போலவே மக்களும் வெள்ளை உள்ளம் படைத்தவர்கள். வடலிக்காட்டு மண் செம்மண். மக்களும் செம்மையான ஒழுக்கத்திலே - சைவ ஒழுக்கத்திலே வாழுகின்றவர்கள். அதனால் இந்தத் திருமணம் வெள்ளை மண் செம்பாட்டு மண்ணுடன் கலக்கின்ற சடங்காகவும் உள்ளது. அதாவது இரண்டு ஊர்களினதும் பழக்கவழக்கங்கள் சங்கமிக்கின்ற சம்பவமாகின்றது.

ஆனாலும் திருமணச் சடங்கு முறைகள் தமிழர் எல்லோருக்கும் பொதுவானவையாகவே இருக்கின்றன. மணவறையிலே பொலிவுடன் அமர்ந்திருக்கும் இருவரும் அழகான நல்ல சோடிகள். மாப்பிள்ளை ஆற்றல் மிக்கவர், அறிவு சான்றவர். மணப்பெண் அழகும் குணமும் உள்ளவர். தன்னையும் காத்துத் தற்கொண்டானையும் பேண வல்லவர்.

இந்தத் திருமணம் காதல் திருமணம் என்று அறிகிறேன். காதலிப்பது கார்த்திகாஜினிக்கு எப்படியோ தெரியாது. ஆனால் ஜனார்த்தனனுக்கு அது முதுசொமாக வந்த ஒரு கலை என்பது எனக்குத் தெரியும். அவரது தந்தையார் சட்டத்தரணி மகாதேவன் அவர்கள் தாயார் பவானியைத் துரத்தித் துரத்திக் காதலித்துத்தான் கலியாணம் செய்தார். அவர்களது காதலை ஒரு தெய்வீகக் காதலாகவே நான் கருதுகின்றேன். வாழ்த்திப் பாடியுமிருக்கிறேன்.

காதல் வாழ்க்கை இன்பகரமானது. இக்காதலர் இருவரும் கருத்தொருமித்து ஒருவருக்கொருவர் ஆதரவாக வாழவேண்டும் என்று எல்லாம் வல்ல குரும்பசிட்டி சித்திவிநாயகப் பெருமானையும் சாவகச்சேரி சந்திரசேகர வாரிவனநாதரையும் வணங்கி வாழ்த்துகின்றேன்.

உ

### வாழ்த்துப் பா

வெண்பா

செல்வன் ஜனார்த்தனனும் சீர்கார்த்தி காஜினியும்
வல்லவர்கள் வாழ்த்த மணஞ்செய்தார் - சொல்லரிய
இல்லறத்தில் நாளும் இனியவர்கள் ஒன்றாக
நல்லவகை வாழ்க நயந்து.

விருத்தம்

பண்பினர் சட்ட வல்லார் மகாதேவன் பவானி தன்பால்
முன்புசெய் தவத்தி னாலே முதன்முதல் பெற்ற மைந்தர்
இன்குணம் ஒழுக்கம் ஊக்கம் ஏற்றநற் கல்விச் செல்வம்
அன்பிவை வாய்ந்த நம்பி ஜனா என்னும் அழகன் தானும் -

குணமதிற் சிறந்த நல்லார் கிருஸ்னன்நல் லம்மா தங்கள்
மணவினை அறத்தாற் பெற்ற மதிமகள் அடக்கம் அன்பை
அணிகல னாகக் கொண்டாள் அறிவுடன் அழகும் மிக்காள்
மணிமகள் கார்த்தி காவும் மனமுற விரும்பி அன்பால் -

பெரும்பெயர் அறிஞர் அன்பர் உறவினர் பிறங்கும் மன்றில்
விரோதிபங் குனியில் ஈர்பத் தொன்றாய மேன்மை நாளில்
அரும்பயன் அளிக்க வல்ல தருமங்கள் ஆற்றி வாழத்
திருமணஞ் செய்து கொண்டார் திருவருள் மேவ நன்கே!

இனியிவர் ஒருவ ராக இணைபிரி யாது சேர்ந்து
தனிமனை யமைத்த றங்கள் தகவுற வளர்த்தும் இன்பம்
நனிமிகத் துய்த்தும் நல்ல மக்களைப் பெற்றும் சூழும்
இனநலம் வளர்த்தும் பெற்றோர் மகிழவும் இனிது வாழ்க!

வையகம் போற்றப் பெற்ற மக்களை வளர்க்க வேண்டும்
செய்வன சிறக்க வேண்டும் திறமைகள் நிலைக்க வேண்டும்
பொய்யிலாத் தமிழ்ப்பண் பாட்டைப் போற்றியே வாழ வேண்டும்
தெய்வத்தை நம்பவேண்டும் தீவினை அகல வேண்டும்!

ஏல்புறு செல்வம் யாவும் ஈட்டியே சிறந்து வாழ்க
ஆலெனத் தழைத்து வாழ்க அறுகுபோல் ஊன்றி வாழ்க
நால்வரின் வழியில் வாழ்க நானிலம் போற்ற வாழ்க
மேலவர் பிள்ளை யாரின் அருளினால் வென்று வாழ்க!

உ

திரு.க.வே. மகாதேவன் - பவானி தம்பதியரின்
மூத்த புதல்வர்
திருநிறைசெல்வன் ஜனார்த்தனன் அவர்களுக்கும்
திரு. மு. கிருஸ்னன் - நல்லம்மா தம்பதியரின்
இளைய புதல்வி
திருநிறைசெல்வி கார்த்திகாஜினி அவர்களுக்கும்
கனடா துரந்தை மாநகரில்
03.04.2010 சனிக்கிழமை திருமணம் நடந்தஅன்று
பாடி வழங்கிய

### வாழ்த்துப் பா

வெண்பா

செல்வன் ஜனார்த்தனனும் சீர்கார்த்தி காஜினியும்
வல்லவர்கள் வாழ்த்த மணஞ்செய்தார் - சொல்லரிய
இல்லறத்தில் நாளும் இனியவர்கள் ஒன்றாக
நல்லவகை வாழ்க நயந்து.

விருத்தம்

பண்பினர் சட்ட வல்லார் மகாதேவன் பவானி தன்பால்
முன்புசெய் தவத்தி னாலே முதன்முதல் பெற்ற மைந்தர்
இன்குணம் ஒழுக்கம் ஊக்கம் ஏற்றநற் கல்விச் செல்வம்
அன்பிவை வாய்ந்த நம்பி ஜனா என்னும் அழகன் தானும் -

குணமதிற் சிறந்த நல்லார் கிருஸ்னன்நல் லம்மா தங்கள்
மணவினை அறத்தாற் பெற்ற மதிமகள் அடக்கம் அன்பை
அணிகல னாகக் கொண்டாள் அறிவுடன் அழகும் மிக்காள்
மணிமகள் கார்த்தி காவும் மனமுற விரும்பி அன்பால் -

பெரும்பெயர் அறிஞர் அன்பர் உறவினர் பிறங்கும் மன்றில்
விரோதிபங் குனியில் ஈர்பத் தொன்றாய மேன்மை நாளில்
அரும்பயன் அளிக்க வல்ல தருமங்கள் ஆற்றி வாழத்
திருமணஞ் செய்து கொண்டார் திருவருள் மேவ நன்கே!

இனியிவர் ஒருவ ராக இணைபிரி யாது சேர்ந்து
தனிமனை யமைத்த றங்கள் தகவுற வளர்த்தும் இன்பம்
நனிமிகத் துய்த்தும் நல்ல மக்களைப் பெற்றும் சூழும்
இனநலம் வளர்த்தும் பெற்றோர் மகிழவும் இனிது வாழ்க!

வையகம் போற்றப் பெற்ற மக்களை வளர்க்க வேண்டும்
செய்வன சிறக்க வேண்டும் திறமைகள் நிலைக்க வேண்டும்
பொய்யிலாத் தமிழ்ப்பண் பாட்டைப் போற்றியே வாழ வேண்டும்
தெய்வத்தை நம்பவேண்டும் தீவினை அகல வேண்டும்!

ஏல்புறு செல்வம் யாவும் ஈட்டியே சிறந்து வாழ்க
ஆலெனத் தழைத்து வாழ்க அறுகுபோல் ஊன்றி வாழ்க
நால்வரின் வழியில் வாழ்க நானிலம் போற்ற வாழ்க
மேலவர் பிள்ளை யாரின் அருளினால் வென்று வாழ்க!

*- வி. கந்தவனம் - தவமணி குடும்பம், கனடா*



கவிஞர் வி. கந்தவனம்

YOGA - MEDITATION CLASSESS
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு
நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை -
தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.
நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு
வகுப்பு நடைபெறுகின்றது
தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

# தூக்கம் வரவில்லையா? இதோ தீர்வு

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

இந்த நாட்களில் உலகளாவிய ரீதியில் பெரும்பாலானோருக்கு தூக்கம் ஒரு பாரிய பிரச்சினையாகவுள்ளது. அதை அவர்கள் வெளியில் பெரிதாக அலட்டிக்கொள்வதில்லை. பலர் இரவு நேரத்தில் பல காரணங்களுக்காக நீண்டநேரம் கண் விழித்திருப்பதும் அல்லது படுக்கைக்குப் போனாலும் தூக்கம் வராது அவதிப்படுவதும் அல்லது அதிகாலையில் தூக்கம் முறிவதுமாக பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இந்த நிலை தொடர்ந்தால் எதிர்காலத்தில் பலவிதமான பலவகைப்பட்ட நோய்களுக்கு ஆளாக வேண்டி வருமென்பது பலருக்குத் தெரிந்திராத விடயம்.

தூக்கமின்மை என்பது பலகாரணங்களால் உருவாகின்றது.

1. இரவில் அதிகம் சாப்பிடுதல் - உண்டபின் உடன் படுக்கைக்கு செல்லுதல்.
2. உடலில் அதிக வாயு உருவாகுதல் (Gastric Problem)
3. பரபரப்பு, மனஅழுத்தம் - (Tension, Stress)
4. நேரம் தவறி உணவருந்துதல்.
5. மலச்சிக்கல் இருத்தல்.
6. பகல் பொழுதில் நடந்தவற்றைத் தொடர்ந்து நினைத்துக் கொண்டிருத்தல்.
7. பல்வேறுபட்ட நோய்களாலும் உடல் வலிகளாலும் அவதிப்படுபவர்கள்

இவ்வாறாக தூக்கமின்மையால் வரும் ஆரோக்கிய சீர்கேடுகளைத் தவிர்ப்பதற்கும் ஆழ்ந்த உறக்கம் வருவதற்கும் மருந்து மாத்திரைகளை உபயோகிப்பது தமது உயிருக்குத் தாமே முடிவுகட்டுவது போலாகிவிடும். இவற்றிலிருந்து



விடுபடயோகாசன முறைதான் இலகுவான ஆரோக்கியமான வழிமுறையாகும்.

1. இரவு உணவு உண்டபின் சிறிது நேரம் நடைப்பயிற்சி செய்யவேண்டும். பின் படுக்கைக்குப் போகுமுன் ஒன்று அல்லது சில நிமிடங்கள் இலேசான வெந்நீரில் குளிக்கவும். அது முடியாதவர்கள் ஒரு துணியை நீரில் நனைத்து உடலைத் துடைக்க வேண்டும். பின் பவனமுத்தாசனம் 10 முதல் 20 எண்ணிக்கை வரை செய்து விட்டு மல்லாந்து படுக்கவேண்டும். கால்களையும், கைகளையும் சிறிது அகலமாக வைத்துக்கொண்டு கண்களை மூடிக்கொண்டு இருக்க வேண்டும். அதன்பின் உடல் உள்உறுப்புகளை பாதம் முதல் தலைவரையில் ஒவ்வொன்றாகச் சொல்லிக்கொண்டு அவைகள் அனைத்தும் மிகவும் ஓய்வு நிலையிலும் தளர்வான முறையிலும் இருப்பதாக மனதில் நினைத்துக்கொள்ள வேண்டும். மேற்படி சொல்லியபடி தலைப்பகுதிக்கு வரும்போது தூக்கம் வரத்தொடங்கும். இவ்வாறு ஒன்று இரண்டு வாரங்கள் செய்து வந்தால் படுத்ததும் நன்றாகத் தூக்கம் வரும்.

மேற்கூறியவற்றைவிட சில பொருத்தமான யோகாசன பயிற்சிகள் ஆழ்ந்த உறக்கம் அமைதியான மனநிலை என்பன ஏற்படும்.

1. சூரிய நமஸ்காரம் - 5 முதல் 10 தடவை
2. விபரீதகரணி - 2 நிமிடம்
3. வஜ்ராசனம் - 1 நிமிடம்
4. சிரசாசனம் - 30 முதல் 60 வினாடி
5. தனுராசனம் - 10 முதல் 20 தடவை
6. மூச்சுப் பயிற்சி - 1. நாடிசுத்தி, 2. கபாலபாதி, 3. பஸ்திரிகா

இவற்றை ஆரம்பத்தில் ஒரு யோகாசன நிபுணரின் உதவியுடன் செய்து வருவது சிறந்தது.



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm



# நினைவாற்றல்

11ஆம் பக்கத்தொடர்ச்சி

இவ்வாறு குறிப்பு எடுக்கும்போது முக்கியமான விடயங்களை அடையாளம் கண்டு கொள்ள மட்டும் முடிகின்றது. குறிப்புக்கள் பொதுவாக படங்கள், பல்நிறங்கள் தவிர்ந்த வெறும் வாக்கியங்களாகவும், சொற்தொடர்களாகவும் சில வேளை பந்திகளாகவும் இருக்கும். குறிப்புக்கள் கடதாசித் தாளில் மேலிருந்து கீழ் நோக்கியவையாக இருக்கும். இவ்வாறான குறிப்புக்கள் மனித மூளையினால் கவரப்படும் நிலையில் இல்லை என்பதை நாம் உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

ஆனால் ஆய்வுகளின் மூலம் எமது மூளை ஒரு வட்டத்தின் நடுவில் இருந்து செல்லும் ஆரைகளைப் போன்று கதிர் வடிவத்தில் (Radiant) இருக்கும் விடயங்களை விரைவாக ஏற்றுக் கொள்ளும் எனக் கூறப்படுகின்றது. எமது மூளையானது கதிர் வடிவச் சிந்தனை (Radiant Thinking) கொண்டதே இதற்கான காரணமாகும். எமது மூளையானது நிறங்களையும், படங்களையும், நகைச்சுவையான விடயங்களையும் இலகுவாக புலன்களால் உள்வாங்கி அதிக காலத்திற்கு நினைவில் வைத்திருக்க உதவுகின்றது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு 'மைன்ட் மப் (Mind Map)' முறையில் குறிப்பை மேற்கொள்ளும் பொழுது மூளையால் இலகுவாகவும் கூடிய நாட்களுக்கும் நினைவில் வைத்திருக்க முடிகின்றது. ஆனால் ஒரு 'மைன்ட் மப் (Mind Map)' இனை உருவாக்குவதற்கு அதிக நேரம் செலவிடவேண்டும் என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். நாம் ஒரு 'மைன்ட் மப் (Mind Map)' இனை உருவாக்கும்போது நாம் அந்தப் பாடத்தை முற்றாக விளங்கிக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படுவது நாம் செலவழிக்கும் நேரத்தை பயனுள்ளவாறு மாற்றி விடுகின்றது.

ஒரு 'மைன்ட் மப் (Mind Map)'என்பது கதிர்வடிவச் சிந்தனையின் (radiant thinking) வெளிப்பாடு என்பதால் இதனை மனித உள்ளத்தின் (Human mind) ஒரு இயற்கையான செயற்பாடு ஆகக் கருதலாம். இது மூளையின் ஆற்றலை வெளிப்படுத்துவதற்கான சக்தி மிக்க வரைபட நுட்பமாகும். இந்த நுட்பத்தை வாழ்வின் பல சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்தி முன்னேற்றமான கற்றல் மூலமும், தெளிவான சிந்தனை மூலமும் மனித தொழிற்பாட்டினை வலுவூட்ட முடியும். 'மைன்ட் மப் (Mind Map)' நான்கு இயல்புகளைக் கொண்டது.

1. பாடத்தின் கவனம் மையத்தில் உள்ள உருவத்தால் படிகமாக்கப்பட்டுள்ளது.
2. பாடத்தின் முக்கிய கருப் பொருள்கள் மைய உருவத்தில் இருந்து கிளைகளாக கதிர்விரியும்.
3. கிளைகள் கருப் பொருளுக்கான அடிப்படைச் சொல்லை அல்லது அடிப்படைச் சொல்லைக் குறிக்கும் உருவத்தை உள்ளடக்கி இருக்கும்.
4. எல்லாக் கிளைகளும் சேர்ந்து இணைக்கப்பட்ட கதிர் (radiant) வடிவமான வரைபடமாகும்.

இது இரட்டைப் பரிமாண (Two Dimensional) வடிவமாக இருந்தாலும் உண்மையில் வெளி, காலம், நிறம் என்பவற்றால் சூழப்பட்ட பல் பரிமாண (multi dimensional) வரைபடமாக அமைந்து விடுகின்றது.

கதிர்வடிவச் சிந்தனை (Radiant Thinking) கொண்ட மூளையானது தனது சொந்த வடிவத்தில் விடயங்களைக் கிரகித்தல் என்ற அடிப்படைக் கொள்கையுடன் 'மைன்ட் மப் (Mind Map)' உருப்பெற்றிருக்கின்றது.

நாம் இப்பொழுது எவ்வாறு ஒரு 'மைன்ட் மப் (Mind Map)' இனை உருவாக்க முடியும் என்பதை அறிந்து கொள்வோம்.

ஒரு பாடத்தின் குறிப்பினை 'மைன்ட் மப் (Mind Map)' முறையில் எடுத்துக் கொள்வதற்கு பின்வரும் செயற்படிகளை பின்பற்றிக் கொள்ளலாம் என ரொனி புசான், பாரி புசான் ஆகியோரால் எழுதப்பட்ட 'The Mind Book' என்ற ஆங்கில நூலில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

பலவிதமான அணுகுமுறையில் 'மைன்ட் மப் (Mind Map)' இனை கீறிக் கொள்ளலாம். பல கிளைகளை அமைத்துக் கீறும்போது அவற்றிற்கிடையில் உள்ள தொடர்புகளை கவனித்துக் கொள்ளல் அவசியம். 'மைன்ட் மப் (Mind Map)' இனை எந்த வயதினராலும் கீறிக் கொள்ள முடியும். 'மைன்ட் மப் (Mind Map)' இனை திரும்பத்திரும்ப மீட்டல் செய்வதன் மூலம் நினைவாற்றல் செய்து கொள்ளலாம்.

'மைன்ட் மப் (Mind Map)' இல் பொருத்தமான பல வர்ணங்கள், உருவங்கள், குறியீடுகள், வெவ்வேறு அளவில் உள்ள




- குறிப்பு எடுக்க இருக்கும் விடயத்தை தெரிவு செய்ய வேண்டும்
- குறிப்புக்களையும், ஏற்கெனவே எடுக்கப்பட் சுருக்கமான குறிப்பு இருந்தால் அவற்றையும் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்
- நீங்கள் 'மைன்ட் மப் (Mind Map)' கீறுவதற்காக 'லெற்றர் சைஸ் (Letter Size), அல்லது 'லீகல் சைஸ் (Legal Size), அல்லது 'ஏ 3 (A3 Size) தாளினைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
- பல வர்ண பேனாக்களை எடுத்துக் கொள்ள வேண்டும்.
- தாளின் நடுவில் இருந்து தொடங்க வேண்டும் (விடயத்தைச் சித்தரிக்கும் ஒரு உருவத்தை தாளின் மையப் பகுதியில் குறைந்தது 3 வர்ணங்களால் கீறுவது விரும்பத்தக்கது. படத்தின் அளவு 'லெற்றர் சைஸ் (Letter Size) தாளிற்கு 6ச.மீ 'ஏ 3 (A3 Size) தாளிற்கு 10 ச.மீ,) என்றவாறு இருக்கும்.
- மையப்பகுதியில் இருந்து தடிப்பாக கிளைகளை ஆரம்பித்து பின்னர் தடிப்பு குறைந்து செல்ல வேண்டும்.
- இயன்றளவுக்கு அதிகமாக உருவங்களையும், சொற்களையும், குறுகிய சொற் தொடர்களையும் பாவிக்க வேண்டும்.

'மைன்ட் மப் (Mind Map)' சக்தி வாய்ந்த ஒரு வரைபட நுட்பமாகும். இது மூளையின் முழுச்சக்தியையும் பாவிப்பதற்கான ஒரு கருவியாக அமைகின்றது. இதை நாம் வாழ்வியலில் பல சூழ்நிலைகளில் பாவிக்கலாம். பூர்த்தியாக்கப்பட்ட 'மைன்ட் மப் (Mind Map)' மூலம் ஒரு விடயத்தின் முழுப் பரிணாமத்தையும் காணலாம்.

கிளைவடிவமான கோடுகள் மூலம் அழகு மேம்படுத்தப் படுவதன் மூலம் மனித உள்ளத்தால் கவரப்படச் செய்யும் பொழுது அதன் வலு அதிகரிக்கின்றது. இந்த 'மைன்ட் மப் (Mind Map)' இனை பல மென்பொருள்கள் மூலம் கணினியைப் பயன்படுத்தியும் கீறிக்கொள்ளலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

படம் (Figure 1) இல் ஒருவர் தான் எவ்வாறான பொழுதுபோக்குகளினால் மகிழ்வடைகின்றேன் என்பதை ஒரு 'மைன்ட் மப் (Mind Map)' இல் காட்டியுள்ளதைக் காணலாம். இந்த வரைபடம் ஒரு மென்பொருள் மூலம் வரையப்பட்டுள்ள தாயினும் நாம் கையால் கூட இவ்வாறான 'மைன்ட் மப் (Mind Map)' இனைக் கீறிக்கொள்ளலாம்.

மேலும் கையால் வரையப்பட்ட 'மைன்ட் மப் (Mind Map)' (படம் (Figure 2) ஒன்றையும் நீங்கள் இங்கே காணலாம்.

மிகவும் பயனளிக்கக் கூடிய 'மைன்ட் மப் (Mind Map)' பற்றி அறிந்து கொண்டதன் மூலம் வாசகர்களும் இந்த நுட்பத்தைப் பயன்படுத்தி நன்மையடைவார்கள் என்பது எதிர்பார்ப்பாகும். தொடரும்...



- அகணி -
authorakani@yahoo.com

# பொங்கலோ பொங்கல்

தைபிறந்தால் வழி பிறக்கும்
தைப்பெண்ணாள் பிறந்துவிட்டாள்
நம்பிக்கை மனதில் பிறந்துவிட்டால்
வாழ்வில் ஒளிபிறந்துவிடும்
தைப்பொங்கல் நன்னாளில்
மனம் பொங்க பொங்கல் பொங்கி
மகிழ்ந்திடுவோம்

பச்சையரிசி வாங்கிடுவோம்
பயறும் கொஞ்சம் கலந்திடுவோம்
சர்க்கரை சேர்த்திடுவோம்
பசுப்பாலும் ஊற்றிடுவோம்
முந்திரிகைப்பருப்பும்
முத்தான முந்திரிகை வற்றலும்
தப்பாமல் சொரிந்திடுவோம்
பதமான வேளை வர பாங்காக
இறக்கியே
பகலவனுக்கே முதற் படைத்தே
உற்றார் உறவினருடன்
பரிமாறி உண்டு களித்திடுவோம்



பண்டிகைகள் வருவதெல்லாம்
சண்டை சச்சரவுகள், துன்பங்கள்
யாவும் மறப்பதற்கே
யாவரும் கொண்டாடுவோம்
பொங்கலோ பொங்கல் என்று
கொண்டாடி மகிழ்ந்திடுவோம்.

- நஞ்சி கதிர்

# மகாவம்சத்திலிருந்து சிங்கள தேசியவாதத்தை நோக்கி

அமெரிக்காவில் வாழும் "அர்ஜுனா குணரத்னா" என்ற சிங்கள எழுத்தாளர் மகாவம்சத்திலிருந்து சிங்கள தேசிய வாதத்தை நோக்கி எவ்வாறு சிங்கள மக்களின் உணர்வுகள் கட்டமைக்கப்பட்டு வந்துள்ளன என்பது குறித்து எழுதிய கட்டுரையொன்றினை சாரமாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்படுகிறது.

சிங்கள மக்கள் தம் கற்பனையில் தங்களது வரலாறு தொடர்பான ஐதீகங்களை, உணர்வுகளை எவ்வாறு பற்றிப் பிடித்துள்ளார்கள்? அது அவர்களது ஆழ் மனதில் எவ்வாறு புதைந்து கிடக்கின்றது? என்பவை குறித்துப் பல ஆதாரங்கள் பேசப்படுவது வழக்கம். முக்கியமாக ஆய்வாளர்களால், எழுத்தாளர்களால் இவை குறித்த ஆக்கங்கள் பல்வேறு கோணங்களிலிருந்தும் எழுதப்பட்டுள்ளன.

இவ்வாறான ஐதீகங்களுக்கு அடிப்படையாக முன்வைக்கப்படுபவற்றில் விஜயன், துட்டகைமுனு கதைகள், இலங்கைக்குப் புத்தர் மேற்கொண்டதாகக் கூறப்படும் மூன்று விஜயங்கள் தொடர்பான புராணக் கதைகள் மிகவும் பிரபல்யம் படைத்தவை. இவ்வாறான வரலாற்றுக் கதைகளில் ஆறாம் நூற்றாண் டில் எழுதியதாகக் கருதப்படும் "மகாவம்சம்" அதி முக்கியத்துவம் படைத்தது.

எனவே இதில் சிங்கள மக்களது வரலாற்று உணர்வு (பிரக்ஞை) குறித்துப் பெருமித உணர்வுகளுக்கூடாக அதீதமாகக் கருத்துக் கூறுபவர்கள் அதன் அடிப்படையான அம்சங்களில் பெரும் மாறுதல்களுக் குள்ளாகாமல் அந்த உணர்வு தொடர்வதாகவே எழுதியுள்ளார்கள்.



கடந்த காலம் என்பது நிகழ்கால அரசியல் தேவைகள், சூழல்கள், நிர்பந்தங்கள் என்பனவற்றின் மேல் கட்டியெழுப்பப் பட்டதாகக் கொள்ளலாமா? கடந்த காலம் என்று நாம் குறிப்பிடுகின்ற போது தற்போது நாம் எழுதுகின்ற, எழுத முனைகின்ற கடந்த கால வரலாறு பற்றியதே என்பதை நாம் உணர்ந்து கொள்ளுதல் அவசியமானது.

கிறீஸ்தவம், கத்தோலிக்கம், மேற்குமயமாதல் போன்ற ஆதிக்கங்கள், ஊடுருவல்களுக்கு எதிராகப் பௌத்த சிங்கள மக்களை எழுச்சி கொள்ள வைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட அணுகுமுறையானது அவை பிரச்சினை தராதவையாக மாறிவிட்ட பின்னரும் கூட வேறு வகையான விடயங்களுக்காகத், தேவைகட்காக இதே அணுகுமுறை பயன்படுத்தப்படலாம் என்பதை எமக்குப் புலப்படுத்துகிறது.

பௌத்த மறுமலர்ச்சியின் தந்தை என்று கூறப்படுகின்ற "அநகாரிக தர்மபாலா" பௌத்த மறுமலர்ச்சிக்கான எடுகோள்களை மேற்கு நாட்டவர்களது கீழைத்தேசம் தொடர்பான கருத்துருவாக்கங்களில் இருந்தே பெறுகின்றார்.

பௌத்த மறுமலர்சி என்பதுதான் நவீன சிங்கள தேசியவாதத்துக்கான அடித்தளத்தை இட்டது. ஆனால் சிங்கள மக்களது இந்த வரலாற்று உணர்வானது ஏற்கெனவே உருவாக்கப்பட்ட ஒன்றல்ல. அதேசமயம் மாறிவரும் சமூக, பொருளாதார, வரலாற்றுக் கட்டுமானங்களில் மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்ற வேளையில் ஏற்கெனவே உள்ள அம்சங்களையும் உபயோகித்துத் தற்போது உருவாக்கப்பட்டதே இந்த வரலாற்றுப் பிரக்ஞை (உணர்வு) என்பதாகக் "குணரத்னா" எழுதிய கட்டுரையின் மையப் பொருள் அமைகிறது.

## மகாவம்சம்

நவீன வரலாற்று ஆசிரியர்கள் இதற்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தினை வைத்துக் கொண்டுதான் இலங்கையின் வரலாறு தொடர்பான பொது மக்கள் தளத்திலான உரையாடல்கள் அமைகின்றன.

பாடசாலை மாணவர்கள் - பாடங்கள்
பொது மக்கள், அரசியல்வாதிகள், ஆன்மீக வாதிகள் பயன்படுத்தும் சொல்லாடல்கள்.
நாடகம், இலக்கியம், ஜனரஞ்சக சினிமா வெளிப்படுத்தும் உரையாடல்கள்.

## ஆரிய இனக் கோட்பாடு

இது 19ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட கோட்பாடு. வட இந்தியாவில் இருந்து வந்து குடியேறிய ஆரியர்களது வாரிசுகளாக, வழித் தோன்றல்களாகச் சிங்கள மக்கள் உருவகிக்கப்படுகிறார்கள்.

**நடராஜா முரளிதரன்**

இந்தக் கருத்துருவாக்கத்தைப் பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் தந்தையென்று கருதப்படும் "அநகாரிக தர்மபாலாவே" 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் பிரபல்யப்படுத்தினார். இதற்கான ஆதார ஊற்று மகாவம்சமே. இதன் மூலம் 2500 வருடங்களை உள்ளடக்கிய தொன்மையான வரலாற்றுப் பாரம்பரியத்தைச் சிங்கள மக்கள் இலங்கையில் உரிமை கோர முடிகின்றது.

கர்ண பரம்பரைக் கதைகளின் படி அதற்கூடாக இழையோடி வெளிப்படுத்தப்

தொடர்ச்சி 27ஆம் பக்கம்

HomeLife/Future Realty Inc. Brokerage*
Jeeva Pearl Ratnarajah , Dep-in-Acc
Sales Representative
Cell: - 416.722.5338 Bus: 905.201.9977
Fax: 905.201.9229
•Independently owned and operated

Brimley / Eglinton
Condo. Apartment
2 bedroom with family room, Many upgrades
Close to bank, mall
many parking

Keele / Finch
Business for sale
நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் வியாபார தாபனம் விற்பனைக்குண்டு
Asking price $42,000 + Stock

Brimley / Ellesmere
Condo. Town House
3 story , 3 bedrooms
3 washrooms
Close to Scarborough Town Center
All amenities

Brimley / Eglinton
Lease for Business
2000 Sq. feet



Jane / Finch
Business For sale
Asking $55,000 + stock

# நாரிப்பிடிப்பு

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

ஆண், பெண் எந்த வயதை உடையவராக இருந்தாலும் நாரிப்பிடிப்பால் பாதிக்க இடம் உண்டு. இதற்கு முக்கியமாக முள்ளந் தண்டு எலும்புகளைப்பற்றி அறிவதினால் ஓரளவு நாரிப்பிடிப்பைத் தவிர்க்க முடியும். 33 முள்ளந்தண்டு எலும்புகள் நம்மிடம் உண்டு. இவற்றில் 7 எலும்புகள் கழுத்தின் முள்ளந்தண்டு எலும்புப் பகுதியிலும், 12 முள்ளந்தண்டு எலும்புகள் மார்புமுள்ளந்தண்டுப் பகுதியிலும், இதன்கீழ் நாரியின் முள்ளந்தண்டு பகுதியில் 5 முள்ளந்தண்டு எலும்புகளும் ஒன்றுடன் ஒன்றாக இணைந்து காணப்படுவதுடன் இதன்கீழ் 5 எலும்புகளும் முக்கோண எலும்புகளுடன் இணைந்து கொள்வதுடன் மேலும் இதன்கீழ் 4 எலும்புகளும் சேர்ந்து தொடர்புடன் காணப்படுகின்றன. எனவே இவ் எலும்புகள் யாவும் தளர்வடையாமல் அதனிடையே அமைந்துள்ள தசைநார் களுடன் உறுதியான வலுப்பெற்று இருக்க வேண்டும். இதற்கு உடற்பயிற்சி வயதிற்கும், உடல் நிலைக்கும் ஏற்ப கையாண்டு வருதல் வேண்டும்.

மேலும் இந்நாரிப்பிடிப்பு பிறப்பில் முதுகெலும்பில் உள்ள முன், பின் வளைவு, பக்க வளைவுகளினாலும் அதன் அகத்தேயுள்ள நரம்புகள் அழுத்தப்படுவதி னாலும் வேதனையுடன் கூடிய நாரிப்பிடிப்பு ஏற்படலாம். முள்ளந்தண்டு எலும்புகள் சங்கிலித் தொடர்பு போன்று தசை நார்களுடன் இணைந்து காணப்படுவதுடன் புரதப்பொருட்களும் செறிந்து இருப்பதினால் எலும்புகள் ஒன்றோடு ஒன்று அழுத்தப்பட்டு தாக்கப்படாமல் பாதுகாப்பாக இருக்கின்றது. இருந்தும் அப்பகுதியில் பஞ்சுபோன்ற ஒரு பகுதியும் பொருளும் உண்டு. சில குறைபாட்டினால் நரம்புகளை அழுத்து வதினால் நாரிப்பிடிப்புடன் வேதனையும் கூடிக் காணப்படும்.

இந்நாரிப் பிடிப்பானது உடல் எடை கூடியவர்களையும் உடல் உழைப்பு குறைந்தவர்களையும் தாக்கும் நிலை யுடையது. அதிக நேரம் நிற்கின்றவர் களுக்கு, குனிந்தபடி வேலை செய்வோருக்கு முள்ளந்தண்டு தசைநார்கள் தாக்கப்பட்டு நாரிப்பிடிப்பு வருவதற்கு இடம் உண்டு. எனவே இந்நிலை ஏற்படாதிருக்க குனிந்து வேலை செய்யும் போது பாரமான பொருட்கள் உடல்நிலைக்கு ஏற்ப எடுத்துக் கொள்வது மிக நன்று. அடுத்தடுத்து குனிவதனால் நரம்புகள், முள்ளந்தண்டு நகர்வதினால் அழுத்தப்பட்டு வேதனையுடன் நாரிப்பிடிப்பு தென்படும். எனவே தொடர்ந்து செய்வதை தவிர்ப்பது சாலச்சிறந்தது.

மேலும் உயர்ந்த, தாழ்ந்த ஆசனங் (கதிரை)களில் இருப்பதினால் சிலருக்கு இப்பிடிப்பு வருவதை அறியமுடிகின்றது. உறங்கும் போது கால்களை நன்கு நீட்டிக் கொள்வது நன்மை பயக்கும். ஓரளவு நிமிர்ந்து படுப்பதினால் நாரிப்பிடிப்பு வாரதபடி தவிர்த்துக் கொள்ள முடியும்.

படுக்கும் பொழுது சாய்மனைக்கட்டிலில் படுப்பது நன்றன்று. இதனால் முள்ளந்தண்டு பூட்டு (Join) சவ்வுப்பகுதி திடீரென தாக்கப்பட இடம் உண்டு. இது நாரிப்பிடிப்பை ஏற்படுத்தலாம். எனவே அவரவர் வசதிக்கேற்ப படுத்துக் கொள்ளுங்கள். இதேபோன்று ஸ்பிறிங் கட்டிலும் சிலவேளை தொல்லைகள் கொடுத்து இப்பிடிப்பு ஏற்பட இடம் உண்டு. எனவே படுக்கும் இடம் தளர்வின்றி இறுக்கமாக இருக்க வேண்டும். எனவே படுக்கையில் முதுகுப் பகுதியை வளைந்த படி படுத்துக் கொள்வது தவிர்க்கப்படல் வேண்டும். பெரும்பாலும் கர்ப்பிணித் தாய்மார்கள், வயிற்றுப்பகுதி பருத்தவர்கள் முக்கியமாய் படுக்கும் பொழுது நாரிப்பிடிப்பு ஏற்படாது பாதுகாத்துக் கொள்வது மிகநன்று.

மேலும் படுக்கும்போது ஒன்றைக் கவனிக்க வேண்டும். அதாவது முழங்காலை மடித்து படுக்கும் போது வலித்தன்மை கால் பகுதியில் தென்படலாம். வலியுடன் விறைப்பு நிலையும் ஏற்பட இடம் உண்டு. நிமிர்ந்து படுப்பதனால் இதனைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

ஒருவர் உயரமான இடத்தில் இருந்து குதிக்கும் நிலையில் நாரிப்பிடிப்பும் ஏற்பட இடம் உண்டு. எலும்பு முறிவு ஏற்பட்டு தசைநார்பகுதி நரம்புகள் தாக்கப்பட்டு மேலும் வலியுடன் பிடிப்பும் ஏற்படுவதை நாம் நன்கு அறிவோம். எனவே நாம் எம்மை நன்கு காப்பாற்ற சிறந்த சிந்தனையுடன் செயலாற்ற வேண்டும்.

சிலவகை வியாதிகள் மூலமும் நாரிப்பிடிப்பு வலியுடன் காணப்பட இடம் உண்டு. உதாரணமாக தைரொயிட்டு, சிறுநீரகம் போன்றவற்றில் உண்டாகும் புற்று நோய்கள் முள்ளந்தண்டு எலும்புகளுக்கு பரவுவதினாலும் காசநோய் எலும்பு அழற்சி நோய் என்பவற்றாலும் பெரும்பாலும் நாரிப்பிடிப்பு வரலாம் எனவும் அறியமுடிகின்றது.

சில பெண்களுக்கு மாதவிடாய் நின்ற பின் எலும்பின் அடர்த்தி குறைந்து காணப்படும். அத்துடன் கல்சியச்சத்தும் குறைந்து விடும். அதிக குழந்தைகளைப் பெற்ற தாய்மார்களும் கல்சியம் குறைந்து எலும்புத்தளர்வு ஏற்படுவதினாலும் நாரிப்பிடிப்பும் வலித்தன்மையும் ஏற்பட இடம் உண்டு. எனவே இப்பிடிப்பட்டோர் தவறாது கல்சிய, உணவுச் சத்து பொருட்களைத் தவறாது பாவித்துவருதல் வேண்டும்.

உ+ம் பால், முட்டைக்கீரைவகை, கோழி இறைச்சி, சூப்பு போன்றவற்றை எடுத்து வருதல் நன்றாகும். இளமைக்காலங்களில் வயதிற்கு ஏற்ப எடுத்துவருவதினால் நற்பயன் உண்டு. தாய்மார் குழந்தைகளை பெற்றெடுக்கும் போது முக்கியமாக கால அவகாசம் முக்கியமாக கையாளவேண்டும். குறைந்தது ஒரு குழந்தை பிறந்து ஒன்றரை வருடங்கள் அல்லது இரண்டு வருடங்கள்



கழிந்த பின் மற்றக்குழந்தையை பெற்றுக் கொள்வதினால் நன்மை உண்டு.

பெரும்பாலும் எவ்வயதினரும் தங்கள் வயதிற்கு ஏற்ப உடற்பயிற்சி செய்து வந்தால் இக்குறைபாட்டுடன் நாரிப்பிடிப்பு போன்ற வியாதி நிலையைத் தவிர்க்க முடியும். வயதிற்கும் உடல்நிலைக்கு ஏற்ப பாரமான பொருட்களை தூக்கும் போது மிக அவதானமாக இருக்க வேண்டும்.

மேலும் படிப்போரும் எழுதுவோரும் தங்கள், முகுதுப்பகுதி வளையாதபடி பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இதேபோன்று நீண்ட நேரம் ஒரே இடத்தில் இருந்து எழுதப் படிக்க பார்க்கக்கூடாது. உ+ம் ரி.வி பார்த்தல், வாகனம் ஓட்டுதல், கணக்கு ஆய்வு செய்தல் போன்றவர்கள் கூடிய கவனம் செலுத்துவதினால் நாரிப்பிடிப்பும் அதனால் ஏற்படும் வலி போன்றவற்றில் இருந்து எம்மை நாம் பாதுகாக்க முடியும்.


**வைத்திய கலாநிதி**

**கே.ரி. கோபால்**



D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
*Tel.: 416.939.2013*


### சுயாதீன கலை திரைப்பட மையம் ரொரண்ரோ

### *9th IF Tamil -2011*

ஒன்பதாவது சர்வதேச தமிழ் குறுந்திரைப்பட விழா - படைப்புகளுக்கான கோரல்

சுயாதீன கலை திரைப்பட மையத்தால், கனடாவின் ரொரன்ரோ நகரில் நடத்தப்படும் வருடாந்த சர்வதேச குறுந்திரைப்பட விழாவில் பங்குபற்றுவதற்கான குறுந்திரைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. படைப்புக்கள் ஆங்கில துணைத் தலைப்புக்களை கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.

விழாவில் சிறந்த திரைப்படைப்புக்களுக்கான 3 பரிசுகள் வழங்கப்படும்.
அவையாவன:: $500- $300- $200

படைப்புக்கள் பின்வரும் விதிகளுக்கமைய சமர்ப்பிக்கப்படவேண்டும்:

- படைப்புக்கள் மே 15, 2011க்கு (May. 15, 2011) முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
- படைப்புக்கள் 30 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்களின் மொழி தமிழாக இருத்தல் வேண்டும்.
- படைப்புகளுடன் அதில் பங்குபற்றிய தொழில் நுட்பக்கலைஞர்கள், நடிகர்கள் பட்டியல் இணைக்கப்படல் வேண்டும்.
- படைப்புக்களின் தயாரிப்பாளரின் கையொப்பத்துடன் கூடிய கடிதம் இணைக்கப்படல் வேண்டும்.
- தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது..
- படைப்புக்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:

Tam Sivathasan
Exceutive Director - IAFS
1345 Morningside Ave., Unit # 8, Toronto, ON. Canada, M1B 5K3

மேலதிக தொடர்புகளுக்கு: 1-416-450-6833; 1-416-804-3443;
rathan@rogers.com, iafs@rogers.com, www.iafstamil.com

- Independent Art Film Society of Toronto


நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்-இலவச ஆலோசனை வழங்கப்படும்

**தீராத நோயினால் பீடிக்கப்பட்டுள்ளீர்களா?**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் சர்மத்தின் வெளிப்புறத்தே ஏற்பட்டிருக்கும் மாறாத நாள்பட்ட புண்களுக்கும், சொறியினால் ஏற்பட்டிருக்கும் காயங்களுக்கும் விபத்தினால் ஏற்பட்ட அடிகாய நோவிற்கும் ஏற்ற அனுபவ ரீதியாக கையாண்ட எண்ணையினால் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர தகுந்த அன்ன ஆகாரங்களினாலும் நோய்கள் நிவர்த்தி பெற வழியுண்டு.

இலவச ஆலோசனைகளுக்கு:416.939.2013

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada)
Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician
LG.Ayurvedic Medical Services (SriLanka)


Brand New
Residential & Commercial
CONDOS
For Special
VIP
PACKAGE
WEST VILLAGE CONDO
DOWNTOWN CONDO
REVE CONDO
VENT US CONDO
2011
HAPPY NEW YEAR
GTA SQUARE
SOLARIS CONDO
ONE OLD MILL
MORNINGSIDE HEIGHTS
300 FRONT STREET
www.homelifegtarealty.com
HOMELIFE/GTA REALTY INC.
BROKERAGE, INDEPENDENTLY OWNED AND OPERATED
1711 McCowan Rd., #206 Toronto, ON M1S 2Y3. Bus: 419.321.6969 | Fax: 416.321.6963
145 Traders Blvd., #29 Mississauga, ON L4Z 3L3. Bus: 905.712.2666 | Fax: 905.712.0037
HOMELIFE
HIGHER STANDARDS

# திரை விமர்சனம் - செங்கடல்

இது வழக்கமான தமிழ் சினிமா இல்லை. 'இந்தப் படத்தில் வரும் காட்சிகள் அனைத்தும் கற்பனையே, எவரையும் குறிப்பிடுவன அல்ல' என்று பிரச்சினைக்குரிய களனைப் பற்றி எடுக்கப்படும் படங்களில் பொதுவாகப் போடப்படும் ஆரம்ப அறிவிப்புக்கு மாறாக, 'இந்தத் திரைப்படத்தில் வரும் எந்தக் காட்சியும் கற்பனையல்ல, அனைத்தும் உண்மைச் சம்பவங்களே. இதில் குறிப்பிடப்படும் மனிதர்களும் உண்மையானவர்களே. இந்தத் திரைப்படத்தில் நடித்திருப்பவர்கள் எல்லோரும் ஈழத்து அகதிகளும் தனுஸ்கோடி மீனவர்களும் இராமேஸ்வரப் பொது மக்களும், சில நாடக நடிகர்களுமே!' என்ற அறிவிப்போடுதான் திரைப்படம் தொடங்குகிறது.

ஒரு கரையில் ரத்தம் வடிக்கும் இலங்கைத் தமிழன், மறுகரையில் கண்ணீர் வடிக்கும் தமிழக தமிழன், இடைப்பட்ட நீர்பரப்பில் மீன் பிடிக்கப் போய் உயிரை விடும் தமிழ் மீனவன்... இந்த மூன்று சமூகங்களின் துன்பங்களையும் அதற்குக் காரணமான காரணிகளையும் அடிப்படையாக வைத்து செங்கடல் திரைக்கதை உருவாக்கப்பட்டுள்ளது. தமிழீழப் போராட்டம், அதன் காரணமாக தனுஷ்கோடிக்கு வரும் ஈழத்து அகதிகள், அவர்களுக்கும் ராமேஸ்வரம் மீனவர்களுக்குமான உறவு, ராமேஸ்வரம் முகாம் அகதிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், ராமேஸ்வரம் மீனவர்கள் சிங்கள கடற்படையால் கொல்லப்படுவது, அதனால் உருவாகும் பிரச்சினைகள்... இவைதான் 'செங்கடல்'.

**- பிலிம்நியூஸ் கிருஷ்ணன் -**

கரையில் உயிரைக் காவலுக்கு வைத்துவிட்டு கடலுக்குச் செல்லும் மீனவர்களில் ஒருவரான பட்டாளம், தன் கணவரையும் தன் மூன்று சகோதரிகளின் கணவர்களையும் கடலில் இலங்கை ராணுவத் துப்பாக்கி சூட்டிற்கு பலி கொடுத்துவிட்டு கத்தோலிக்க அகதிப்பணி செய்யும் ரோஸ் மேரி, போரால் மனச்சிதை விற்குள்ளான, மயங்கும் உண்மைகளை முன்னறிவிக்கும் தீர்க்கதரிசியான ஈழத்து அகதி சூரி, ஆவணப்பட இயக்குனர் மணிமேகலை என்று இவர்களைச் சுற்றி கதை பின்னப்பட்டிருக்கிறது. லீனா மணிமேகலை, மீனவர்கள் பற்றி ஆவணப்படம் எடுக்க ராமேஸ்வரம் வந்து ஒரு மாதம் தங்கியிருக்கிறார். அவர் மீது சந்தேகப்படும் காவல்துறை அவரை அழைத்து விசாரிக்கிறது. அவர் பதிவு செய்துள்ள காட்சிகளை வாங்கிப் பார்க்கிறது. காவல்துறை விசாரணை, லீனா பதிவு செய்த காட்சிகள், தனுஷ்கோடி கடற்கரையில் அரங்கேறும் அன்றாட நிகழ்வுகள் என படம் நகர்கிறது. நேர்கோட்டில் பயணிக்காமல், துண்டு துண்டாக காட்டப்படும் காட்சிகள் வழி முன்னும் பின்னுமாக நகரும் கதை மேலே குறிப்பிடப்பட்ட பல பிரச்சினைகளை தொட்டுச் செல்கிறது.



பல காட்சிகள் மேலோட்டமாக இருந்தாலும், சில காட்சிகள் நுட்பமானவை. இந்தியாவில் பதிவு செய்துகொள்ளாமல் தங்கிவிட்ட ஒரு ஈழக் குடும்பம், அப்போதுதான் வந்திறங்கிய அகதியாக பதிவு செய்ய முயலுகிறது. காவல்துறை விசாரணையில், தேசிய கீதம் பாடசொல்லி கேட்கப்படும் போது சிறுமி, இந்திய தேசிய கீதமான 'ஜனகனமண..' பாடுகிறாள். அதனால் விஷயம் விபரீதமாக, "இனிமே பாடமாட்டேன் சார்" என்கிறாள் அவள்.

லீனா மணிமேகலை, ஜெரால்டு, எழுத்தாளர் ஷோபா சக்தி மூவரும் இணைந்து கதை, திரைக்கதை, வசனம் எழுதியுள்ளார்கள். படத்தில் ஒரு அகதியாகவும் ஷோபாசக்தி நடித்துள்ளார். ஷோபாசக்தி பங்களிப்பு செய்திருக்கும் படம் என்பதால் இது விடுதலைப் புலிகளுக்கு எதிரான படமாக இருக்கலாம் என பேசப்பட்டது. ஆனால், அப்படி எதுவும் காட்சிகள் இல்லை. ஆனால், படத்தில் பாத்திரமாக வரும் ஆவணப்பட இயக்குனர் லீனா மணிமேகலை, போலிஸ் கமிஷினரின் ஒரு கேள்விக்கு பதிலாக, சீமான், வைகோ, நெடுமாறன் போன்ற தமிழ் தேசியவாதிகளின் போலித்தனம் பற்றி பேசுகிறார். ஆனால், டெல்லியில் எழுத்தாளர்களுடன் தான் நடத்திய போராட்டத்தை பற்றி மட்டும் உணர்ச்சியுடன் உண்மையானதாக சொல்கிறார். இது படத்தின் ஒரு சிறு காட்சிதான். கவனம் கொள்ள வேண்டிய முக்கிய இழையும் அல்ல. எனினும், லீனா ஏன் இந்தக் காட்சியை வைத்தார் என்பது அவரை சந்தேகம்கொள்ளச் செய்கிறது.

இந்தியாவின் ஆகச் சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்கள் இந்தப் படத்தில் பணியாற்றியுள்ளனர் என்பது இதன் பலங்களில் ஒன்று. 'தேசாடனம்', 'மரண சிம்மாசனம்' போன்ற ஒப்பற்ற மலையாளக் கலைப் படைப்புகளின் ஒளிப்பதிவாளர் எம்.ஜே.இராதாகிருஷ்ணன் தான் இதன் ஒளிப்பதிவாளர். காட்சிகள் ஒவ்வொன்றும் ஒரு அழகிய புகைப்படமாக உள்ளன. படத்தின் பலவீனங்களை இவர்தான் ஓரளவுக்கு சரிகட்டுகிறார் என்றும் சொல்லலாம். வங்காளத்தைச் சேர்ந்த சுபதிப் சென்குப்தா ஒலி வடிவமைப்பு செய்துள்ளார். ஏழு முறை இந்திய தேசிய விருது பெற்ற ஸ்ரீகர் பிரசாத் படத் தொகுப்பு செய்துள்ளார். எல்.வைத்தியநாதனின் மகன் எல்.வி.கணேசன் இசையமைத்துள்ளார். எல்லோருமே பெரிய கலைஞர்கள். தங்கள் சிறந்த உழைப்பைத் தந்திருக்கிறார்கள். ஜானகி சிவக்குமார் (தோல்பாவை திடேட்டர்ஸ்) இப் படத்தைத் தயாரித்துள்ளார்.

பெரிய கலைஞர்கள், தமிழ் சினிமா தொடாத களம் என்றாலும் சரியாக சமைக்கப்படாத காரணத்தால் ஆங்காங்கே மனதைத் தொடும் சில காட்சிகள் தவிர்த்துவிட்டுப் பார்த்தால், படம் பார்த்து முடிக்கும்போது எதுவும் மனதில் நிற்கமாட்டேன் என்கிறது. ஒரு மணி நேரம் நாற்பது நிமிட படம். தொடங்கி அரை மணி நேரத்திலேயே எப்பொழுது முடியும் என்ற ஏக்கத்தை உருவாக்கி விடுகிறது. நிச்சயமாக சாதாரண சனங்கள் அரங்கத்துக்கே வரமாட்டார்கள்.



படத்தைப் பார்த்த தமிழக தணிக்கை குழு உறிப்பினர்கள், 'இந்தப் படத்துக்கு தணிக்கைச் சான்றிதழ் தரமுடியாது. இது இந்திய இறையாண்மைக்கு எதிரான படம்' என்பதாகக் கூறி, படத்துக்கு தடை விதித்துள்ளனர். தமிழக தணிக்கை குழு, ஏற்கெனவே இதே களனைப் பின்னணியாகக் கொண்ட 'காற்றுக்கென்ன வேலி' படத்தை தடை செய்தது குறிப்பிடத்தக்கது. கருணாநிதி, சோனியா காந்தி பெயர் குறிப்பிடப்படுவது தவிர வேறு பெரிய பிரச்சினைகள் இல்லை. இயக்குநர், இந்தப் பெயர்களை நீக்கிவிட்டு சான்றிதழுக்கு முயற்சிக்கலாம். அல்லது, வெளியானாலும் இந்தப் படத்தை மக்கள் பார்க்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையுடன் தணிக்கை அதிகாரிகள் சான்றிதழ் கொடுக்கலாம். இரண்டு தரப்பினரும் இதற்கு தயாராக இல்லாத நிலையில், இந்தப் படம் வெளியாகி பேசப்படுவதைவிட, சான்றிதழ் மறுக்கப்பட்ட காரணத்தாலேயே அதிகம் பேசப்பட வாய்ப்புள்ளது.

செங்கடல் - துணிச்சலான ஒரு நேரடி அரசியல் தமிழ் சினிமா. ஆனால், மக்கள் பார்க்கும்படி இல்லை என்பதுதான் துரதிஷ்டம்!



உளம் கனிந்த
பொங்கல் நல்வாழ்த்துக்கள்




உங்கள் அபிமான தமிழ்க்கடைகளில்
நிரு பொங்கல்
புதினப்பொதிகள் கிடைக்கும்

நிரு
பிராண்ட்

# ஈழத்துக் கிராமியப் பாடல்களில் காதல்

## கிராமிய இசையும் காதலுணர்வின் வெளிப்பாடும்-3

- த. சிவபாலு -

ஈழமும் இசைத்துறைக்குத் தன்னாலான பங்களிப்பைச்செய்து வருகின்றது. பிரபலமான நவீன பாடல்துறைக்கு தமிழில் அடியெடுத்துக்கொடுத்தவர்கள் இலங்கையரே எனின் தவறாகாது. அமுதன் அண்ணாமலை, ஏ.எம்.இராசா, மனோகரன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். மட்டக்களப்பு நாட்டார் பாடல்கள் மிகவும் இரசனை மிகுந்தவை. பண்ணோடு பாடும் பாங்கு இனிமை பயப்பது. காதல் நயம் சொட்ட நெல் வயல்களில் காவல்புரியும் இரவு வேளைகளில் பொழுதுபோக்காகப் பாடப்படும் நாட்டார் பாடல்கள் மட்டக்களப்பு, வன்னிப் பிரதேசங்களின் சிறப்புப் பெறுகின்றன. அருகருகே அமைந்துள்ள காவல் நிலைகளில் இருந்து விலங்குகளை விரட்டுவதற்காக ஒலி எழுப்பும் நோக்குடன் இருவரிடையே நிகழும் பாடல்கள் மிகவும் இன்பம் பயப்பதாக அமைவது குறிப்பிடத்தக்கது. இவ்விதமான இன்பக் கிழுகிழுப்பை ஏற்படுத்தும் தமிழ் நாட்டார் பாடல்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர், ஸ்லாமியர் என்ற வேறுபாடு இன்றி மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.



தனது விருப்பினை பாடல் மூலம் தன் இதயத்தில் பதித்தவளுக்குத் தெரியப்படுத்துவதாக அமைவது சில பாடல்கள். காதலர்கள் தங்கள் மனத்திலுள்ளவற்றை ஒளிவு மறைவின்றிக் காட்டுவது போன்றது கிராமியக் காதல் பாடல்கள். தான் கொண்ட காதலை வெளிப்படையாகவே காட்ட விரும்புகின்ற காதலன் அவளிடம் தனது விருப்பினைக் கூறி அதற்கான சம்மதத்தைப் பெற விளைகின்றான். அவன் அவளை அழைக்கின்றான். ஆனால் எப்படி அழைப்பது என்பதில் அவளுக்கு சற்று தடுமாற்றம். என்ன சொல்லிக் கூப்பிட தங்கை என்றால் அது தவறு, மனைவி அல்லது துணைவி என்று அழைக்க இன்னும் அது கைகூட வில்லை. எனது எதிர்கால மனைவி என்பதா? அன்பே என்பதா எப்படி அழைக்கலாம், அவளிடமே கேட்டுவிடுவோமே என்னும் முடிவுக்கு அவன் வருகின்றான். உன்னை எப்படி எல்லாமோ அழைக்கலாம். ஆனால் உனது விருப்பம் எதுவோ அதனை எனக்குச் சொல் என்பதாக அவனது வினா அமைகின்றது: 'வாழைப்பழம் எந்தன் வலதுகையில் சர்க்கரையே ஏலம் கராம்பே உன்னை என்ன சொல்லிக் கூப்பிடட்டும்?'

எனது அன்பிற்குரியவளே நீ இன்றி என் வாழ்வில்லை, என்னால் உன்னைப் பிரிந்து வாழ முடியவில்லையே என்ற ஆதங்கத்தை அவளிடம் தெரியவைக்கும் பாணியில்: "தங்கக் கிளியே என்ரை தாய்மாமன் ஈன்றகண்டே மையிட்ட கண்ணே உன்னை மறந்திருக்கக் கூடுதில்லை" எனவும் 'மானே மயிலே மாமி பெத்த மரகதமே தேனே திரவியமே என்மனது ஏங்குதடி உன்னை நினைச்சு" எனவும் 'குஞ்சு முகமும் உந்தன் கூர்விழுந்த மூக்கழகும் நெற்றி இளம்பிறையும் கண்ணே நித்திரையில் தோணுதுகா" எனவும் 'காலிவிளைபாக்குக்கும் கமுதாவளை வெற்றிலைக்கும் ஏலம் கிராம்புக்கும் ஏற்றதுகாண் உன் எழில் வாய்" எனவும் தனது மனதில் அவள் உடல் அங்கம் அனைத்தும் பதிந்துள்ளதை எடுத்துக் காட்டி அவளை அணு அணுவாக ரசிப்பதனைக் குறிப்பிட்டு அவளின் அழகினை விமர்சிக்கும் விமர்சகனாகவே மாறிவிடுகின்றான். பல பக்கங்களில் அன்றி சில குறிப்புக்களிலேயே அவளின் அழகை வர்ணிக்க இத்தகைய பாடல் வரிகள் மிகையாக அமைகின்றன.

தனது காதலியிடம் தான் வருவதற்கு உள்ள பல தடைகள் இடைவினைகள் பற்றிக் குறிப்பிடுகின்றான். உன்னிடம் ஓடோடி வர எனக்கு ஆசைதான். ஆனால் வரமுடியவில்லையே, இடையே பல தடைகள் காணப்படுகின்றனவே. இவற்றை எல்லாம் தாண்டி வரமுடியவில்லையே. எங்கும் ஒரே தடையாக முட்டுக்கட்டையாக அதாவது உன்னை யாரும் நெருங்கமுடியாத அளவிற்கு பாதுகாப்பாக வைத்திருக்கிறார்களே உனது பெற்றோரும் சகோதரங்களும். நான் எப்படி வருவதென்று தெரியவில்லையே என்ற குறிப்பை அவளுக்கு உணர்த்தி அவளை வழிசமைக்கும் வண்ணம் கேட்கின்றான்.

தொடரும்....

விளம்பரம் பத்திரிகையின் 2011ஆம் ஆண்டின் ஒன்றுகூடல் கடந்த ஜனவரி 08, 2011, சனிக்கிழமை GTA Square இல் அமைந்திருக்கும் MAXX Family Restaurant இல் சிறப்புற நடைபெற்றது. எழுத்தாளர்கள், நண்பர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர் கலந்து சிறப்பித்தனர்.



Traffic Tickets
Criminal Matters
Summary
வாகன விபத்து
Motor Vehicle Accidents
SKT PARALEGAL SERVICE
Kalakalappu Theesan
Member of Law Society of Upper Canada
S.K. Theesan 416-803-5296
எஸ்.கே.தீசன்
sktheesan@gmail.com

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED
HomeLife/GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga -905.712.2666

# மதியிறுக்கம் (Autism) என்னும் குறைபாட்டுடன் வளரும் பிள்ளைகளின் வாழ்வுக்கு வழிகாட்டுவோம்! வாரீர்!!

## கனடிய தகவல் தொடர் 140

**What is 'Autism spectrum disorder' (ASD)?**

ASD is pervasive neuro developmental disorder characterized by
- communication difficulties
- social impairments
- restricted / repeated stereotyped patterns of behavior

அந்தக்குழந்தைகளும் சராசரி ஒரு மனித ஜீவாத்மாவாக, இவ்வுலகில் பிறந்து எங்கள் சமூகத்தில் வளர்ந்து வருகின்றனர்.

• அவர்களினால் தங்கள் உள்ளத்து உணர்வுகள் எதனையும் வார்த்தையால் தெரிவிக்கத்தெரியாது! ஏனையோரின் உணர்வுகள், அவர்கள் சொல்லும் வார்த்தைகள், உணர்வுகள் எதனையும் புரிந்து கொள்ளவும் தெரியாது.

• பெற்றோர், சகோதரர், உறவுகள், நண்பர்கள் என எவருடனும் கூட்டாக சேர்ந்து பழகத்தெரியாது. ஏதோ ஒரு தனி உலகில் எந்த நேரமும் சஞ்சரித்துக் கொண்டேயிருப்பார்கள்.

• சில வார்த்தைகள், வசனங்களை திரும்பத் திரும்ப கூறிக்கொண்டேயிருப்பார்கள்.

அத்தகைய குறைபாட்டுடன் பிறந்து வளர்ந்து வரும் பிள்ளைகளையே ஆங்கிலத்தில் (Autism) என குறிப்பிடப்படுவதுண்டு.

சரியான தமிழ் மொழி பெயர்ப்பில் இம்மனித குறைபாட்டினை சொல்வதானால் 'மதியிறுக்கம்' என சென்னை கீழ்ப்பாக்கம் குழந்தைகள் மருத்துவமனையில் இத்தகைய 'குறைபாடுகளுடன் உடைய குழந்தைகளுக்கு சிகிச்சை வழங்கும் டாக்டர் கார்த்திகேயன் குறிப்பிட்டுள்ளார்.

குழந்தை இன, மொழி பேதமின்றி கனடாவில் மட்டும் வந்து பிறக்கின்றன எனவும் பொதுவாக பெண் பிள்ளைகளை விட ஆண்பிள்ளைகளே நான்கு மடங்கு அதிகமாக பிறந்து வளர்ந்து வருகின்றனர் எனவும் புள்ளிவிபர அறிக்கைகள் தெரிவிக்கின்றன.



'மதியிறுக்கம்' (Autism) என்னும் குறைபாட்டுடன் சுமார் 165 இக்கு ஒரு முதல் மூன்று வயதிற்கு இடையிலேயே இக்குறைபாட்டுடன் இயற்கையின் நியதி என பிறந்த குழந்தைகளை அவர்களின் நடத்தையிலிருந்து தெளிவாக இனம் கண்டுவிடலாம்.

இந்த குறைபாடு என்பது மிக படுமோசமாகவும் அவர்களில் தெரியும்! குறைபாடு என்பது குறைந்தளவிலும் காணப்படும். அதாவது இந்த 'மதியிறுக்கம்' என்ற குறைபாடு பல கோணங்களில், பல வடிவங்களில், மனிதாபிமானம் உள்ளவர்களின் மனங்களை அணு அணுவாக அவர்களை பார்க்கும் நேரமெல்லாம் கொல்லும் அளவுக்கு குறைபாடு என்பது இருக்கும்.

***Common Traits of Autism***
- Avoidance of eye contact
- Odd repetitive motions
- Almost always on their own (does not mean they prefer it)
- Aversion to cuddling
- Resistance to change
- Inappropriate attachment to objects
- Uneven gross / fine motor skills
- Echolalia repeating words

**பொதுவாக அவர்களின் சுபாவம் எப்படியிருக்கும்?**

• நேருக்கு நேர் முகத்துக்கு முகம் பார்த்து பேசவோ கதைக்கவோ மாட்டார்கள்.

• ஒன்றோடு ஒன்று தொடர்புகள் இல்லாத செயல்பாடுகளாகவே அவர்களின் செயல்பாடுகள் அசைந்து கொண்டிருக்கும்.

• தனிஉலகில் சஞ்சரித்துக் கொண்டேயிருப்பார்கள்.

• அர்த்தமில்லாமல் ஏனையோரை அன்புக்காக ஏங்கி கட்டியும் பிடிப்பார்கள்.

• தங்கள் குறைபாடு என்ற சுபாவத்திலிருந்து மாறுதல் அடைய மாட்டேன் என்ற மாதிரியே அவர்களின் பிடிவாதம் அவர்களை அறியாமல் அவர்களிடமிருந்து வெளிவரும்.

• அர்த்தமேயில்லாது ஏதோ ஒன்றினை செய்து கொண்டேயிருப்பார்கள். சொன்ன 'சொல்' அல்லது 'வசனத்தினை' திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டேயிருப்பார்கள்.

• மற்றவர்களின் உணர்வுகள், சிந்தனைகள் எதுவும் அவர்களுக்கு புரிந்துகொள்ளுதல் என்பது அவர்களுக்கு கடினமானதாகவே யிருக்கும். இன்னொருவரின் குரலினால் அல்லது தமது முகபார்வையினால் எதனை குறிப்பிட்டாலும் அதனை புரிந்துகொள்ளத் தெரியாத ஒரு சுபாவம் என்றும் காணப்படும்.

• 'நான்' 'எனக்கு' என்று நம்மை நாமே குறிப்பிடும் வார்த்தைகளை அவர்களினால் புரிந்து கொள்ளத்தெரியாது. அந்த இடத்தில் தங்களின் பெயரினையே குறிப்பிடுவார்கள். தொடுதல் உணர்வுகள் என்பது கூட குறைய என இருக்கும். ஏனையோர் தங்களில் தொடுவதனை பாரதூரமாகவும் எடுப்பார்கள். சிலர் அதனை விரும்பியும் ஏற்றுக்கொள்வார்கள்.

மேற்கொண்ட குறைபாடுகளில் கனடாவில் வளரும் பிள்ளைகளில் ஓரளவேனும் மாற்றத்தினை ஏற்படுத்த தெற்காசிய மதியிறுக்க விழிப்புணர்வு மையம் பின்வரும் பயிற்சி நெறிதிட்டங்களை வழங்கி வருகிறது. அவையாவன பின்வருமாறு.

**நடத்தைகள், சுபாவங்களில் ஆய்வும் அதில் மாற்றத்தினை ஏற்படுத்தும் பயிற்சிகளும்** (ABA Therapy Applied Behavioral Analysis)

இத்துறையில் பயிற்சி பெற்று நிபுணத்துவம் வாய்ந்த பயிற்சியாளர் ஒவ்வொருவராக தனித்தனி இம் 'மதியிறுக்கம்' என்னும் குறைபாட்டுக்கு உட்பட்டவரில் நல்ல நடத்தை எது? துர் நடத்தை எது? என்பதனை மதிப்பீடு செய்வர். இங்கு நடத்தையின் சுபாவம் என்பது ஒவ்வொருவரினதும் ஒவ்வொரு கோணங்களில் இருக்கும். 'நடத்தைகளின் மாற்றம்' (Behavioral Changes) என்பது படிப்படியாகவே, மெதுமெதுவாக ஒரு மாற்றத்தினை கொண்டு வர முயற்சிப்பார். ஒரு கிழமைக்கு சுமார் 40 மணி நேரம் பயிற்சி இங்கு தேவைப்படும் என்கின்றார் இந்நிறுவனத்தில் ஒரு சேவை வழங்கும் தொண்டராக பணிபுரியும் இளைய தலைமுறையின் மருத்துவர் டாக்டர். சிவஜன் சிவபாலன் அவர்கள். தொடரும்....

### 'தெற்காசிய மதியிறுக்க விழிப்புணர்வு மையம்'
(South Asian Autiness Awareness Centre)

அலுவலகம் - 310 - 80, Acadia Ave., Markham, ON L3R 9V1
Phone - 416.824.8847 E.mail - info@saaac.org
Website - www.saaac.com Founder excutive director - Mrs. Geetha Moorthy

இந்நிறுவனம் கனடாவில் வசிக்கும் தெற்காசிய சமூகத்தில் குறிப்பாக இலங்கைத் தமிழர்களின் குடும்பங்களில் 'மதியிறுக்கம்' (Autism) என்னும் குறைபாட்டுடன் ஏராளமாக பிறந்து வளரும் பிள்ளைகளை ஒன்று சேர்த்து அவர்களின் வாழ்வில் ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்தி அவர்களையும் இந்த சமூகத்தில் சுயாதீனமாக வாழவைப்பதற்காக 2008ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஒரு லாபகரமற்ற தர்மஸ்தாபனம்.

இந்நிறுவனங்களின் ஆதரவுடன் இவர்களுக்கான பயிற்சிநெறித்திட்டங்கள் உளவியல் துறை, மருத்துவ துறைகளில் நிபுணத்துவம் பெற்ற தொண்டர்களினால் பின்வரும் இரு இடங்களிலும் நடத்தப்படுகின்றது.

1. ஶ்ரீ ஐயப்பன் ஆலயம், 635 Middlefield Road, Scarborough, ON
2. Markham Civic Centre, 101, Town Centre Court, Markham, ON

இங்கு தேவை: இவ் ஒருங்கிணைப்புக்கும் பணிகளுக்கும் நிதி தேவை! அதற்காக இரண்டாம் வருடமாக நடத்தப்படுவதே **"நிதி சேகரிப்பு இராப்போசன நிகழ்வு"**
(***Fund raising gala dinner dance***)

காலம் - மார்ச் 05, 2011
இடம் - Platinum convention centre, 17, Vinyl Court, Woodbridge, ON L6R 3G8
விலை - ஒரு நபருக்கு $50 டொலர் மட்டுமே Raffle ticket $5 டொலர்.

இங்கு தேவை: பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் வாழ்வுக்கு உங்கள் கை கொடுப்பு! தங்கள் உதவிகள்!
தங்கள் ஆளுமைக்கு ஏற்ற வழிகளில் தொடரட்டும் உதவிகள்!

தொடர்புகளுக்கு - கீதா - 416.824.8847 றோகன் ஜோர்ஜ் - 647.202.5404
ஜோன் சபாரத்தினம் - 416.450.1690
ஏனெனில் இந்த பாதிப்பின் துடிப்பில் துயரும் தமிழ் குடும்பங்கள் ஏராளம்! இவ்விழிப்புணர்வும் சேவையும் கனடாவில் உள்ள தமிழர்களில் ஆரம்பித்து தாயக மண் வரை தொடரவேண்டும்.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

# BASEMENT RENT

**BELLAMY & PANDORO CIR.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. February 01, 2011. Students or small family preferred.
416.438.2559 / 416.454.3469

**DUFFERIN & STEELES**
1 Bedroom bsmt apt. for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to all facilities. Avail. February 01, 2011.
905.532.9204 / 416.728.4891

**MORNINGSIDE & NIGHTSTAR**
2 Bedroom walkout bsmt for rent. Parking, laundry. Close to TTC... Avail. immediately.
416.299.7208 / 416.871.8627

**MORNINGSIDE & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, school. Avail. Anytime. 1 or 2 person or working people preferred. தொடர்புகளுக்கு: 416.841.2232

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, mall. Avail. February 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.523.1312

**MIDLAND & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. February 01, 2011.
416.750.9138 / 647.401.9423

**MEADOWALE & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Utilities included. Close to TTC, school, University, stores, etc.
தொடர்புகளுக்கு: 416.431.5078

**MCCOWAN & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. February 15, 2011.
416.431.2922 / 416.846.7973

**MIDLAND & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, kitchen, living room.Close to bus, school, stores. Avail. February 01, 2011. தொடர்புகளுக்கு: 416.269.1332

**MCCOWAN & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC, mall, hwy 401. Avail. immediately. தொடர்புகளுக்கு: 647.273.2883

**FINCH & STAINS**
One Bedroom bsmt. for rent. Parking, cable, laundry. Close to TTC & etc . Avail. immediately. Single family preferred.
416.284. 0712 / 416.906.5353

**NEILSON & SHEPPARD**
மூன்று அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Bils included. Close to school, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.286.1535

**16TH AVE. & MARKHAM**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 416.575.5055

**MARKHAM & 16th Avenue**
சந்திப்புக்கு அருகில் Newly finished 2 bedroom bsmt for rent. Sep. entrance (in garage side), laundry. Close to Nofrills, food basic, go station, school, Tamil stores, etc. Avail. anytime.
905.209.1421 / 416.878.3789

**MARKHAM & DENISON**
1 bedroom bsmt for rent. Sep. entrance. Parking, laundry. Close to school,bus, shopping, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.280.6145

**MARKHAM & HIGHGLEN**
Newly finished bsmt at Middlefield & Highglen. 2 Bedrooms, 1 washroom, kitchen, laundry, Sep. entrance. All necessities within walking distance: high school, public school, mall, banks. தொடர்புகளுக்கு: 647.287.2807 / 905.554.1931

**FINCH & TAPSCOTT**
2 Bedroom bsmt for rent. Sept. entrace. Parking, Tamil TV, bills inclu. Close to TTC, School, Malvern mall. Avail. immediately.
416.754.2002 / 416.688.8364

**KENNEDY & FINCH**
Newly renovated 2 Bedroom bsmt for rent. Sept. entrance. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.568.6407

**MARKHAM & SHEPPARD**
2 Bedroom walk-out bsmt for rent. Parking, laundry. Close to TTC, school, shopping, etc. Avail. immediately.
905.683.5105 / 416.277.9044

**NEILSON & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, kitchen, laundry. Close to TTC, malvern mall, school. No smoking. Avail. immediately. 416.724.8727 / 647.280.6163

**KENNEDY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to all facilities. Avail. immediately. தொடர்புக்ளுக்கு:
416.879.7881 / 416.750.0685

**MCCOWAN & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Parkig, cable. Close to bus, school, shopping, etc. Ladies or couple விரும்பத்தக்கது. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.837.0653

**KENNEDY & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to ttc, subway, school, church, bank, shopping, etc. Avail. immediately. தொடர்புகளுக்கு:
416.755.1334 / 416.903.9053 / 416.953.7672

**MORNINGSIDE & OLDFINCH**
2 bedroom bsmt for rent. Sep. entrance. Parking. Close to school, ttc, etc. Avail. immediately. தொடர்புகளுக்கு:
647.350.1515 / 647.836.0654

**MCCOWAN & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.565.3209

**KENNEDY & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Parkig, cable. Close to Kennedy subway and all other facilities. Ladies or couple விரும்பத்தக்கது. Avail. from January.
தொடர்புகளுக்கு: 416.669.4210

**MCCOWAN & DENISON**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to ttc, shopping, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.835.1303

**MARKHAM & 14TH AVE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to YRT, mall. Avail. immediately.
905.201.6619 / 647.233.7316

**DONMILLS & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC. No smoking & No drink Very strictly. Rent $300. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.342.3313

**STAINS & MORNINGSIDE**
2 Bedroom walkout bsmt for rent. Sep. entrance. Large kitchen, washroom, dining room, parking, laundry, cable. Close to TTC, mall, etc. Avail.immediately.
416.315.4653 / 416.297.9974

**MORNINGSIDE & FINCH**
Bsmt room & upper floor rooms for rent. Close to all facilities. முழுநேர அல்லது பகுதிநேர வேலை ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 647.857.8548

**MCCOWAN & EGLINTON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, shopping, school. Avail. immediately.
416.264.6253 / 416.834.3677

**HIGHGLEN & MCCOWAN**
Newly renovated 2 Bedroom walkout bsmt for rent. Dishwasher included. Close to 3 different high schools & also Elementary school, TTC. Avail. immediately. Price negotiable.
தொடர்புகளுக்கு: 416.737.4807

**McCOWAN & STEELES**
1 Bedroom bsmt. for rent. Parking, cable, laundry. Couple or ladies preferred. Close to TTC, YRT, shopping centre, school, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.903.2437

**MCCOWAN & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable, internet. Close to TTC, mall, tamil stores, hospital, subway. தனிநபர் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 905.554.2496

**WARDEN & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, kitchen, living room, laundry, cable & internet including. Close to TTC, hwy (401, DVP). Avail. immediately. பெண்கள் மட்டும்.
தொடர்புகளுக்கு: 416.997.6575

**MCNICOLL & MCCOWAN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Very strictly No smoking, No drink & Clean. Rent $650 & 40% utilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.342.3313

**BRIMLEY & LAWRENCE**
2 Rooms for rent in a basement. Sep. entrance & parking, laundry. Close to TTC, stores & other facilities. Very quiet place. Avail. Immediately. Bachelor preferred.
தொடர்புகளுக்கு: 416.264.8177

**SHEPPARD & MORNINGSIDE ROUGH RIVER**
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, laundry. Close to TTC & shopping, etc . Avail. immediately. Couple or students preferred.
416.286.1755/416.220.5967

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: 416.551.8379

# HOUSE FOR RENT

**MARKHAM & MCLEVIN**
3 Bedroom house with 1 bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC, school, mall, banks. Avail. March 01, 2011. Low rent.
தொடர்புகளுக்கு: 905.471.1986

**Brimley/Eglington**
Bungalow House for Rent (Main Floor)
3 Bed room, Living Room, Kitchen, Full wash room, Washer and Dryer many more... No smoking, 3 Parking, Close to TTC (Kennedy Subway), School & all Amendment. Quiet place. Avail. Feb. 01, 2011.
Rent $ 1100 + utilities.
Tel: 416.265.9138 or 416.271.8467

**MCCOWAN & ELLESMERE**
2 bedroom House for Rent with basement. Parking, laundry. Close to TTC, Scarborough Town Centre, school, all other facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.843.2019

**NEILSON & FINCH**
4 Bedroom House + 1 Bedroom bsmt for rent. Close to all facilities. Avail. immediately. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 647.408.7662

# HOUSE FOR SALE

**DANFORTH & EGLINTON**
4 bedroom new Townhouse for sale.
Close to bus, 5 min. to Kennedy subway, stores. தொடர்புகளுக்கு: 647.960.4120

# HOUSE FOR SALE

மானிப்பாயில் 3 3/4 பரப்பு காணியில் உள்ள சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. கோவில், வைத்தியசாலை, பாடசாலை என்பன அருகில் உள்ளன.
தொடர்புகளுக்கு: 011.94.1.1250.3018
mohan1821@hotmail.com

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**

மேலும் பக்கங்கள் 25, 26

## ROOM RENT

**BRIMLEY & STEELES**
1 Room for rent. Close to TTC, tamil stores. Avail. February 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.844.7550

**MIDDLEFIELD & FINCH**
1 Room for rent.Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.332.2840

**WARDEN & FINCH**
ஒரு அறை வாடகைக்கு உண்டு. Washroom, laundry, cable, parking avail. Close to TTC, shopping, etc. Avail. immediately
தொடர்புகளுக்கு: 416.495.9775

**MARKHAM & STEELES**
4 படுக்கை அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Close to TTC, YRT, walmart, etc. மாணவர்கள் அல்லது பெண்கள் விரும்பத்தக்கது. Avail. immediately
தொடர்புகளுக்கு: 416.726.0897

**MARKHAM & ELLESMERE**
One Room for rent. Close to all facilities. Avail. immediately. Boys preferred.
தொடர்புகளுக்கு: 416.566.1918

**MARKHAM & SHEPPARD**
3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall.
416.335.5242 / 416.820.1999

**MARKHAM & DENISON**
Room for rent in main floor. Parking, cable & laundry. Close to TTC, YRT, Mall & school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.339.1062

**NEILSON & FINCH**
**MORNINGSIDE & FINCH**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.351.0422

**KENNEDY & LAWRENCE**
Rooms available in main floor. Bsmt rooms available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

**MARKHAM & STEELES**
1 Bedroom for rent. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு:
905.294.7026 / 647.703.1343

**LAWRENCE & PHARMACY**
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt இல் சகல வசதிகளுடன் உண்டு. குறைந்த செலவில் Tvi, Sun TV, Vijay TV, internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 416.288.0303

## ஆடைகள் விற்பனைக்கு

**புதுவருட புதிய வருகை**
நவீன Design wedding sarees, heavy work sarees, calcutta designer sarees, hand work banarasi sarees, masakali hand work patiala, fancy hand work choli set. என பல வகையான தெரிவுகள். ஒரு முறை நேரில் வந்து பார்த்தால் புரியும்.
416.400.7398 / 905.201.6791

மேலும் பக்கங்கள் 24, 26

## CONDO. FOR RENT

**MCLEVIN & NEILSON**
1 Bedroom condo. for rent. Close to Malvern mall, bus, banks, etc.
416.402.3947 / 647.219.5266

**MCCOWAN & HWY 401**
2 Bedroom luxury condo. for rent. 2 Washrooms. Parking included. Close to TTC. Avail. February 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.910.1303

**KENNEDY & EGLINTON**
**Rainbow Village**
2 Bedroom + 2 Washroom condo for rent. Close to TTC, Kennedy Subway, tamil stores. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.267.5085

## SPACE FOR RENT

**KENNEDY & LAWRENCE**
Office, நடனவகுப்புக்கள்,Tution போன்றவற்றை நடத்தக்கூடிய இடம் ஒன்று வாடகைக்கு உள்ளது.
416.755.8354 / 647.836.9255

KKM Auto Maintance Inc. கார் Wash பண்ணுவதற்கு ஓர் இடம் வாடகைக்கு உண்டு.
416.755.8354 / 647.836.9255

## ஆசிரியர் தேவை

**MIDLAND & FINCH** சந்திப்பிற்கு அருகாமையில் வீட்டிற்கு வந்து Math & English பாடங்களும், வீட்டு வேலைகள் (Home Work) போன்றவற்றை படிப்பிப்பதற்கும் கனடாவில் பட்டம் பெற்ற ஆசிரியர் அல்லது ஆசிரியை தேவை.
தொடர்புகளுக்கு: 647.701.1666

## CARS FOR BUY & SELL

2005 Corolla, 2001 Toyota Sienna, 1997 Honda Civic, 1995 Honda Accord கார்கள் விற்பனைக்கு உண்டு. கார்கள் வாங்குவதற்கும் விற்பனைக்கும் உண்டு. அத்துடன் **Van** வாடகைக்கு ஓட்டப்படும்.
அழையுங்கள் : **416.625.4146**

## வேலைக்கு ஆள் தேவை

**பிள்ளையை அழைத்து வருதல்**
5 வயது சிறுபிள்ளையை 5 நாட்களும் Kennedy / Denison பகுதியில் உள்ள பாடசாலையிலிருந்து வீட்டிற்கு அழைத்து வருவதற்கு உதவியாளர் தேவை.
தொடர்புகளுக்கு: 905.604.2540

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைப் பிறந்து தற்போது கனடாவில் பணிபுரியும் 34 வயதுடைய ஏழில் செவ்வாய் உடைய மணமகனுக்கு கனடா அல்லது இலங்கையிலுள்ள மணமகள் தேவை.
416.439.9156 / 416.269.4729

உயர்குல சைவவேளாளர் 30 வயது ஆண் தாதி கிறிஸ்தவ மணமகனுக்கு கிறிஸ்தவ மணப்பெண் தேவை.
தொடர்புகளுக்கு: 647.342.3313

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஐயனார் கோவிலடியில் சுமார் 3 பரப்பு காணி விற்பனைக்கு உள்ளது. கிணறு மற்றும் தண்ணீர் தாங்கியுடன் உள்ளது. யாழ்ப்பாணம் டவுன் ரவுனிலிருந்து 9 நிமிட தூரத்தில் உள்ளது. மேலதிக தொடர்புகட்கு 416-450-6833 அல்லது 905-887-7457.

**COMPUTER REPAIR**
+ கணனி திருத்தவேலைகள்
+ கணனி தேவைகள்
+ அடிப்படை கணனி பயிற்சி
+ இலவச ஆலோசனைகள்



**Pro-Win Computers**
**919 Ellesmere Road, Unit - 302**
**416-879 7489 / 647-340 5568**
**(Kennedy & Ellesmere)**

## சங்கீத வகுப்பு

Ajax, Markham, Scarborough, Downtown ஆகிய இடங்களில் Swaraganam Academy ஆசிரியை வாசுகி சிகாமணி அவர்களால் சங்கீத வகுப்பு நடத்தப்படுகின்றது.
தொடர்புகளுக்கு: 905.427.1792

## TUTORING

**BRIMLEY & LAWRENCE**
For SCHOOL, COLLEGE, UNIVERSITY, CGA, APIX, CPIM, CSCP & SAP STUDENTS. **Grade 5 - 12.** Math, Science, Chemistry, Biology, Business & Accounting subjects by professionally qualified staff.
தொடர்புகளுக்கு: **416.669.3101**

## WANTED

Used Toyota Corolla 1993 - 1997 தேவை. Any condition.
Raj - **647.269.6552**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## JOB JOB JOB

### BABY SITTER - WANTED IMMEDEATLY

Wanted a baby sitter immediately for a Sri Lankan family in London England to look after a 3 year old child. Should be able to speak English and be a Canadian citizen
**Please call 416-738-5150**

**KENNEDY & ELLESMERE**
சந்திப்புக்கு அருகாமையில் அமைந்துள்ள தமிழ் சுப்பர் மார்கட் ஒன்றின் மீன் பகுதிக்கு வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. மேலதிக
தொடர்புகளுக்கு: 647.430.8238

**Downtown** இல் அமைந்துள்ள Italian, French உணவகத்திற்கு சமையல் தெரிந்த ஒருவர் (Chef) வேலைக்குத் தேவை. மேலதிக
தொடர்புகளுக்கு: 416.629.0120

**MARKHAM & STEELES**
தமிழ் உணவகம் (Restaurant) ஒன்றுக்கு பகுதிநேர, முழுநேர (part-time&full-time) சமையலுக்கு cook தேவை. அத்துடன் Cashier உம் உடனடியாக தேவை. அனுபவமுள்ளவர்கள் வரவேற்கத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.618.5028

### Live in Care Giver

(Urgent)
ஸ்காபரோ பகுதியில் தமிழ் மொழி பேசத் தெரிந்த வரும் வீட்டில் இருந்து இரண்டு குழந்தைகளைப் பராமரிக்கக்கூடியவரும், நன்கு சமையல் தெரிந்தவரும் அத்துடன் வீட்டுப்பராமரிப்பும் செய்யக்கூடிய பெண் ஒருவர் உடனடியாகத்தேவை.
தொடர்புகளுக்கு: சிவா - 416.464.4525

### AZ DRIVERS WANTED

Minimum 2 years experience. USA & Canada. Team or single.
Fax resume: 905.362.5063.
416.274.4472 / 416.732.0014

### BUSINESS FOR SALE

Sujey saree musieum with 2 units & also stocks. அழையுங்கள் :
**416.335.7274 / 416.837.2834**

## VACANCY

*Accounting Clerk - Scarborough*

***Qualifications**. College diploma in accounting simple accounting Lotus - 1 - 2 - 3 / Excel, Data Entry.*

**Training would be provided. Please send a resume to the following email address those who have the above qualifications. Email address: singco90@yahoo.com.**

**Contact: 416.271.4078**

## Commercial Basement For Rent

### MARKHAM & ELLESMERE

Smart kids Diaper Factory Outlet இன் நில அறை வாடகைக்கு உண்டு. Very Busy area.
தொடர்புகளுக்கு:**416.499.8517 / 647.321.7575**



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 647.340.9490 / 647.831.0070

## Answers TUTORIAL 274

(1) Since Mary buys gumballs for 15 ÷ 4 = 3.75 cents each and sell them for 15 ÷ 3 = 5 cents. Profit = 5 - 3.75 = 1.25 cents each Jo make a profit of \$3.00 she must sell 300 ÷ 1.25 = 240 gumballs.

(2) Since the square is folded in half the width of the rectangle is one half its length. Since the premeter of this rectangle is 18 cm, its length and width are 6 cm and 3cm. Therefore the area of the square in 6 x 6 = $36cm^2$.

(3) r = 5cm h = 15cm dr/dt = $2cm^3$ / min Find dh/dt when h = 3cm.
Using similar triangle r/h = 5/15 = 1/3, r = h/3 Substituting into $V = 1/3\pi r^2h$
$V = 1/3\pi (h^2/9)h = 1/27 \pi h^3$ $dv/dt = 1/9\pi h^2 dh/dt$
$-2 = 1/9\pi dh/dt$ $-2/\pi = dh/dt$
Therefore water level is being lowered at a rate of $2/\pi$ cm/min.

(4) $Log_2(log 3^a) = 2$ In exponential form $Log 3^a = 2^2 = 3^4 = 81$

(5) Car B is travelling south BT = 2 X 100 = 200KM TP = 80t QT = 200 - 100t
Let PQ = S, therefore $S^2 = (80t) + (200 - 100t)^2$
Differenciating with respect to t. 2S ds/dt = 160 (80t) + 2 (200 - 100t)(100)
To determine when two cars were closest Let ds/dt = 0
160(80t) - 200 (200 - 100t) = 0 t = 1.22 Time is 1hr. 13mts at 14:13

## Tutorial 275 Questions

(1) Three consecutive even integers have the property that three times the smallest in equal to the sam of the other two. What in the smallest of the three integers? (For Grade 6 - 8)

(2) (a) If $Log_a 2 = Log_b 8$, show that $a^3 = b$
(b) Simplify $5^{log_5 8}$ —— $log_3 5 + Log_3 7$ (For Gr. 11)

(3) A ball is dropped from a height of 20m, 12m away from the top of a 20m lampost. The balls shadow, created by the light at the top of the lamp post, in moving along the level ground. How fast is the shadow moving one second after the ball is released? (For Gr. 12)

(4) Find the slope of the graph of $f(x) = 4\text{-}x^2$ $x \le 1$
$2x+1$ $x \ge 1$ at p(-1,3)

(5) Find the volume of the parallepied determined by the vertices a = (2, -5, -1), b = (4, 0, 1) and c = (3, -1, -1) (For Gr. 12)

MATH, SCIENCE & ENGLISH TUITION

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8. Classes available at Scarborough & Stouffville
Contact: 647.340.9490 / 647.831.0363

Tutoring
Gr.1-12; College & University
* English * French * Math * Physics * Chemistry * Biology *
❖ Systematic and individualized Plan to Build Strong Base in Core Subject Areas
❖ Strict Adherence to Ontario Curriculum
❖ Regular School Teachers and Canadian University Graduate and Post Graduate Students Taking Classes
GTA Tutors
Ph: (647) 705 0725
Our Aim is to Make Students Competent Internationally while Committed to Affordable Rates

BUR OAK NEIGHBOURHOOD TUTORING - Tutoring over 20 years
Telephone: (905) 927-2411 Operating at the location over 5 years
Bur Oak Ave (NW of McCowan & 16th Ave) Markham
Days of operation: Weekdays: 3 to10pm Weekends: 8am to 4pm

| Grade 5 to 8 | Grade 9 to 12 | \$65per Month |
| --- | --- | --- |
| Mathematics | Calculus & Vectors | (For up to grade 8. straight 1.5 per week) |
| Social Studies/Science | Physics | Learns one or more subjects with a single fee |
| Geography/History | Advanced Functions/Functions | Accepting New Students |
| English & Home Work | General Science / Math | Call: Week days 9am to 9pm Weekends 10am to 4pm |

# அன்றும்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

உறுதிப்பத்திரத்தைக் கொடுப்பதுடன் எந்த உபகரணம் குறைந்தளவு Green House Gas ஐ எமது சுற்றாடலிற்கு அனுப்புகின்றது போன்றவற்றை அடிப்படையாக கொண்டதே ஆகும்.

R2000 போன்ற அத்தாட்சிப்படுத்தப்பட்ட வீடு (Certified Home) களையும் குறிப்பிடலாம். இவ்வாறு குறிப்பிடும் முறையும் Energy Efficiency வீடுகளே. இவ்வாறு கொண்டு வரப்படும் தொழிநுட்ப முன்னேற்றங்களில் முக்கியமானதாக வீடு/மனைகளின் கட்டுமானச்செலவை குறைப்பது நிர்மான காலத்தின் அளவைக் குறைத்தல் கட்டுமான கழிவுகளைக் குறைத்தல் (Garbage) போன்றவற்றை கொள்ளலாம்.

மேலும் LEED என்று அழைக்கப்படும் Leadership in Energy And Environmental Design போன்றவை இன்றைய காலத்தில் ஒரு கட்டாய கட்டிட முறையாக அறிமுகப்படுத்தப்படவில்லை இருந்த போதிலும் கடந்த 4 - 5 வருடங்களிற்கு மேலாக ரொறொன்ரோவில் முன்னணியில் இருக்கும் அடுக்குமாடி கட்டிட நிர்மான நிறுவனங்கள் இந்த Certificate பத்திரத்தை தமது கட்டடங்களிற்கு பெறுவதற்கேற்ப கூட்டுகின்றன என்பதனை அறியக்கூடியதாக உள்ளது. இது ஒரு ஆரோக்கியமான நிர்மான நிறுவனங்களுக்கிடையே காணப்படுகின்றது.

முன்னைய காலத்தில் உள்ள மக்கள் தொகையுடன் ஒப்பிடும்போது இப்பொழுது மிக அதிகமான இருப்பதால் அத்துடன் ரொறொன்ரோவின் மத்திய பாகத்திலே மக்கள் தேவைகள் அதிகரித்துவருகின்றது. நகரத்தில் கட்டப்படும் மனைகளின் அறைகள் சிறிதாகிக்கொண்டே வருகின்றன. ஆனால் சகல வசதிகளும் கொண்ட கட்டடத்தொகுதிகளே நகரின் மத்திய பகுதியை ஆக்கிரமிக்கின்றன. புதிதாக நிர்மானம் செய்யும் வீடுகளின் திருத்த வேலைகள் பராமரிப்பு போன்றவைகளை மனதில் கொண்டு அதற்கேற்ப மாற்றம் கொண்டு காணப்படுகின்றது.

அதிக வெப்பம் கொடுக்கும் வெப்பமாக்கி (High Efficiency Furnace) கொள்கலன் இல்லாத தண்ணீர் சூடாக்கும் கொள்கலன் (Tankless Hot Water Tank), Solar Panel Heating Unit, குறைந்தளவு தண்ணீரைப் பாவிக்கும் Toilet tanks, நீண்டகாலம், குறைந்தளவு மின்சார சக்தியை பாவிக்கும் மின்குமிழ்கள் (Bulbs) இவ்வாறு பல மாற்றங்கள் வந்து கொண்டே இருக்கின்றன. இந்த மாற்றங்கள் மிக வேகமாக வந்து கொண்டே இருக்கும். ஒரு விடயத்தை நிச்சயம் நாங்கள் சிந்திக்கலாம், நாங்கள் இப்பொழுது வாழும் வீடு எமது மூதாதையரின் வீட்டுடன் ஒப்பிடும்போது எவ்வளவோ வசதிகள் உள்ளன. அடுத்து எமது புதிய தலைமுறை எவ்வாறான வசதியான மிகமுன்னேற்றமான வீடுகளில் வாழ்வார்கள் என்பது திண்ணம். ஆரோக்கியமான முன்னேற்றம்.

2010ல் ஆதன சந்தையில் ஏற்பட்ட மாற்றம்.
2010ல் சராசரி ---------- \$431,463
2009ல் சராசரி------------- \$395,460
(------- 9% விலை அதிகரிப்பு)
இந்த ஆண்டில் விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை சமமாகவே காணப்படுகின்றது.
2010 இல் விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 86,170
2009 விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 87,308 (1000 குறைவாகக் காணப்பட்டுள்ளது)

**குறிப்பு:** ரொறொன்ரோ மாநகரத்தில் தொடர்ந்து 14 வருடங்களாக ஆதனவிலை அதிகரித்து வருகின்றது என்பதனை விளம்பர வாசகர்கள் அறிவார்கள்.

இதேநேரத்தில் விற்று வாங்கப்படும் வீடுகளின் எண்ணிக்கை 1997களில் இருந்ததைவிட 25,000 அதிகரித்த போதும் அண்மைக்கால வருடங்களில் 85,000 என்ற எண்ணிக்கையை சுற்றியே காணப்படுகின்றது.

# மகாவம்சத்திலிருந்து...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

படுவது பௌத்தம் இலங்கையில் பேணப்படுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாகச் சிங்கள மக்கள் உள்ளார்கள் என்பதே. ஆரியர் என்ற ஓர் இனம் இருந்தது என்ற கருத்தை இன்று பொதுவாக அறிஞர்கள் ஏற்பதில்லை (இலங்கையில் தமிழர் - கா.இந்திரபாலா, பக்கம் 145).

"மகாவம்சம்" என்ற நூலில் இரு இடங்களில் மாத்திரமே "சிங்களம்" என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தென்னிந்தியப் படையெடுப்புக்கள் எவ்வாறு மாபெரும் சிங்கள நாகரிகத்தின் அழிவுக்குக் காரணமானது என்று கூறி அதற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட போராட்டமானது அதனுடன் இணைந்த உலக வரலாற்றுக் கண்ணோட்டத்தோடு சேர்ந்து வளர்ச்சி யடைந்து வந்துள்ளது என்பதை இங்கு நாம் நோக்க முடியும்.

காட்டுமிராண்டிகளால் இந்தத் தீவு அழிக்கப்படுவதற்கு முன் இந்த அழகிய தீவு ஆரிய சிங்களவர்களின் சொர்க்கமாக விளங்கியது என "அநகாரிக தர்மபாலா" கூறுகின்றார். இதில் முக்கியமான விடயமாக அவதானிக்க வேண்டியது என்னவெனில் நாம் மக்களது வரலாற்று உணர்வு(பிரக்ஞை) பற்றிக் கலந்துரையாடும் போது புத்தி ஜீவிகள், மேட்டுக்குடிச் சிந்தனையாளர்களது தாக்கம் பற்றித்தான் உண்மையில் பேசுகிறோம். இது ஒட்டு மொத்த மக்கள் திரளின் கருத்தையும், அபிப்பிராயத்தையும் உள்ளடக்கியிருப்பதாகக் கொள்ளலாமா? அவ்வாறு கொண்டிருப்பதற்கான அவசியம் கிடையாது. அப்படிக் கொண்டிருப்பதாகக் கருதுமிடத்து அதன் முழுமை குறித்த கேள்விகள் எழுவதற்கான சாத்தியங்கள் பற்றிய வாய்ப்புக்களையும் நாம் கவனத்தில் கொள்ளல் அவசியமானது .

ஒரு சகாப்தத்தில் ஆதிக்கம் செலுத்தும் கருத்துக்கள் அந்தச் சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்தும் ஆதிக்க சக்திகளின் கருத்துக்களேயாகும் என்ற "மார்க்ஸின்" சொற்றொடரொன்று "குணரத்னாவால்" சுட்டப்படுகின்றது.

நவீன சமுதாயத்தில் காணப்படும் போக்குவரத்துச் சாதனங்கள், பத்திரிகை, ரேடியோ, தொலைபேசி, பாடத்திட்டங்கள், கல்விமுறை போன்றவற்றிற்கூடாக ஆதிக்க சக்திகள் தமக்கான கருத்தியல்களை சமூகத்தில் வலுவாக வேரூற்றி விடுகின்றன.

நவீன இலங்கையில் அரசியல்வாதிகள், பௌத்த பிக்குகள், கிராம ஆசிரியர்கள், சித்த வைத்தியர்கள் ஆகியோர் காலனித்துவ ஆட்சியின் போது குறிப்பாக பிரிட்டிஸ் ஆட்சியின் போது அற்ப சலுகைகள், சிறி தளவான பொருளாதார மேம்படுத்தல்கள் போன்றவற்றை ஈட்டிக்கொள்வதில் சிங்களக் குட்டி முதலாளிகள் ஈறாகத் தங்களது பிர-தான போட்டியாளர்களாகத் தமிழர்களை நோக்குகிறார்கள்.

எனவேதான் "பௌத்த மறுமலர்ச்சி" தொடர்பான கருத்தியல் நிலைப்பாடு சாதகமானதாகச் சிங்களக் குட்டி முதலாளிகள், சிங்கள மேட்டுக் குடிகள் ஆகியோரால் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டது.

இங்குதான் நவீன இலங்கையின் முனைப்பாகத் தெரிகின்ற புத்திஜீவி மேட்டுக்குடியின் "வரலாற்றுப் பிரக்ஞை" என்பது சிங்கள மக்களால் முழுவதுமாகப் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது. ஆனால் இலங்கையின் பழைய வரலாற்றுக் காலகட்டங்களில் இவ்வாறான அணுகுமுறை சிங்கள மக்களின் வரலாற்று உணர்வு தொடர்பாக எவ்வாறு இருந்திருக்க முடியும் என்பதற்குப் போதிய சாட்சியங்கள் கிடையாது.

இலங்கை வரலாற்றில் பண்டைய இடைக்கால கட்டங்களில் சிங்கள, பாளி மொழிப் படைப்புக்கள் மேட்டுக்குடியைச் சேர்ந்த புத்திஜீவிகளின் எழுத்தாக்கங்களே. எனவே அவை ஒட்டுமொத்த மக்கள் திரளின் கருத்துக்களை வெளிப்படுத்துவனவாக இருக்க வேண்டிய அவசியம் கிடையாது. இவ்வாறான தொன்மையான பிரதிகள் கூறும் கருத்தியல்கள் மொழி வழித் தேசியவாதத்தில் வெளிப்படும் சிங்களவர் என்ற நவீன தேசியவாதக் குறியீட்டை அதன் அர்த்தத்தில் பிரதிபலிக்கவில்லை. ஆகவே அந்தச் சமூகம் "பௌத்தர்கள்" என்ற கற்பிதம் கொண்ட சமூகமாகவே குறைந்த பட்சம் 10ஆம் நூற்றாண்டு வரையில் நோக்கப்படுகின்றது. எனவே இதற்குள் தமிழர், சிங்களர் என்ற இரு தரப்பாரும் பௌத்தர்களாக நோக்கப்பட்டிருக்கும் வாய்ப்பு உண்டு.

"மகாவம்சம்" என்பது பௌத்த துறவிகளுக்கான கற்றலுக்காகப் பயன்பட்ட அதேவேளை பயிற்சி முறைகளுக்குமான பிரதியாகவும் அது அமைகிறது. இலங்கை யின் வரலாற்றை எழுதும் நோக்கிலான படைப்பாக அது தொகுக்கப்படவில்லை. பௌத்த நிறுவனத்தைப் புனிதப்படுத்தும் நோக்கிலேயே அதன் உருவாக்கம் அமைந்தது. (இன்னும் வரும்)

# இளையோர் ஆக்கம்

விளம்பரம் தனது எழுத்தாளர்களை வருடம் தோறும் தை மாதத்தில் வரும் முதல் சனிக்கிழமை கௌரவிக்கின்றது. கடந்த வைபவத்தில் பல எழுத்தாளர்கள் விளம்பரத்தில் அடுத்த தலைமுறையை எழுத தூண்டவேண்டும் என்று கேட்டு கொண்டார்கள். அதற்கு இணங்க விளம்பரத்தின் இந்த பொங்கல் இதழ் உடன் **இளையோருக்காக இளையோரால் தமிழில் எழுதப்படும் ஆக்கங்களை பிரசுரிக்க உள்ளோம்.**

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும். இவ் இதழில் முதலாவதாக 12 வயது சிறுமியொருவர் எழுதிய கதை வருகின்றது.

## நாய்களும் பூனைகளும் மொழிகளும் கலாசாரமும்

ஞா. ஆரணி

ஒரு காட்டில் நாய்களும், பூனைகளும் வசித்து வந்தார்கள். அவர்கள் நீண்ட காலமாக சண்டை பிடித்துக் கொண்டு இருந்தார்கள். கொஞ்ச காலத்துக்கு பின்னர், சில நாய்களும் பூனைகளும் காட்டில் வேறு பகுதிக்கு சென்றார்கள். அங்கே கூடுதலாக பறவைகள் வசித்தார்கள்.

அங்கு போன பிறகு பிறந்த நாய்க்குட்டிகளும், பூனைக்குட்டிகளும், கூடுதலாக பறவை மொழியை பேசினார்கள். இப்படி பல பரம்பரைகள் சென்றன. ஆனால், இவ்வளவு காலமும் பறவை இடத்திற்கு போகாமல் இருந்த நாய்களும், பூனைகளும், அவர்களுடைய தாய் மொழியும் பேசி அவர்களுடைய கலாசாரப்படி வாழ்ந்து வந்தார்கள்.

சிலகாத்திற்கு பிறகு, பூனைகளுக்கும், நாய்களுக்கும் இடையில் நடந்த போர் முடிந்தது. எல்லா நாய்களும், பூனைகளும் பறவைகளுடைய இடத்தை விட்டு, தாய் மண்ணுக்கு திரும்பிச் சென்றார்கள்.

அவருடைய தாய்மொழியும், கலாசாரம் தெரியாத நாய்களும், பூனைகளும், அவருடைய தாய் மண்ணிலிருந்த




தாய்மொழி பேசும் சொந்தக்காரர்களை கண்டதும் வெட்கம் வந்தது. அவர்கள் பழகமுடியாமல், கவலைப்பட்டார்கள். ஆயினும், பறவை இடத்திலிருந்து வந்தவர்களில் தாய் மொழியும், கலா-சாரமும் தெரிந்து பறவை மொழியும் கலா-சாரமும் தெரிந்து இருந்தவர்கள் பாராட்டப்பட்டார்கள்.

**நீதி : எங்கே சென்றாலும், முதலில் உங்கள் தாய்மொழியையும், கலா-சாரமும் தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் பாராட்டப்படுவீர்கள்.**

YARL WINDOW BLINDS & DRAPERY
Since 1991
VENETIAN / VERTICAL / ROLLER
WOOD / FORMWOOD
BLINDS WOOD & VINYL SHUTTERS
We have experience to make your home more beautiful

Tel: 416.806.5397
905.201.7733
CALL: N. SELVAM


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# பழைய புகைப்படம்

அறைக் கதவை திறந்துகொண்டு உள்ளே நுழைந்த நான் திடுக்கிட்டு நின்றேன். என் மனைவி கன்னத்தை மேசையில் வைத்து படுத்துக் கொண்டிருந்தார். முதல் பார்வையில் அழுகிறார் என்று நினைத்தேன். அன்று காலை எழும்பியதிலிருந்து நான் ஒரு குற்றமும் செய்யத் தொடங்கவில்லை என்பது நினைவுக்கு வந்தது. பதறியபடி "என்ன, என்ன?" என்றேன். "ஒன்றுமில்லை. கம்ப்யூட்டர் திரையை பார்க்கிறேன்" என்றார். "அதை ஏன் படுத்திருந்து பார்க்கிறீர்?" என்று கேட்டேன். இங்கிலாந்திலிருந்து அவருடைய அண்ணன் ஒரு பழைய புகைப்படம் அனுப்பியிருந்தார். அது தலைகீழாக வந்திருந்தது. அதைத்தான் பார்த்துக் கொண்டிருந்தார்.



அது என் மனைவியின் சின்ன வயதுப் புகைப்படம். அவரும் அவருடைய அண்ணனும் மட்டுமே நிற்கும் படம். என் மனைவிக்கு அப்போது நாலு வயதிருக்கும். கையிலிருந்த எதையோ யாரோ பறித்துவிட்டதுபோல கோபமும் சோகமும் கலந்த முகம். கண்ணீர் எந்த நேரமும் வெடித்து வரலாம். அதற்கு முன்னர் புகைப்படக்காரர் தந்திரமாக படம் பிடித்துவிட்டார். யாரும் ஒன்றையும் பறிக்கவில்லை. புகைப்படக்காரர் கறுப்பு துணிக்குள் புகுந்தபோது தான் பயந்து போய்விட்டதாக மனைவி கூறினார். அதை நம்பலாம் என்று முடிவெடுத்தேன்.

என்னுடைய சின்ன வயதுப் படம் என்னிடம் ஒன்றுகூட இல்லை. எங்கள் ஊரில் மற்றைய வீட்டுச் சுவர்களில் புகைப்படங்கள் தொங்குவதைப் பார்த்திருக்கிறேன். புகைப்படம் என்ற பொருளே எங்கள் வீட்டில் கிடையாது. என்னைச் சிறுவயதில் எடுத்த படம் ஒன்று இருந்தது. ஆனால் அது எங்கேயோ எப்போதோ தொலைந்துபோய் விட்டது என்றார்கள். வீட்டுச் சுவரில் காலண்டரில் வந்த முருகன், பிள்ளையார் படங்கள் தொங்கும். தேதிகள் கிழிந்த பிறகும் வீட்டில் படங்கள் அகற்றப்படுவதில்லை. நேரு, காந்தி, சுபாஷ் சந்திரபோஸ் படங்களும் இருந்தன. இவர்களுக்கு சமமாக சாந்தா ஆப்தே என்ற ஒரு நடிகையின் படமும் சுவரில் தொங்கியது. இது எப்படி அங்கே வந்து சேர்ந்தது என்பது தெரியாது. சாய்ந்துபோய் அழகாக இருப்பார். பின்னாளில் இவர்தான் முதன்முதல் தமிழ் படத்தில் நடித்த ஹிந்தி நடிகை என்பதை அறிந்து கொண்டேன். சாவித்திரி படத்தில் இவர் சாவித்திரியாக நடிக்க எம்.எஸ்.சுப்புலட்சுமி நாரதராக நடித்தாராம். மற்றப் படங்கள் போனபின்னரும் இந்தப் படம் மட்டும் வெகுகாலமாக அதே சுவரில் அதே ஆணியில் தொங்கியது.

ஒருவருக்கு அதிக மகிழ்ச்சி அளிக்கக்கூடியது என்னவென்றால் அவருடைய ஆகச்சின்ன வயது புகைப்படத்தை பார்ப்பது. என்னுடைய மனைவியின் சின்ன வயதுப் படம் அகப்பட்டதுபோல என்னுடையதும் ஒன்று கிடைத்தால் நல்லாயிருக்குமே என்று நினைத்தேன். நான் பள்ளியில் படித்தபோது எங்கள் பள்ளிக்கூடத்தில் ஒரு நாடகம் போட்டார்கள். அதில் நடித்தபோது எனக்கு எட்டு வயது இருக்கும். நான் படித்த காலத்தில் மேலே கூரையும் கீழே மணலும் பக்கத்தில் வேலியுமாக வகுப்பு அறை இருந்தது. நாங்கள் நாடகத்தை கொழும்பு, கண்டி, மாத்தளை ஆகிய இடங்களில் மேடையேற்றி நிதி சேகரித்தோம். அந்தக் காசில்தான் பள்ளிக்கூட புதுக் கட்டிடம் எழும்பியது. நாடகக் குழுவை அப்போது ஒரு படம் பிடித்திருந்தார்கள். ஆனால் அந்தப் படத்தை யாரும் எனக்கு காட்டியது கிடையாது.

நான் பள்ளிக்கூடத்திலிருந்து வரும் நேரத்துக்கு அம்மா வாசலில் காத்து நிற்பார். கொஞ்சம் பிந்தினாலும் துடித்துப் போய்விடுவார். தூரத்தில் அம்மாவை கண்டதும் ஓடத்துவங்குவேன். அம்மாவை கட்டிப்பிடித்ததும் நான் அப்பொழுதுதான் பிறந்ததுபோல அவர் என் உடம்பு முழுவதையும் தடவிப் பார்ப்பார். அவர் கேட்கும் முதல் கேள்வி "ஆராவது அடித்தார்களா?" என்பதுதான். அந்தக் காலத்தில் பள்ளிக்கு போய்வந்தால் வீட்டுக்கு ஏதாவது காயத்துடன் திரும்பி வருவதுதான் வழக்கம். வாத்தியார்மார் அடிப்பார்கள். அல்லது கூடப்படிக்கும் பெடியன்கள் என்னைப்போட்டு மிதிப்பார்கள். இது இரண்டும் நடக்காவிட்டால் நானாகவே விழுந்து முழங்காலையோ, முழங்கையையோ உடைத்துவிடுவேன். ஒருநாள் நான் பிந்தி வந்தபோது அம்மா பாதி தூரம் ஓடிவந்துவிட்டார். அன்றைக்குத்தான் என்னை நாடகக் குழுவுக்கு தேர்வு செய்திருந்தார்கள். அந்த செய்தியை சொன்னதும் அம்மா தானே தெரிவு செய்யப்பட்டதுபோல எனக்காக மகிழ்ந்தார்.

நாடகக் குழுவை புகைப்படம் எடுத்த அன்று நான் பட்ட அவதியும் மறக்க முடியாது. இரவிரவாக நித்திரை வரவில்லை. வெள்ளைக் கால்சட்டையை தலையணையின் கீழ் மடித்து வைத்து படுத்திருந்தேன். அரைக் கை வெள்ளைச் சட்டை வெள்ளாவி வைத்து நீலம் போட்டு வெளுத்து சிரட்டைக்கரி ஸ்திரிப்பெட்டியால் தேய்த்து தயாராகவிருந்தது. கஞ்சிபோட்டு மொடமொடவென்று வாசனையோடு இருந்த சேர்ட்டை அம்மா பெட்டகத்துக்குள் இருந்து எடுத்து தந்தபோது பிரித்தேன். அது பேப்பர் கிழிவது போன்ற சத்தத்துடன் பிரிந்தது. கால்சட்டைக்குள் சேர்ட்டை நுழைத்து, பொத்தான்களை ஒவ்வொன்றாகப் போட்டு, தயாரானேன். அம்மா கன்ன உச்சி பிரித்து தலைசீவி விட்டார். படம் எடுக்க வரச்சொன்ன நேரத்துக்கு ஒரு மணி முன்னதாகவே சென்று காத்திருந்தேன்.

முதல் வரிசையில் உயரமானவர்கள் நின்றார்கள். பின் வரிசையில் வாங்குபோட்டு ஏறி நின்றார்கள். நான் கடைசி வரிசை. மேசைபோட்டு அதற்குமேல் வாங்குபோட்டு அதன்மீது ஏறி நின்ற சிறுவர்களுடன் நானும் நின்றேன். எனக்கு பக்கத்தில் நின்றவன் "மூச்சுவிடாதே" என்றான். ஒரு முட்டாளுக்கும் அவன் முட்டாள்தனத்துக்கும் இடையில் நான் குறுக்கிடவில்லை. இடது பக்கத்தில் முதலில் நின்றது நான்தான்.

மூன்றுகால் வைத்த காமிராப் பெட்டியால் கறுப்புத்துணி மூடிய ஓர் உருவம் எங்களை படம்பிடிக்க ஆயத்தம் செய்தது. நாங்கள் எல்லோரும் தயாராகி சிரித்த சமயத்தில் சூரியன் முகிலுக்குள் மறைந்துவிட்டான். இன்னுமொருமுறை சிரிக்கச் சொன்னார்கள். பலமுறை இப்படி ஆயத்தமாகி, சிரித்து படம் எடுக்கும் சமயம் சூரியன் முகிலுக்குள் புகுந்துவிடுவான். பல நிமிடம் காத்திருந்து பல தடவை சிரித்து அன்று ஒரு மாதிரி படம் எடுத்து முடிந்தது. அதில் என்னுடைய இரண்டு அண்ணைமாரும் வேஷம் போட்டுக்கொண்டு நின்றார்கள். எங்கள் குடும்பத்தில் இருந்த மூன்று பேருடன் இன்னும் 23 பேரும் அந்தப் படத்தில் இருந்தார்கள்.

சில வருடங்களுக்கு முன்னர், ரொறொன்ரோவில் நடந்த ஒரு விருந்தில் என்னைச் சிறுவயதில் படிப்பித்த சுகிர்தம் ரீச்சரை எதிர்பாராமல் சந்தித்தேன். அப்போது பள்ளிக்கூடத்தில் நாங்கள் போட்ட நாடகம் பற்றி பேச்சு வந்தது. நாடகத்தை இயக்கியவர்களில் இவர் முக்கியமானவர். கடந்த வாரம் என் வீட்டுக்கு முன்னறிவித்தல் ஏதும் இல்லாமல் ரீச்சர் வந்திருந்தார். வாசலில் இருந்த ஆறு படிகளையும் துள்ளிக் கடந்தார். இது நம்பக்கூடியதாக இல்லை. அவர் சொல்லியிருந்தால் நானே அவர் வீட்டுக்கு போயிருப்பேன். ஏனென்றால் சுகிர்தம் ரீச்சருக்கு வயது 89. என்னை ஆச்சரியப்படுத்தவேண்டும் என்பதுதான் அவர் நோக்கம். என் ஆசிரியர்களில் இவரை எனக்கு பிடிக்கும். நான் அடிவாங்குவதற்கு தகுதியான பல காரியங்களைச் செய்திருந்தாலும் இவர் என்னை அடித்ததில்லை. இவர் வந்தபோது பெரிதாக்கப்பட்ட ஒரு புகைப்படத்தையும் கொண்டுவந்து என்னிடம் தந்தார். பள்ளிக்கூட நாடகக் குழுவினருடன் நான் நிற்கும் படம். என்னால் நம்பவே முடியவில்லை. கிட்டத்தட்ட 60 வருடங்களுக்கு பின்னர் அந்தப் படம் என்னைத்தேடி வந்திருந்தது.

என்னுடைய ஆசிரியை படத்திலே இருந்தவர்களின் பெயர்களையும் அவர்கள் இப்பொழுது என்ன செய்கிறார்கள், எங்கே இருக்கிறார்கள் என்ற விவரங்களையும் சொன்னார். அவருடைய ஞாபகசக்தி என்னை பயமுறுத்தியது. நடுவிலே ஓர் ஆறு வயதுச் சிறுமியும் நின்றாள். அவள்தான் "ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே" பாடலுக்கு அபிநயம் பிடித்தவள். கொக்குவில் கிராமம் முழுக்க அன்று அதிசயமாக கண்டு களித்த நடனம் அது. இவளுக்கு பக்கத்தில் நின்ற சிறுமிக்கு 11-12 வயதிருக்கும். இப்பொழுது அவரைப்

தொடர்ச்சி 29ம் பக்கம்

# பழைய புகைப்படம்

படத்தில் பார்த்தபோதும் எனக்கு நடுங்கியது. பல இரவுகள் இவரால் நித்திரை வராமல் தவித்திருக்கிறேன். இவர் ஒரு மாலையை எடுத்துக்கொண்டு வந்து என் கழுத்திலே சூட்டவேண்டும். நான்தான் காந்தி சிலை. குதிக்காலால் தரையை அடித்து அடித்து மேடையில் முன்னேறுவார். எனக்கு முது எலும்புக்குருத்து குளிரும். அடுத்தநாள் வகுப்பில் என்னுடன் படிக்கும் மாணவர்களுக்கு எப்படி முகம் கொடுப்பேன் என்று யோசனை ஓடும். நான் அந்த சமயம் அடைந்த கூச்சமும் பரிதவிப்பும் வேதனையும் இப்பவும் மறக்கமுடியாதது.

கறுப்புக்கரை வைத்து வெள்ளை சேலை உடுத்தியிருப்பவர்தான் என்னுடைய இரண்டாவது அண்ணை. அர்ஜுனனுடைய மனைவி சுபத்திரையாக நடித்தவர். இவருக்கு வேடம் போடுவதற்காக இரண்டுபேர், மூன்றுமணி நேரம் ஒரு முழு பவுடர் டின்னுடன் மினக்கெட்டார்கள். அர்ஜுன ராசாவின் மனைவி ஒரு ராணியாகத்தானே இருக்கவேண்டும். இவரிடம் ஓர் அரச லட்சண முகபாவம் வரவே இல்லை. எங்கள் வீட்டுக்கு தலையிலே கூடையை வைத்து கத்தரிக்காய் காவிக்கொண்டு வந்து விற்கும் மனுசிபோலவே தோற்றமளித்தார். என்னுடைய இரண்டாவது அண்ணைதான் சுந்தரி. அவர் இரவல் வாங்கிய பாவாடை சட்டையில் நீண்ட பின்னலுடன் இருந்தார். கதையின் படி இவரை துரியோதனின் மகன் லக்குவனுக்கு நிச்சயம் செய்தாகிவிட்டது. ஆனால் அர்ஜுனனின் மகன் அபிமன்யுமேல் சுந்தரிக்கு காதல். அபிமன்யு இவரை திருமணத்துக்கு முன்னர் தந்திரமாக கடத்திப்போவதுதான் கதை. என்னுடைய அண்ணை பூமிசாஸ்திர பாடத்தில் பெயிலான நாலாம் வகுப்பு மாணவிபோல முகத்தை நீட்டி வைத்துக் கொண்டிருந்தார். ஓர் அரசகுமாரன் வந்து குதிரையில் தூக்கிக்கொண்டு போகப்போகிறானே என்று ஒருவித துள்ளலோ துடிப்போ மகிழ்ச்சியோ முகத்தில் இல்லை.

நாடக தினமன்று சுந்தரி பூங்காவனத்தில் சுழன்று சுழன்று ஆடியபடியே மேடைக்கு வரவேண்டும். ஆனால் மேடையில் தோன்றுவதற்கு சரியாக ஒரு நிமிடம் முன்பு அண்ணை மனதை மாற்றிவிட்டார். திரை இழுத்தபிறகுதான் இப்படி மனதை மாற்றவேண்டும் என்று அவருக்கு தோன்றியிருக்கிறது. அக்காவிடம் இருந்த அத்தனை நகைகளையும் அணிந்து, இரவல் ஒட்டியாணத்தை கட்டிக்கொண்டு, இடுப்பிலே கையை வைத்து அடிச்சொண்டை கடித்தபடி "மாட்டேன்" என்ற ஒரு வார்த்தையில் சொல்லிவிட்டார். கோபத்தில் கதவை சாத்துவதுபோல அமிர்தலிங்கம் மாஸ்ரர் கன்னத்தில் ஓர் அடி ஓங்கி விட்டார். வழக்கத்தில் இரண்டு தரம் சுழன்று மேடையில் தோன்றும் அண்ணை அன்று மூன்றுதரம் சுழன்றபடி மேடையில் தோன்றினார். நாடகம் குறைவில்லாமல் நடந்து முடிந்தது.

சுகிர்தம் ரீச்சர் என்வீட்டுக்கு கொண்டுவந்து தந்த அந்த பொக்கிஷமான படத்தை முதலில் என் மனைவியிடம் காட்டி என்னை கண்டுபிடிக்கச் சொன்னேன். இந்தியாவை கண்டுபிடிக்க வெளிக்கிட்ட மகெல்லனின் கப்பல்போல மனைவியின் விரல் படத்தில் ஊர்ந்து ஊர்ந்து என்னைத் தேடியது. திடீரென்று ஏதோ வெளிச்சம் வந்ததுபோல யோசிக்காமல் என் அண்ணையை தொட்டுக் காட்டி என்னை அவமதித்தார். நான் "உம்முடைய சின்ன வயதுப் படத்தில் உம்மை டக்கென்று காட்டினேன" என்று அவரிடம் சொன்னேன். அவர் பதிலுக்கு "அதில் நின்றது இரண்டு பேர்தானே" என்றார். சரி என்று என் மகனிடம் கேட்டேன். அவனுக்காவது என் மீது நல்ல அபிப்பிராயம் இருக்கிறதா என்று பார்க்கலாம். அவன் முற்றிலுமே தொடர்பு இல்லாமல் பரத நாட்டிய உடுப்பு அணிந்து, உதட்டுச் சாயம் பூசி நின்ற பெண்ணைக் காட்டினான். மிஞ்சியது என்மகள்தான். அவளாவது சரியாக கண்டுபிடிப்பாள் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. வெள்ளைக் கால் சட்டையும், வெள்ளை சேர்ட்டும் அணிந்திருந்த பையனை சுட்டிக்காட்டினாள். அவன் எனக்கு பக்கத்தில் மூச்சு விடாமல் நின்றவன். அவன் நானில்லை.

பிறகு அது ஒரு விளையாட்டு ஆகியது. வீட்டுக்கு வரும் விருந்தாளிகளிடம் அந்தப் படத்தில் நான் யார் எனச் சுட்டிக்காட்டச் சொல்வேன். சிலர் ஆண்வேடமிட்ட பெண்ணைச் சுட்டிக்காட்டினர். சிலர் பெண்வேடமிட்ட ஆணைச் சுட்டிக்காட்டினர். சிலர் பெண்வேடமிட்ட பெண்ணையே தொட்டுக்காட்டினர். ஒருவராவது என்னை சரியாக அடையாளம் காட்டவில்லை. எனக்கு துக்கமாகவிருந்தது. மகிழ்ச்சியும் வந்துபோனது. ஒருவர் 28வது முயற்சியில் என்னைக் கண்டுபிடித்தார். படத்தில் இருந்தது 26 பேர்தான்.

ஒருவரும் பக்கத்தில் இல்லாத நேரத்தில் நான் அந்தப் பழைய படத்தைப் பார்த்துக்கொண்டு வெகுநேரம் இருப்பேன். முதல் நாளிரவு தலையணையின் கீழ் மடித்து வைத்து அணிந்த வெள்ளைக் கால்சட்டை படத்தில் ஒரு துளியும் தெரியவில்லை. சிரட்டைக்கரியில் சூடான ஸ்திரிப்பெட்டியில் உரஞ்சி மடித்த வெள்ளை சேர்ட்டு கைமுனை வாள் போல கூராக நின்றது. அம்மா சீவிய கன்ன உச்சி கலையாமல் இருந்தது. கிராமத்து சூரியன் முகிலை விட்டு வெளியே வந்த கண நேரத்தில் புகைப்படக்காரர் படத்தை பிடித்திருந்தார். கடைசி நிரையில் மேசை வைத்து, அதற்குமேல் வாங்கு வைத்து ஏறி நின்ற அந்தச் சிறுவர்களை உற்றுப் பார்த்தேன். இடதுபக்க ஓரத்தில் நின்ற சிறுவனின் கண்களில் நிறைய கனவுகள் தெரிந்தன. அதில் பாதியாவது நிறைவேறியதோ என்னவோ.

END



- அ. முத்துலிங்கம் -




HOMELIFE/GTA Realty Inc., Brokerage*

Seelan Siva Aiyadurai
Real Estate Broker
Direct: 416-451-0271
Email:seelansiva@gmail.com
Web:www.sivahomes.com

HOMELIFE HIGHER STANDARDS

Uthayan Aiyadurai
Sales Representaive
Direct: 416-999-3555
Email:aiya14@gmail.com



"THANK YOU FOR YOUR SUCCESSFUL REFERRALS"

IF YOU BUY, SELL OR INVEST IN ANY RESIDENTIAL OR COMMERCIAL PROPERTIES FROM US

VISIT sivahomes.com for more listings

Our wishes for you, great start for Jan,
Love for Feb, peace for March,
No worries for April, fun for May,
Joy for June to Nov, happiness for Dec.
Have a lucky and wonderful 2011







1711 McCowan Rd, Suite 206, Toronto, ON M1S-3Y3 Bus:(416)321-6969

*Independently Owned and Operated
*Some Conditions Apply
This is not intended to solicit properties currently listed for sale.

# குவாண்ரம் பிறந்த கதை

## நுண்ணுலகியல் 02

சென்ற தடவையில் குவாண்ரம் பிறந்த கதையின் அறிமுகத்தினை தொடங்கியிருந்தேன். குவாண்ரத்தினை தெரிந்து கொள்வதற்குப் பௌதீகத்தின் செம்மைப் பௌதீகம் பற்றித் தெரிந்தால் நல்லது. அதுதான் எல்லாவற்றிக்கும் ஆரம்பமாகியது என்பதனால் எனது அறிமுகப் பகுதியில் சிறிதளவில் கூறுகிறேன்.



நியூட்டன் பொருட்களின் இயக்கங்களைத் தெளிவு படுத்தக் கூடியவகையில் செம்மைப் பொறிமுறையை உலகிற்கு அளித்தார். நியூட்டனின் இயக்கவிதிகள் (மூன்று விதிகள்), நியூட்டனின் ஈர்ப்புவிதி என்பவை புவியில் நடக்கக் கூடிய இயக்கங்களுக்கும் விண்வெளியின் கோள்களின் இயக்கங்களுக்கும், அவற்றின் நிலைகளைத் தெரிந்து கொள்வதற்கும் உதவியாக இருந்தன. நியூட்டன் உலகிற்களித்தவற்றில் நேர்மாறு வர்க்க விதியையும், ஈர்ப்பு மாறிலி யின் பெறுமானத்தையும், இன்றும் வியப்புடன் பார்க்கின்றார்கள் அறிவியலாளர்கள். நிறங்கள், நுண்கணிதம் வானவியல் எனப் பலதுறைகளில் பங்களித்த நியூட்டன் பௌதீகத்தைச் செம்மைப்படுத்தி செம்மைப் பௌதீக அமைப்பினையும் அறிமுகப்படுத்தினார். அதன் பின்னராகப் பௌதீகம் சிறப்புடன் வளர்ந்தது. எந்தப் புதிருக்கும், புதிய கண்டுபிடிப்புக்கும் செம்மைப் பௌதீகத்தின் வழியிலே விளக்கங்களை விஞ்ஞானிகள் கண்டு கொண்டார்கள், விளக்கினார்கள்.

காலம் செல்லச்செல்ல நவீன உபகரணங்கள் பௌதீக உலகிலும் பொது மனிதர்களினது உலகிலும் வர, இரண்டு நூற்றாண்டுகள் சிக்கல்கள் ஏதுமின்றி நடைபோட்ட செம்மைப் பௌதீகத்தில் சில நழுவல்கள், தெளிவி ன்மைகள் தென்படத் தொடங்கின. இருபதாம் நூற்றாண்டின் கண்டுபிடிப்புகளின்படி, பேரண்டம் எதிர்பார்த்ததையும் விடப் பெரியதாகவும், அதேநேரம் அதிக அளவி லான பொருட்களையும் விவகாரங்களையும் தன்னுள் கொண்டதாகவும் தெரிய, பெரிய அளவுகளில் செம்மைப் பௌதீகத்தின் செம்மை குலையத் தொடங்கியது. இதனைச் சீர் செய்ய பெரிய அளவுகளின் விவகாரங்களுக்கு அயன்ஸ்ரைன் சார்பியலை அறிமுகப்படுத்த, சார்பியலும் பெரு வெற்றி கண்டது.

அதேபோலவே சின்னஞ் சிறு உலகங்களும் இருபதாம் நூற்றாண்டில் இனம் கண்டு கொள்ளப்பட்டன. அந்த நுண்ணுலகியல் கூட, ஏராளமான துகள்கள் இருப்பதும் தெரிந்தது. அவற்றின் இயக்கங்கள், நடத்தைகள், இயல்புகள் என்பன சாதாரண உலகில் காணப்படும் பொருட்களின் நடத்தைகளை விட மிகவும் வித்தியாசமாகவும் சிக்கலாகவும் இருக்க, அவற்றை ஆராய்ந்த அறிவியலாளர்கள் குவாண்ரவியலை அறிவியலுலகிற்கு அறிமுகம் செய்தார்கள். சார்பியலைப் போலலே குவாண்ரமும் பெரு வெற்றியைப் பெற்றது. ஆனாலும் இரண்டும் எதிரெதிர் திசைகளில் முரண்டுபட்டுக் காணப்பட்டன. ஆக, இரண்டு எதிரெதிரான பௌதீகத்தின் பகுதிகளை ஏதோ ஒரு வகையில் இணைத்துக் கொண்டு செம்மைப் பௌதீகம் இருந்தது, இருக்கின்றது. இதிலே இன்னொரு வியப்பினையும் காணலாம். சார்புத் தத்துவத்தைத் தந்த அயன்ஸ்ரைனின் பங்களிப்பும் குவாண்ரத்தில் அதிக அளவில் இருக்கின்றது. (அதனால்தானே என்னவோ அயன்ஸ்ரைனை இன்னமும் வியப்புடன் அனைவரும் பார்க்கின்றார்கள்)

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## பேரண்டம் - 81

இந்நாட்களில் விஞ்ஞான உலகில் பெரும்பாலும் சார்பியலும் குவாண்ரவியலுமே அதிகம் கவனிக்கப்படுகின்றன. நியூட்டனின் செம்மைப் பௌதீகம், பெரிய பெரிய ஆய்வுகளில் அதிகம் பாவிக்கப்படுவதில்லை. ஆனாலும் இவையி ரண்டையும் இணைக்கும் பகுதியாக நியூட்டோனியன் பௌதீகம் இருக்கின்றது. இருந்த போதிலும், விஞ்ஞானிகள் சார்பியலையும் குவாண்ரவியலையும் (கூடவே செம்மைப் பௌதீகத்தினையும்) இணைக்கக் கூடியதான ஒரு புதிய பொதுமைப்படுத்திய கொள்கையைக் கண்டுபிடிப்பதற்கு முயற்சி செய்கிறார்கள். அயன்ஸ்ரைன் கூட அம்முயற்சியில்தான் தனது இறுதிக் காலத்தினை செலவழித்தார். Theory of Everything எனும் அந்தப் பொதுமைப்படுத்தப்பட்ட கொள்கை பெறப்படுமா? அல்லது சார்பியலும், குவாண்ரமும் வேறு வடிவங்கள் எடுக்குமா? என்பதனை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

எது எப்படியிருப்பினும் எமது அறிவியல் வளர்ச்சியினைக் கருத்திற் கொண்டு, வழமை போலவே விஞ்ஞானத்தனம் இல்லாத விதமாக சிக்கலான குவாண்ரம் கதையினை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். என்னைப் பரவசப்படுத்திய குவாண்ரம் உங்களையும் மகிழப் பண்ணட்டுமே! ஏனெனில் நான் அடிக்கடி கூறி மகிழ்வது "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"

அடுத்த தடவையில் இருந்து குவாண்ரம் கதைக்குள் நுழைவோம்.

- கனி -
416.261.1348
kani1vimal@hotmail.com



# அயர்விலாச் செல்வராசக் கோபால் ஐயா அயர்ந்தனையே அந்தோநாம் என்செய் வோம்!



நாமமது தமிழனென நடந்தி டாது
 நற்றமிழில் நாள்தோறும் ஊறித் தேறிப்
பாமரரும் பைந்தமிழின் பான்மை காணப்
 பலவான பணிசெய்து படித்தோர் தாமும்
காமுறுநற் கட்டுரைகள் செய்யுள் நூல்கள்
 கவினுறவே படைத்தளித்துத் தமிழ்வ ளர்த்த
கோமகனார் நம்க.த. செல்வ ராச
 கோபாலர் இறைவனடி குறுகி னாரோ!

வற்றாத தமிழூற்று வறண்ட தாமோ
 மல்லிகைப்பூப் பந்தர்மணம் மறைந்த தாமோ
நற்றாம ரைப்பொய்கை நலிந்த தாமோ
 நாகரிக மலைவீழ்ந்து சரிந்த தாமோ
உற்றாரை உறவினரை உதறித் தள்ளி
 உலகத்தை உய்விக்க வந்த கர்த்தர்
பொற்றாளைப் பற்றிடவே நம்மீ ழத்துப்
 பூராட னார்விரும்பிப் போனா ராமோ!

அச்சகம் அமைத்தான்றொர் நூல்கள் தம்மை
 அழகுறவே பதிப்பித்தும் அகிலம் நன்கு
மெச்சவே தானும் பல நூல்கள் செய்தும்
 விளங்காத செய்யுள்நூல் பலவற் றுக்கு
நச்சினார்க் கினியார்போல் உரைகள் கண்டும்
 நயமுறவே பிறநூல்கள் மொழிபெ யர்த்தும்
இச்சகம் போற்றவே தமிழ்வ ளர்த்த
 ஈழத்துப் பூராட னார்போ னாரோ?

இலக்கியமே பொருளானார் சுவையு மானார்
 இலக்கியமே பேச்சானார் மூச்சு மானார்
இலக்கியமே எழுத்தானார் பதிப்பு மானார்
 இலக்கியமே எழில்பொங்கும் வாழ்வு மானார்
இலக்கியவித் தகரானார் மணியு மானார்
 இலக்கியகலா நிதியானார் இணையி லாதார்
கலக்கமிலாச் செல்வராசக் கோபால் எம்மைக்
 கலங்கவிட்டுக் காற்றினிலே கலந்தா ராமோ?

உயர்வான சொற்பொழிவுக் கிங்கார் உள்ளார்
 உவகையுடன் தலைக்கூட எவரே உள்ளார்
தயவான தந்தைமொழி தரயார் உள்ளார்
 தாங்கிமனச் சோர்வகற்றும் சான்றோர் யாரோ
சுயமான சிந்தனைகள் செய்வார் யாரோ
 துங்கத்தமிழ்ப் பண்பாட்டைத் துலக்க யாரோ
அயர்விலாச் செல்வராசக் கோபால் ஐயா
 அயர்ந்தனையோ அந்தோநாம் என்செய் வோமே!

- கவிநாயகர் வி. கந்தவனம்

# ஒற்றை வெளியில் ஒரே காதல்

**வானரன்**

‘ஆடை களைந்தாய் என்றா
வாளை தூக்கச் செய்தேன்
தாயகட்டையில்
சாயம் போனபின்
சுற்றி இருக்கும் சேலையிலா
தொக்கி நிற்கும் என் கற்பு’
- லதா- பிரபல பெண் கவிஞர்

சியாம் பிரசாத் - இவர் தொலைக்காட்சிக்காக அன்றன் செக்கோவ், அல்பேர்ட் கமஸ், மாதவிக் குட்டி, வைக்கம் முகமது பசீர் போன்றோரின் படைப்புக்களை இயக்கியுள்ளார். தந்தையார் பாரதீய ஜனதாக் கட்சியின் முக்கிய தலைவர். கல்கத்தாவில் உள்ள நாடக அரங்கக் கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்து விட்டு இங்கிலாந்தில் முதுநிலைப் பட்டத்தைப் பெற்றுள்ளார். பிபிசி, சனல் 4 போன்ற தொலைக்காட்சி நிலையங்களில் வேலை பார்த்துள்ளார். இவரது படங்கள் பல உலக திரைப்படவிழாவில் திரையிடப்பட்டுள்ளன. இவரது AKALE - At A Distance என்ற படம் ரெனிசி வில்லியத்தின் கண்ணாடி வார்ப்புக்களை மையமாகக் கொண்டது.

### *Sunil Gangopadhyay*



ஒரே கடல் படம். இவரின் Heerak Deepthi நாவலை மையமாகக் கொண்டது. வங்காளத்தின் பிரபல நாவலாசிரியரான இவரது நாவல்கள் சில சத்யஜித்ரேயால் படமாக்கப்பட்டுள்ளன. Arjun, Pratidwandi, The Days and Nights of the Forest. இயல்பில் ஒரு கவிஞரான இவர் பல விருதுகளையும் பெற்றுள்ளார்.

ஒரே காதல் என்ற மலையாளப் படத்தின் மூல நாவலை எழுதியவரும் இயக்குனரும் பற்றிய அறிமுகங்களே மேலுள்ளவை. இப்படம் பற்றிய குறிப்பு ஒன்று முன்னரும் இப்பகுதியில் எழுதப்பட்டுள்ளது. இதனை மீண்டும் எழுதுவதற்கான காரணம் இப்படம் சில வாரங்களுக்கு முன்பு விஜய் தொலைக் காட்சியில் தமிழில் ஒளிபரப்பப்பட்டுள்ளது. இதன் தமிழ்ப்பதிப்பை சகல தமிழ் விடியோக் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். எனது நண்பர்கள் பலருடன் இப்படம் பற்றிக் கதைத்த பொழுது இப்படத்தை ஏற்க முடியாது என்றார்கள். சாதாரணமாக மற்றொரு நண்பர் (இவர் ஒரு சாதாரணமாக திரைப்படங்கள் பார்ப்பவர்) இப்படத்தில் வரும் பெண் பாத்திரத்தின் நியாயங்களை இயல்பாகவே வெளிப்படுத்தினார். இந்த முரண்பாட்டுக்கு காரணம் ஆண் என்ற பார்வையே. தமிழில் இவ்வாறான படத்தை இன்னமும் பல வருடங்களுக்கு எதிர் பார்க்கவே முடியாது. குஷ்பு போன்றவர்கள் சாதாரணமாகவே ஆண்கள் பற்றியும் கற்பு பற்றியும் விமர்சிக்க முடியாத தமிழுலகில் இப்படத்தை எதிர்பார்க்கவே முடியாது. இப்படத்தின் இயக்குனர் ஒரு பேட்டியில் குறிப்பிட்டுள்ளார் ‘இப்படத்தின் மொழி மலையாளம். ஆனால் இப்படம் சகல மக்களுக்கு முரிய விடயத்தைப் பேசுகின்றது’ என்றார். உண்மை இப்படம் அனைவருக்குமுரியது.

முதலில் நாவலை படமாக்குவது என்பதே ஒரு சவாலான காரியம். நாவலில் நாங்கள் உள்வாங்கும் பாத்திரங்களை திரையிலும் எதிர்பார்ப்போம். நாவல் ஒரு அக உள்வாங்கல். திரைப்படம் ஒரு பார்வை யூடகம். அக உலகை வெளிப்படுத்துவதே இங்கு முக்கியம். இந்நாவல் 60களில் வங்காளத்தில் நடைபெற்ற சம்பவங்களைக் கொண்டது. நாவல் 70களில் எழுதப் பட்டுள்ளது. படம் 2007ல் எடுக்கப்பட்டுள்ளது.

படத்தின் காலம் 2007ல் நடைபெறுவது போல் தான் காட்டப்பட்டுள்ளது.

கலாநிதி நாதன் ஒரு சமூக விஞ்ஞானி. பொருளாதார மேதை. பல நாடுகளுக்கு பயணம் செய்பவர். காதல், உறவு போன்ற எவற்றிலுமே நம்பிக்கையற்றவர். இவர் வசிக்கும் தொடர் மாடிக் கட்டிடத்தில் வசிக்கும் தீப்தியை தற்செயலாக சந்திக்கின்றார். தீப்தியின் பிள்ளைக்கு சுகயீனம். மருத்துவரிடம் செல்ல பணமில்லை. கணவனுக்கு வேலை இல்லை. ஒரு இன்ரவியுக்கு பெங்களூருக்கு சென்றுவிடுகின்றார். நாதன் உதவி செய்கின்றார். தீப்தி பின்னர் கணவருக்கு வேலை என நாதனிடம் செல்ல அவர்களுக்குள் உறவு நிகழ்கின்றது. கணவனுக்கு வேலை கிடைத்துவிடுகின்றது. தீப்தியின் வயிற்றில் கரு வளர்கின்றது. நாதன் குழப்பத்தில் இருந்து காதலை தேடிய போது தீப்தி தள்ளிச் சென்று விடுகின்றார். பின்னர் தீப்தி மனநோயால் பாதிக்கப் பட்டுள்ளார். அவர் குணமாகி கணவனுடனும் தனது இரு குழந்தைகளுடனும் வாழ்ந்து வருகின்றார். தீப்தியின் புதிய முகவரியை அறிந்து தேடி வருகின்றார் நாதன். தீப்தி சந்திக்க மறுத்து விடுகின்றாள். அவளுள் நாதனை மறுக்க முடியாது தவிக்கின்றாள். நாதனை கொலை செய்யும் நோக்குடன் நாதனின் வீட்டிற்கு செல்கின்றாள். அங்கு நாதனை கொலை செய்யாது நாதனுடன் இணைந்து விடுகின்றாள்.

தீப்தியின் காதலுக்கு பல காரணங்கள் உள்ளன. படிக்க விருப்பம். படிக்க முடியாது. வேலைக்கு செல்ல விருப்பம். வேலைக்கு செல்ல முடியாது. தனது கணவனின் அன்பு கிடைக்கவில்லை. இந்த உறவிற்கான அடிப்படைக் காரணம் வறுமை. வறுமையின் தேடலில் தான் ஆரம்பத்தில் இந்த உறவு துளிர்விடுகின்றது. பின்னரே இது காதலாக மாறுகின்றது. இதனை இயக்குனர் ஒரு பேட்டியில் தெளிவாகக் கூறியுள்ளார்.

Does the economic situation of the sixties play any part in the thinking of the characters, mainly the economist?

Of course. Poverty is a major issue that is talked about. They get into a relationship out of a situation which is basically economic. Economy and the class divide play a part but then, the relationship transcends that. But economics and philosophy are subtle; what is essentially told is the human drama.

The economist's interest in the woman is primarily as a case study. He is an observer into their lives but then he gets entangled. You can't treat a human being as a case study ஒவ்வொரு பாத்திரங்களும் தங்களது நியாயங்களை வெளிப்படுத்தியுள்ளனர். தீபத்தியின் கணவன் உத்தியோகம் புருஷலட்சணம். அதில் அவனது கவனம். மனைவி வேலைக்கு செல்லக் கூடாது. மனைவி சுகயீனமாக இருக்கும் போது மனைவியை கவனிக்கும் கருணையுண்டு. ஒரு சாதாரண கணவன். நண்பர்களுக்கு விருந்து கொடுப்பதில் இருக்கும் நோக்கம் மனைவியின் மனத்தை அறிவதில் செல்லவில்லை. மூன்றாவது மனிதனிடம் தான் கடன் கேட்கச் செல்லாமல் மனைவியை கடன் கேட்க அனுப்பும் கணவன். கடன் கேட்டு வரும் பெண்ணை ஒரு மனிதமாக பார்க்காமல் தனது ஆசையை இச்சையை பூர்த்தி செய்யும் பண்டமாக பார்க்கும் சமூக விஞ்ஞானி உண்மையான பொருளாதார மேதையே.

கலாநிதி நாதன் ‘நான் எத்தனையோ பெண்களுடன் உறவு கொண்டுள்ளேன்’ என பெருமையுடன் கூறும் மேல் தட்டு மேதாவி. ‘நான் தொட்ட போது நீ மறுக்கவில்லை. நான் உன்னை கட்டாயப்படுத்தவில்லை. நீ மறுத்திருந்தாலும் உனது கணவன் வேல பெற உதவி செய்திருப்பேன்’ எனக் கூறும் உயர் வர்க்க புத்தி. ஒவ்வொரு கட்டத்திலும் தங்களை நியாயப்படுத்தும் ஆண்கள். அவரது தோழியாக வரும் ரம்யா கிருஸ்ணன் தனது வாழ்வியல் அனுபவங்களால் நாதனை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பவர். இவரது வாழ்வுக்கும் இவர் வாழ்க்கையில் அனுபவித்த இன்னல்களே காரணம். 15வயதில் பாலியல் வல்லுறவுக்குட்பட்டு, பலரை காதலர்களாகக் கொண்டு வாழ்வின் தோல்விகள் பலவற்றை அனுபவித்தவர். உறவுகளை வெறுப்பவர். இது இவரது வாழ்வியல் அனுபவமே காரணம். படத்தில் வரும் தீப்தியினதும் ரம்யாவினதும் பாத்திரங்கள் ஒன்றுக்கு ஒன்று எதிரானவை.

பலருக்கு இரண்டு மனைவி உண்டு. இரண்டாவது மனைவி என்பது ஆண்களைப் பொறுத்தவரை பாலியல் வெளிப்பாடே. கலைஞர் கருணாநிதி, எழுத்தாளர் பாலகுமாரன் என பலர் இப்பட்டியலில் உள்ளனர். இவர்களுக்கு எந்த குற்ற உணர்வும் இல்லை. ஜெமினி கணேசனுக்கு நிச்சயமிருக்கவில்லை. இவர்கள் சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பெரியவர்கள்.

இப்படத்தின் மூலம் ஒரு ஆணின் வெளிப்பாடு. இயக்கமும் ஆணின் பதிவு. சிறப்பம்சம் இப்படத்தில் வரும் ஆண் பாத்திரங்கள் சமூகப்பார்வையில் அடி மட்டத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார் கள். தீப்தி மன வலியே அவளது வலிமையுமாகும். தீப்தியின் சுதந்திரத்துக் கான வெளி திறந்து விடப்பட்டுள்ளது.

‘என்னுடைய வரிகளில்
என்னை தந்து முடிவதும் இல்லை
எடுக்கவும் முடிவதுமில்லை’

அனாரின் கவிதை இப்படத்தை பார்த்த பொழுது நினைவுக்கு வந்தது.

ELECTRICAL WORKS

FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.
தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

# தமிழ் மகள் வருவாள்




**என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள் நலம் பெறப் பிரார்த்திக்கிறேன்.**

என் இதழ் இயல் வாழ்வு மட்டுமல்ல சொற்பொழிவுத்துறை வாழ்வும் பல புதிய அனுபவங்களைத்தந்தன. ஈழத்தில் மட்டுமல்ல இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், கனடா முதலிய நாடுகளில் நடந்த சொற்பொழிவு அனுபவங்கள் குறித்து வைக்கப்பட வேண்டியவை. எதிர்காலத்தில் தமிழர்களின் மூலமும் - முதன்மையும் - முயற்சிகளும் - வளர்ச்சிகளும் அரங்குக்கு வந்து நமது சந்தியினருக்கு ஒரு கணிப்பை மரியாதையை ஏற்படுத்த வேண்டும். தமிழர்கள் ஏனோதானோக்கள், எங்கிருந்தோ வந்தவர்கள், ஏதிலிகள் என்ற எண்ணம் பிற இனத்தவர்களுக்கு ஏற்படாதவாறு எல்லாம் ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

1960 பதுகளில் பேராசிரியர் ரா.பி சேதுப்பிள்ளையின் சொற்பொழிவுகள், டாக்டர்.வ.சு.ப. மாணிக்கனாரின் சொற்பொழிவுகள், அறிஞர் அண்ணாவின் சொற்பொழிவுகள், கலைஞர் கருணா நிதியின் சொற்பொழிவுகள், தவத்திருக் குன்றக்குடி அடிகளாரின் சொற்பொழிவுகள், கவிஞர் கண்ணதாசனின் சொற்பொழிவுகள் தொகுப்பாய் வெளிவந்தபோது அவற்றின் அனுபவப்பின்னணிகளையும் அவர்கள் எழுதி வெளியிட்டிருந்தார்கள். ஈழத்திலும் பல சொற்பொழிவுத் தொகுப்புகள் வந்தன. அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியின் சொற்பொழிவுத்துறை அனுபவங்கள் சில கட்டுரைகள் ஆகின. ஏனையவர்கள் தங்கள் வாழ்க்கை அனுபவங்களோடு சொற்பொழிவு நிகழ்வுகளையும் குறித்துள்ளார்கள். அண்மையில் கவிஞர். வி. கந்தவனம் விளம்பரம் இதழில் தனது சொற்பொழிவுகளையும் அது தொடர்பான அனுபவங்களையும் எழுதியுள்ளார்.

நண்பா! நானும் நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் கனடாவில் தொடங்கப் பெற்ற ஒரு புதிய வார இதழுக்கு ஆயிரம் மேடைகளின் அனுபவங்கள் என்று ஒரு தொடர் கட்டுரை எழுதிக் கொடுத்தேன். அந்த இதழ் இரண்டுவாரத்தோடு நின்று விட்டது. நிற்க.

மலையகம் அப்புத்தளையில் ஒரு கல்விக்கூடத்தின் பெற்றோர் தினவிழா. சிறப்பு உரையாற்ற அன்றைய இந்து கலாசார அமைச்சர் பி.பி. தேவராஜ் கேட்டிருந்தார். அமைச்சர் ஏற்பாடு செய்திருந்த வாகனத்தில் மலைநாடு சென்று அப்புத்தளைக் கல்விக் கூடத்துக்குப் போனேன். மேடையில் அமைச்சர், கல்விக்கூட அதிபர், சில பிரமுகர்கள் இருந்தார்கள். எனக்குரிய இருக்கையில் போய் இருந்தேன். விழாத்தலைவர் என்னை உரையாற்ற அழைக்கும் போது 'வாழ்க்கை' இதழின் பிரதம ஆசிரியர் புலவர் ஈழத்துச் சிவனாந்தன் அவர்கள் இனிச்சிறப்புரை ஆற்றுவார் என்று கூறினார். மலைப்பகுதியின் நாலாபக்கங்களிலும் இருந்து திடீரெனச் சடசட எனச் சப்பாத்துச் சத்தங்கள் கேட்டன. இரு நிமிடத்தில் பள்ளிக் கூடத்தை வளைத்து இராணுவம் துப்பாக்கிகளுடன் நின்றது. பள்ளிக்கூட மண்டபத்துக்குள் அவர்கள் எவரும் வரவில்லை. கூடியிருந்த மக்கள் அமைதியாகவே இருந்தனர். நானும் சலனப்படாமல் பேசி முடித்தேன். கல்வி, கேள்வி, கலை, கடவுள் என்ற தொனிப் பொருளில் அரைமணிநேரம் பேசியிருப்பேன். என் பேச்சைக்கேட்ட திருப்தியில் மலையடிவாரத்திற்கும், மலை உச்சிகளுக்கும் திரும்பிச் சென்றனர் இராணுவத்தினர்.

என்னைக் கொழும்பிலிருந்து அழைத்து வந்த அன்பரின் வாகனத்தில் ஏறப்போனேன். தனது மெய்காப்பாளர் மூலம் என்னைத் தனது வாகனம் நின்ற இடத்துக்குக் கூப்பிட்டு தனது ஜீப்பிலேயே என்னைக் கொழும்புக்கு கொண்டு சென்றார் அமைச்சர் தேவராஜா. போகும் வழியில் சமயம் இலக்கியம் குறித்து என்னோடு உரையாடிய அமைச்சர் 'ஈழம்' உங்களைத் துரத்துகிறது என்றும், சிரித்துக்கொண்டு சொன்னார்.

நண்பா!
'வாழ்க்கை' இதழை நடத்திக் கொண்டிருந்த போது கனடாவில் நடைபெற இருந்த அனைத்துலக சைவசித்தாந்த மாநாட்டிற்கு என்னை அழைத்த கடிதம் இந்து கலாசார அமைச்சுக்கு வந்திருந்தது. அமைச்சர் தேவராஜ் கூப்பிட்டு பிரயாண ஒழுங்குகளைச் செய்யும்படி சொன்னார். அவருடைய சிபார்சினாலும் கனடா இமிக்கிரேசன் எனக்கு விசா வழங்கியது. 1994ம் ஆண்டு நடைபெற்ற கனடா சைவசித்தாந்த மாநாட்டில் சிவ ஸ்ரீ. சோமாஸ்கந்தக்குருக்கள், ஆத்மஜோதி. நா. முத்தையா, சரவணமுத்துச் சுவாமிகள் உட்படப் பல நாடுகளிலிருந்தும் அறிஞர்கள் வந்து கலந்து கொண்டோம். ரொறொன்ரோ, மொன்றியல், ஒட்டாவா ஆகிய இடங்களில் சைவசிந்தாந்த மாநாடு சிறப்பாகவே நடந்தது. இந்த மாநாட்டில் ஹவாய் சுப்பிரமுனியசுவாமிகளும் அன்று கலந்து கொண்டார். ஹவாய் ஆதீனமுதல்வர் சிவாய சுப்பிரமுனியசுவாமிகள் நமது ஈழத்துச்சித்தர் சிவயோக சுவாமிகளின் முதுகுத் தட்டலில் முனிவரானவர்.

மாநாடு நிறைவு பெற்றதும் நான் யாழ்ப்பாணத்தில் நடத்திய சமய இலக்கிய இதழான ஆலய மணியை இங்கும் தொடங்கினேன். விளம்பரங்களுக்குப் பலரை நாடினேன். கனடாவில் எக்ஸ் பிரஸ் அச்சகத்தை நடத்திக் கொண்டிருந்த என் உறவினரும், ஊரவருமான சாந்த மூர்த்தி என்ற சைவப்பற்றுக் கொண்ட ஒரு இளைஞர் இருக்கிறார். அவரிடம் ஆலய மணி இதழுக்கு மாதந்தோறும் உதவும்படி கேட்போம். வாருங்கள் என்று அவரிடம் கூட்டிச் சென்றார். அவர்தான் டாக்டர் ஆதி கணபதி சோமசுந்தரம்.

நண்பா! எதிர்பாராத வரவேற்பும் எதிர்பாராத எதிர்ப்பும் மனிதனுக்கு அவ்வப் போது நிகழ்வதுண்டு. எனக்கு எதிர்பாராத வரவேற்பு. ஐயா! 'உங்களைத் தேடிக் கொண்டிருந்தேன். நீங்களே வந்து விட்டீர்கள். வணக்கம். நீங்கள் இந்த இருக்கையில் இருக்க வேண்டும்' என்று தான் இருந்து வேலைபார்க்கும் சுழல் மெத்தை இருக்கையில் அமரும்படி வேண்டினார். நான் பரவாயில்லை என்று சாதாரண இருக்கையில் இருந்தேன். "நான் தொழில் ஆரம்பித்துச் சில மாதங்கள் தான். என் தொழில் சீராக நடந்து உயர்ச்சி பெற வேண்டும். இந்த இருக்கையில் நீங்கள் இருந்து என்னை ஆசீர்வதிக்க வேண்டும்" என்று திரும்பவும் வினயமாகக் கேட்டார் டாக்டர் கணபதி.

ஈழத்தில் இப்படியான இருக்கையில் இரண்டு வீடுகளில் இருந்த நினைவும் வந்தது. ஒன்று கொழும்பிலே புகையிரத்துறையின் நினைவு வந்தது. ஒன்று கொழும்பிலே புகையிரதத்துறையின் பிரதம பொறியிலாளராய் விளங்கிய என் மாமனார் என். ஏ. வைத்தியலிங்கம் வீடு. மற்றது யாழ்ப்பாணத்தில் வழக்கறிஞராய் இருந்த என் சித்தப்பா ப. கதிரவேலு வீடு. டாக்டர் ஆதி காட்டிய சொகுசு மெத்தையில் இருந்து என்குடிமுழுதாலும் மீனாட்சி சுந்தரேசப் பெருமானை நினைத்து பிரார்த்தித்து ஆசிவழங்கினேன். கேள்விகளும் வந்தன. பதில்கள் சொன்னேன். ஐயா! இந்த ஆலயமணி இதழ் இங்கு விற்பனையாவது சிரமம். நீங்கள் என்னோடு வாருங்கள். இருவருமாகச் சேர்ந்து ஒரு அமைப்பை உருவாக்கி மாத இதழ் ஒன்றினையும் தொடங்கி ரொறொன்ரோவின் பல பாகங்களில் சைவத்தமிழ் பாடசாலைகளை உருவாக்கி நடத்துவோம் என்றார் டாக்டர்.

நான் இருந்த இருக்கை என்னைத் தூக்கித் தூக்கி ஓராட்டியது. இதயம் துள்ளித்துடித்து அல்லாடியது. ஒரு மணித்தியாலத்துக்கு மேல் நடந்த உரையாடல் இலட்சியம் போக்குக்கும் சைவசித்தாந்த நோக்குக்கும் இசைவாகவே நகர்ந்தது. தில்லை நடராசப் பெருமானுக்கும் நன்றி. ஓம் நமசிவாய சொல்லி விடைபெற்றோம். அடுத்து தமிழ் மகள் வருவாள்.



வேறு என்ன? பிற பின்பு.

- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

**Sitham Sam Shanmugam** (Sales Rep)

**HomeLife/GTA Realty Inc.**

Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666

24 hrs.

•Independently owned and operated

your 2nd house is Investment property

1st house put down payment

Tenant (Rent) Pay the **Mortgage**
Scarborough , Mississauga

Senior Home in Richmondhill 12 Beds

Metal scrap yard for recycling and car sales with house office

Bungalow House with basement Apartment Markham /Sheppard

For students 2 + 1 **Condo.** in Toronto Near Univerisal of York $130,000

# இன்னொரு... ஆச்சி வீடு

## பகுதி 12

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே

வாகனத்தில் ஏறிய போலிஸ் அதிகாரிகள் இருவரும் மீண்டும் தங்களை நோக்கித் திரும்பி வருவதைத் தம்பதிகள் பார்த்தார்கள்.

ஏன்? கேள்வி அவர்கள் மனதில் எழுந்த போதிலும் எப்படி என்பது அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. வாகனம் இவர்களுக்கு அண்மையில்தான் நிறுத்தப் பட்டிருந்தது. இருவரும் ஒருவருடன் ஒருவர் கதைக்கவில்லை. ஆனாலும் சொல்லி வைத்தது போல, வாகனத்தை விட்டு இறங்கி வருவதுதான் அவர்களை ஆச்சரியப்பட வைத்தது.

இந்த சிறப்பான இயல்புதான் இருவரையும் பல வெற்றிகரமான காரியங்களை செய்து முடிக்க உதவியாக இருந்தது. ஒருவரின் உள்ளத்தில் இருந்து வரும் எண்ணத்தை மற்றவர் தெரிந்து கொள்வது,....இவர்கள் இருவருமே என்ன ஒருவருக்கொருவர் 'ரெலிப்பதி' என்னும் கருத்துப் பரிமாறல் மொழியினைத் தெரிந்து வைத்திருப்பார்களோ என மற்றவர்களை எண்ண வைத்திடும்.

**◊ சி.வி. நாதன் ◊**

"இன்னமும் சில விசாரணைகள்.." நல்லைநாதன் கூற,

விசாரணை என்றது நாயகத்திற்கு என்னவோ போல இருந்தது.

நல்லைநாதனே விசாரணையைத் தொடங்கினார்.

"இராமலிங்கம், உங்கடை மச்சான் பற்றியும் சில தகவல்கள் தேவைப்படுகிறது" என்றவர் தொடர்ந்தார்.

"இராமலிங்கம் உங்கடை மனைவிக்கு ஒரே தம்பியா?"

"ஓம்" என்றார் நாயகம். திலகம் திகைத்துப் போய் நின்றாள். உண்மையிலேயே தம்பி மீதும் ஐமிச்சப்படுகிறார்களா?

"இப்ப இராமலிங்கம் என்ன செய்கிறார்?"

இந்தக் கேள்விக்கு நாயகம் உடனே பதில் சொல்லவில்லை. மனைவியைப் பார்த்தார்.

திலகம் விக்கித்துப் போய் நின்றாள். இவர்கள் இருவரும் என்னத்திற்குத் தம்பியைப் பற்றிக் கேட்கிறார்கள் என்பது அவளுக்குப் புரிந்தது.

"நாங்கள் சும்மா ஒரு தகவலுக்காகத்தான் கேட்கிறோம்" என்ற வச்சிரவேலு, திலகத்தைப் பார்த்து "நீங்கள் உள்ளை போங்கோ. உங்களுக்குச் சங்கடமாக இருக்கும்." என்றார்.

திலகம் என்ன செய்வதென்று தெரியாமல் மெதுமெதுவாக, திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே வீட்டினுள் சென்றாள்.

"சரி இப்ப சொல்லுங்கள்"

"அவன் இப்ப எங்களோடைதான், எங்களுக்கு உதவியாய் இருக்கிறான்."

"அப்படியென்றால் ஏன் நாகராசனை பிள்ளைகளைப் பாக்க வைச்சிருக்கிறியள்?"

"இல்லை, நாகராசன் பிள்ளையளுக்கு பாடங்களும் சொல்லிக்குடுப்பான் எண்டுதான்."

"நாகராசன் பிள்ளைகளைக் கவனிப்பது இராமலிங்கத்துக்கு விருப்பமில்லாமல் இருக்கலாம் தானே? மாமன் தன்னிலை நம்பிக்கையில்லையோ எண்ட எண்ணம் வந்திருக்கும் இல்லையா?" கேள்விகளை நல்லைநாதனே கேட்க, வச்சிரவேலு அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

"அப்பிடி இல்லை. இரண்டு பேரும் ஒண்டாய் படிச்சவங்கள். அதோடை சொந்தக்காரரும். ராமுவுக்கு அப்பிடி ஒண்டும் பொறாமை யில்லை." என்றார் நாயகம்.

"சரி, நாகராசனுக்கும் உங்கடை மச்சானுக்கும் ஏதாவது சண்டை, சச்சரவுகள்.."

"நானறிய ஒண்டுமில்லை. நல்லாய் பகிடி விட்டுச் சிரிச்சுக் கதைச்சுக் கொண்டு இருப்பினம்"

"ம், உங்கடை சொத்துகள் எல்லாம் உங்கடை உழைப்பா இல்லாட்டி..சீதனம் முதுசம் எண்டு..."

நாயகத்திற்குக் கேள்வியின் அர்த்தம் தெரிந்து விட்டது. இது பற்றி ஊரிலை விசாரிக்காமலா விட்டிருப்பார்கள்? என்னிடம் கேட்பதற்கும் ஏதோ காரணம் இருக்க வேண்டும். சொத்துக்காக, அல்லது நாகராசனுடனான கோபங்காரணமாக இராமலிங்கம்தான் ஏதாவது செய்திருப்பானோ என இவர்கள் நினைக்கிறார்களே என நாயகத்தின் நினைவுகள் ஓடின.

"மனிசி சொத்துப் பத்தோடை வந்தவா. எனக்கு முதுசமெண்டு ஒண்டுமில்லை. நான் வந்தாப்பிறகு என்ரை முயற்சியாலைதான் இவ்வளவும் வந்தது. ராமுவுக்கும் போதுமான அளவில் சொத்துப் பத்துகள் இருக்குது" என்றார், நாயகம்.

வச்சிரவேலுவும், நல்லைநாதனும் நாயகத்தைப் பார்த்துக் கொண்டு சிறிது நேரம் நின்றார்கள்.

"தங்கியூ மிஸ்டர் நாயகம்" என்ற வச்சிர வேலு "சரி நாங்கள் போயிட்டு வாறோம்: என்றவர் "உங்கடை மற்ற மகனைக் கவனாய் பாருங்கோ" எனக் கூறிவிட்டு நல்லைநாதனோடு புறப்பட்டார்.

- இன்னமும் வரும்


ஓம் முத்துமாரி அம்மன் ஜோதிடம்

பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்






இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
பிரபல ஜோதிட வல்லுனர்
பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்
மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ், சுவிஸ், நியுசிலாந்து, இலங்கை, அமெரிக்கா, லண்டன் ஆகிய இடங்களுக்குச் சென்று தற்போது முதல் முறையாக கனடா வந்துள்ளார்.

இவர் கைரேகை, சாதகம் ஆகியவை கொண்டு மிகத் துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார்.

துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள்கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வதிவிடப் பிரச்சனைகள் வெளிநாட்டுப் பயணங்கள், எதிரிகள் கண்திருஸ்டி கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் ஒன்றுகூடுதல் இவற்றையெல்லாம் அறிந்துகொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.

Tel: 647-707-8671 / 416-829-4004

5215 Finch Ave., East, Unit # 152 Scarborough, Ontario M1S 0C2 (GTA Square Mall )

Open 7 Days Time: 10:00 Am To 8:00 Pm He can tell you Tamil, Hindi,English, Telugu & Other indian languages

# கொண்டாடுவோம்!

வாழ்க்கை என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும், நான் இப்படித் தான் வாழப் போகிறேன்! "நினைத்தாலே இனிக்கும் (1979)" படம் பார்த்து விட்டு வந்த போது எனது எண்ணம் இப்படித் தான் இருந்தது.

"காலம் சல்லாபக் காலம்
உலகம் உல்லாசக் கோலம்
இளமை ரத்தங்கள் ஊறும்,
உடலில் ஆனந்தம் ஏறும்
இன்றும் என்றும் இன்பமயம்
தித்திக்கத் தித்திக்க பேசிக் கொண்டு
திக்குகள் எட்டிலும் ஓடிக் கொண்டு
வரவை மறந்து செலவு செய்து
உயரப் பறந்து கொண்டாடுவோம்"

இளமையாக ஒரு படம் எடுக்க வேண்டும் என்றால் இந்தப் படம் பார்த்துத் தான் கற்றுக் கொள்ள வேண்டும். எந்தக் கணத்தைத் தொட்டாலும் இசையும் இளமையும் வழிந்த படம்! உலகம் என்னுடையது, நான் வாழப் பிறந்தவன், சந்தோஷம் என் பிறப்புரிமை! - படம் முழுவதும் இந்த அற்புதமான செய்திதான்.

"இனிமை நிறைந்த உலகம் இருக்கு
இதிலே உனக்குக் கவலை எதற்கு
Lovely Birds
புது இளமை இருக்கு வயதும் இருக்கு
காலம் இருக்கு கண்ணீர் எதற்கு Jolly Birds"

படம் முடிந்து வந்தவர்கள் மீண்டும் வரிசையில் நின்றார்கள்! மச்சான் போரடிக்குது "நினைத்தாலே இன்னிக்கும்" பாப்பமா? (ஏற்கனவே நான்கு முறை பார்த்த படம் தான்!) - இனிக்கும் கணங்களை மீண்டும் மீண்டும் சுவைத்தார்கள்! அந்த நிமிடங்களில் உறைந்திருக்க விரும்பினார்கள்! கமல், ரஜினி, ஜெயப்பிரதா, கே.பாலசந்தர் - வேறு யார் வேண்டும்?



"பறந்தால் மேகங்கள், ஓடினால் வானங்கள், பாடினால் கானங்கள், ஆடுவோம் வாருங்கள்" - என்று கூப்பிடும் "Yours Lovingly" இசைக் குழுவின் இளசுகள்: சந்துரு (கமல்), தீபக் (ரஜினி), விசு, கமலாகர் ராவ். இசை நிகழ்ச்சி முடிய அவர்கள் அறைக்குள் திருட்டுத்தனமாக நுழைந்து சந்துருவிடம், "என் இதயத்தில கையெழுத்து போடக் கூடாதா - இங்க..." என்று சொல்லும் மர்ம அழகி சோனா (ஜெயப்பிரதா). "அங்க எல்லாம் பேனா எழுதாது", என்று கமல் அப்பாவி ஆகச் சொல்வது அழகு!

"எங்கேயும் எப்போதும் சங்கீதம் சந்தோஷம் ராத்திரிகள் வந்து விட்டால் சாத்திரங்கள் ஓடிவிடும்"

நிகழ்ச்சி நடத்த இசைக் குழு, சிங்கப்பூர் பயணமாகிறது, அங்கே தொடரும் இளமைக் கொண்டாட்டமும், சோனா- சந்துரு காதலும் தான் படம்!
50% of me WANTS you, 50% of me NEEDS you, 100% of me LOVES you!

படத்தின் மெகா பலம் வசனங்கள். "டைடில்ஸ்" போடும் போது எழுதியவர் "சுஜாதா" என்று வருகின்றது. ஆனால் வசனங்கள் அவரா என்று தெரியவில்லை. மறைந்த எழுத்தாளர் சுஜாதாவுக்கு மின்னஞ்சல் கூட எழுதிக் கேட்டேன். பதிலில்லை! ஆனால் சுஜாதா கதை படிப்பவர்களுக்கு, படத்தின் வாக்கியங்களின் சுருக்கம், குறும்பு, இளமை, அவர் பெயர் சொல்லும்!

விமானத்தில் சிங்கப்பூர் சென்று கொண்டிருக்க, சோனா பக்கத்தில் சந்துரு இருந்து கொண்டு கை ரேகை பார்ப்பதாகச் சொல்லியவாறு: உனக்கு ஒரு சகோதரன், சகோதரி இருக்கணுமே?
சோனா: தப்பு
சந்துரு: ஒரு அப்பா... ஒரு அம்மா.. (இறுக்கமாக இருந்த சோனா சிரிக்கிறாள்)... ஓ.. தப்புத் தப்பா சொல்லுறேனோ, ரேகை எல்லாம் கொஞ்சம் அழிஞ்சு இருக்கு அதான்... (சோனா விழுந்து விழுந்து சிரிக்கிறாள்)
சோனா: (சந்துருவைக் கனிவாகப் பார்த்து) ஐ like you!
சந்துரு அவளைப் பார்த்து, "எனக்கு இதெல்லாம் பிடிக்காது" - ஒரு கணம் சோனா திகைக்கிறாள்!
I love you!

***Love, World will love with you!***

ஆனால் வாழ்க்கை வெறும் இளமை மட்டுமல்ல, கூடவே இறப்பும் நடந்து வருகிறது. சோனாவுக்கு Blood Cancer என்று தெரிய வருகிறது!
You are like a Fountain, Your life is so Uncertain,
மண்ணில் தோன்றும் வாழ்க்கை மின்னல் ஓவியம்
பல வண்ணக் கோலம் சுகமே, விரைகின்ற வேகம் அழகே
பார்க்கும் போதே, வீழும், பாவம்!

சோனா சந்துருவிடம்: ஏய்... இன்னும் என் சாவை பத்தியா நினைச்சுக்கிட்டிருக்கே... Forget it! But. நீயும் நானும் சந்திச்சது, சிங்கப்பூர்ல சுத்தினது, Our Hide and Seek...மூணு வார அனுபவங்கள், இனிமையான நினைவுகள், இதெல்லாம் நினைச்சு பாத்துக்குவோம், then we part..You go to India ...
I go to Heaven ..That is all!
(தொடரும் "நினைத்தாலே இனிக்கும்..." பாடல் ஒரு மறக்க முடியாத பாடல். படம் "ஒரு தேனிசை மழை"! மொத்தம் 14 பாடல்கள் - "பிட்" பாடல்களையும் சேர்த்து!)

ஆகாயத்தில் ஆரம்பம், இதயத்தில் இன்று பூகம்பம்! மீண்டும் சந்துருவும் சோனாவும் இந்தியாவில் சந்தித்துக் கொள்கிறார்கள்.

சோனா: நான் உங்க மியூசிக் குரூபில சேரணும், உன்னோட பாடணும்..
சந்துரு: ஐயயோ.. அப்போ கல்யாணம்..
சோனா: பாடிகிட்டிருக்கிற போதே.... போயிடணும்! சாகிற வரைக்கும் பாட்டு...பாட்டு...பாட்டு!

எவனோ சொன்னானாம், எவளோ கேட்டாளாம்
அதையா நாம கேக்கணும்
நமக்கு நாமே தான், கணக்கு ஒண்ணே தான்
சரியா போட்டுப் பாக்கணும்
புது மனசு, புது வயசு, புது ரசனை எது பெருசு
நம் பொன்னுலகம் நம் கையிலே
பொறந்து வந்தாச்சு, எதையும் பார்த்தாச்சு



**- கிறிஸ்ரி-**

கவலை விட்டாச்சு!

வாழ்க்கை, நம்மில் பலரிடையே குரூரமாக விளையாடி இருக்கிறது! நாம் அதையும் தாண்டி வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறோம். இப்படித்தான் வாழ்வு அமையப் போகிறது என்று கண்ட கனவுகள் கடமைகளிலும், உரிமைகளிலும், ஏக்கங்களிலும் கண் முன்னே கரைந்தது! ஆனால், திரும்பிப் பார்க்கும் போது வாழ்க்கையின் சில பக்கங்கள் எல்லோருக்கும், நினைத்தாலே இனிக்கும்!

**APARTMENTS FOR RENT**



**$250 Move In Bonus**

***Best Building in Scarborough!***
***Clean, family building, FREE parking.***
***Close to schools, bus stop, Tamil store in building.***

**Pl. Call: 416.264.2818**

# உலகம் தட்டையானது சூடான் (தெற்கு) சுதந்திரமாகின்றது

இப்போது பிரபல்யமாக உள்ள பேச்சு சூடானில் நடைபெறும் சர்வசன வாக்கெடுப்பே. தை மாதம் 9ந் திகதியில் இருந்து 15 ந்திகதி வரை நடைபெறும் இச்சர்வசன வாக்கெடுப்பானது Comprehensive Peace Agreement (or CPA), also known as the Naivasha Agreement ன் பிரகாரம் நடைபெறுகின்றது. இரண்டாவது, சூடான் போரினை முடிவிற்கு கொண்டு வந்தபோது ஏற்படுத்திய உடன்பாடின் பிரகாரமே இது நடைபெறுகின்றது.

உலகின் 10வது பெரிய நாடு. சூடான் என்ற பெயர் Bilaad-el-sud என்பதிலிருந்து உருவானது. அரேபிய மொழியில் இது கறுப்பர்களின் நாடு என பொருள்படும். கி.பி 450ம் ஆண்டளவில் கிறிஸ்தவ சாம்ராஜ்யங்கள் உருவாகியுள்ளன. கி.பி 700ம் ஆண்டளவில் முஸ்லீம்கள் பல பகுதிகளை கைப்பற்றியுள்ளனர். 1820களில் தெற்கு சூடானில் மூன்று விதமான தங்கம் இருந்ததாக அரேபிய வியாபாரிகள் கூறுவார்கள். முதலாவது கறுப்புத் தங்கம் - அடிமைகள் (black gold - slaves), வெள்ளைத் தங்கம் - தந்தம் (white gold - ivory) , மஞ்சள் தங்கம் - உண்மையான தங்கம். (yellow gold - real gold). அடிமை வியாபாரத்தில் ஏராளமான தெற்கு சூடானியர் கடத்தப்பட்டு விற்கப்பட்டனர்.

**- ரதன் -**

சூடான் 1956ல் எகிப்து-பிரித்தானிய ஆட்சியில் இருந்து சுதந்திரம் பெற்றது. இலங்கையைப் போன்று சுதந்திரத்தின் வடக்கும், தெற்கும் தொடர்ச்சியாக பிரச்சினைகள் இருந்து வருகின்றன. தொடர்ச்சியாக உள் நாட்டு யுத்தம் நடைபெற்றது. வடக்கு சூடானில் வாழும் மக்கள் பெரும்பாலானோர் அரேபியர் முஸ்லீம்கள், தெற்கில் 200க்கு மேற்பட்ட இனக் குழுக்கள் உள்ளன. இவர்களது உத்தியோகபூர்வ மொழி ஆங்கிலம். இவர்கள் இரண்டு பிரதான மதங்களை கடைப்பிடிக்கின்றனர். ஒன்று Animism மற்றையது கிறிஸ்தவம். சூடானின் எண்ணெய் உற்பத்தியின் 85 வீதமான எண்ணெய் தெற்கிலேயே உற்பத்தியாகின்றது. இன்று வெளிநாட்டு எண்ணெய் நிறுவனங்கள் இங்கு எண்ணெய் கிணறுகளை சொந்தமாக்கியுள்ளன. சீனாவின் China National Petroleum Corporation 40 வீதத்தையும், மலேசியாவின் Petronas with 30%, இந்தியாவின் Oil and Natural Gas Corporation 25 வீதத்தையும் சொந்தமாக்கியுள்ளன. (1,2,4 ம் பிரிவுகளில்).

முதலாவது போர் First Sudanese Civil War (1955–1972) இது மூன்று பிரிவுகளாக நடைபெற்றது. முதலாவது கொரில்லா யுத்தம் இரண்டாவது Anyanya மூன்றாவது தெற்கு சூடான் விடுதலை இயக்கம் ஆகிய பிரிவுகளாக இப்போர் நடைபெற்றது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு காலத்தைப் பிரதிபலிக்கும். பிரித்தானியர் சூடானுக்கு சுதந்திரம் கொடுத்த போது தெற்கையும், வடக்கையும் ஒற்றை ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர். 1972ல் ஏற்படுத்தப்பட்ட The Addis Ababa Agreement தெற்கு சூடானுக்கு முழுமையான சுயநிர்ணய உரிமையை அளித்தது. பொலிஸ் போன்ற பாதுகாப்பு படைகளும் அமைக்கப்பட்டன. 10 ஆண்டுகள் நீடித்த இந்த சமாதானம் வடக்கின் தொடர்ச்சியான அரேபியனிசம், இஸ்லாமியசம் (Islamization and Arabization) ஆகியவற்றால் பாதிப்புக்குள்ளானது. தெற்கில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட எண்ணெய் நிலங்களை இஸ்லாமிய சட்டத்தின் கீழ் தனதாக்கி கொண்டது. 1983ல் சூடானிய இராணுவம் மீண்டும் தெற்கை நோக்கி தாக்குதலை தொடர்ந்தது. சூடானின் மொத்த சனத்தொகையில் 61 வீதமானோர் ஆபிரிக்கர், 31 வீதமானோர் அரேபியர்.

Second Sudanese Civil War in 1983 இரண்டாம் உலகப் போரின் பின்னர் நடைபெற்ற மிக மோசமான போர் இது. சுமார் 2 மில்லியன் மக்கள் கொல்லப்பட்டனர். Sudan People's Liberation Army (SPLA) 1983 ல் ஆரம்பிக்கப்பட்டது. 1996ல் அமெரிக்கா எரித்திரியா, எதியோப்பியா, உகண்டா ஊடாக சுமார் 20 மில்லியன் டொலர்கள் பெறுமதிமிக்க இராணுவ உபகரணங்களை தெற்கிற்கு அனுப்பியது.




"historical diversity" and "contemporary diversity ஆகிய இரு பிரிவுகளில் சூடானின் அரசியல் பிரச்சினையை ஆய்வு செய்யலாம். பழைய சூடான் இரு பிரிவுகளாக தோன்றின. பழமைவாதிகளின் 'பழைய சூடான்', National Isalamic Front ன் ஜேகு சூடான். SPLM ன் புதிய சூடான் ஆகிய பிரிவுகள் தோன்றின. 1991ல் தெற்கு சூடானின் முக்கிய நகரமான ஜுபாவைக் கைப்பற்றியதன் மூலம் SPLM புதிய சூடானில் முதலடியை தொடங்கியது. 1995-1996 பகுதிகளில் பல பகுதிகளை கைப்பற்றியது.

## சூடான் வரலாற்றுக் குறிப்புக்கள்

1956 - சுதந்திரம்.
1955 - 1972 சூடானின் உள்நாட்டு கலவரம்
1958 - முதலாவது இராணுவ ஆட்சி
1964 - தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டது. இடது சாரிகளின் பொது வேலை நிறுத்ததை தொடர்ந்து
1969 - இரண்டாவது இராணுவ ஆட்சி (Jaafar Numeiri)
1971 - இடது சாரி தலைவர்கள் தூக்கிலிடப்பட்டனர். ஜனாதிபதி நியுமெரிக்கு எதிராக செயல்பட்டமைக்காகவே தூக்கிலிடப்பட்டனர்
1972 - சமாதானம் கையொப்பமிடப்பட்டது
1978 - புதிய எண்ணெய் நிலங்கள் தெற்கு சூடானில் கண்டுபிடிக்கப்பட்டன (Bentiu)
1983 - நியுமெரி இஸ்லாமிய சட்டத்தின் கீழ் (Islamic Sharia law) தெற்கு எண்ணெய் நிலங்களை அரசுடமையாக்கினார்.
1983 - இரண்டாவது உள்நாட்டு யுத்தம் ஆரம்பமானது. Sudan People's Liberation Movement (SPLM) John Garang தலைமையில் போரிட்டது.
1985 - மூன்றாவது இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டது.
1989 - நான்காவது இராணுவ ஆட்சி Al-Bashir தலைமையில் அமைக்கப்பட்டது. Islamic Front (NIC)
1995 - எகிப்திய ஜனாதிபதி முபராக்கின் கொலைக்கு சூடான் காரணம் என அமெரிக்கா குற்றஞ்சாட்டியது
1998 - மீண்டும் அமெரிக்க சூடான் அல்கைடாவின் உதவியுடன் இரசாயன ஆயுத தொழிற்சாலை சூடானின் தலைநகரத்தில் தொடங்கியதாக குற்றஞ்சாட்டியது.
2001 - கடும் வறுமை சுமார் மூன்று மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டனர்.
2002 - சமாதான உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. சூடானிய அதிபர் Al-Bashir, Sudan People's Liberation Movement (SPLM) John Garang ஐ சந்தித்தார்.
2004 - 2007 இந்த நூற்றாண்டின் மிக மோசமான இன அழிப்பு Darfur பகுதியில் இடம் பெற்றது. மூன்று லட்சம் மக்கள் கொல்லப்பட்டனர். சுமார் 30 லட்சம் மக்கள் நாட்டை விட்டு வெளியேறினர்.
2009 - சூடானிய அதிபரை கைது செய்ய ஐ.நா உத்தர விட்டது. திட்டமிட்ட இன அழிப்புக்கு எதிராக எடுக்கப்பட்ட முதல் நடவடிக்கை இது.

On 14 July 2008, the Prosecutor filed ten charges of war crimes against Sudan's incumbent President Omar al-Bashir, three counts of genocide, five of crimes against humanity and two of murder. After an arrest warrant was issued for the Sudanese president in March 2009....

2009 - மீண்டும் ஒரு போரை தவிர்க்கும் முகமாகவும் தெற்கின் தாக்குதல்களை தடுக்குமுகமாகவும் சர்வசனவாக்கெடுப்புக்கு வடக்கு திகதியை தீர்மானித்தது.
2011 - தெற்கு சூடானின் சுதந்திரத்துக்கான சர்வசன வாக்கெடுப்பு இடம் பெற்றது. நாட்டை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் வாழ்வோரும் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர்.

கிட்டத்தட்ட இலங்கையை ஒத்த பிரச்சினையைக் கொண்ட தெற்கு சூடானின் புதிய உதயத்திற்கு மேற்கத்திய நாடுகளின் ஆதரவும் தொடர்ச்சியாக இருந்தமை ஒரு பிரதான காரணம். ஒரு கட்டத்தில் தெற்கின் SPLM தலைவர் மத்திய ஆட்சியில் உதவி அதிபராகவும் இருந்தார். சகல விதமான சமாதான உடன்பாட்டுக்களுக்கும் வளைந்து கொடுத்தே இன்று இந்த நிலையை அடைந்துள்ளனர். தெற்கினர் பெரும்பான்மையினர். அதிக எண்ணெய் வளங்களையும் கொண்டுள்ளனர். பலருக்கு இந்த எண்ணெய் மேல் கண். பல மேற்கத்திய நாடுகள் சீனாவை பின் தள்ளி உள்ளே நுழைய காத்துள்ளன. அதே சமயம் இனப்படுகொலைகள் அதிகமாக நடந்த டாபூர் போன்ற பிரதேசங்கள் தனிப்பிரதேசமாக இயங்க முயற்சித்து வருகின்றன. தெற்கின் வெற்றி இவர்களுக்கு ஒரு ஊக்க மருந்தே. வடக்கு தொடர்ச்சியாக ஏனைய பகுதிகளை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாத நிலை உருவாகியுள்ளது. இது தொடரின் சூடானில் பல புதிய நாடுகள் உருவாகும்.

தமிழர்களைப் போல் சுதந்திரம் பெற்ற நாளில் இருந்து இன்னல்களை அனுபவித்த இவர்கள் இன்னும் சில நாட்களில் சுதந்திர பிரசைகளாக உலாவரவுள்ளனர். இலங்கையிலும் ஒரு சர்வசன வாக்கெடுப்புக்கான முன்னெடுப்பு செய்யப்படுமாயின் புலம் பெயர் மக்கள் வாக்களிக்க அனுமதிக்கப்படுவார்களா? இது போன்ற பல கேள்விகளுக்கு நாங்கள் விடை காண வேண்டும். எங்கும் எதுவும் சாத்தியம் என்பதை சூடான் உணர்த்தியுள்ளது. ஐ.நாவால் போர்க் குற்றவாளியான சூடான் அதிபர் பல நாடுகளுக்கு சுதந்திரமாக பயணம் செய்வதும் 'எங்கும் எதுவும் சாத்தியம்' என்பதை உறுதிப்படுத்துகின்றது



# பொன்னர் - தம்பர்

## எழுதுவது கனகர்



தம்பர்: தம்பி. வா, வா, வா. உன்னட்டை ஒரு விசயம் கேட்கவேணும் தம்பி.

பொன்னர்: அதென்னண்ணை அப்படித்தலை போகிற விசயம்.

தம்பர்: தலைபோகிற விசயமில்லைத் தம்பி இது கால் போகிற விசயம்.

பொன்னர்: அதென்னண்ணை புதுமையாக இருக்கிறது. கால்போகிற விசயம்.

தம்பர்: தம்பி பேப்பர் வாசிக்கிறேல்லைப் போலயிருக்கு. அதுசரி நாளொன்றுக்கு ஒரு புதுப் பேப்பர் எண்டால் எதைத் தான் வாசிப்பது. இது இங்கிலீஷ் பேப்பர் தம்பி. சென்ற கிழமை 'Toronto Star' பத்திரிகையில் ஒரு நாய் பற்றிய செய்தி வந்ததே தம்பி. படிக்கேல்லையோ?



பொன்னர்: அதுதானே அண்ணை அந்த லெக்சி என்ற நாய் சம்பந்தமானது தானே. சுத்திச் சுத்திச் சுப்பற்றை கொல்லேக்கை அல்லோ அண்ணை நிக்கிறியள்.

தம்பர்: அது என்ன தம்பி சுப்பற்றை கொல்லேக்கை.

பொன்னர்: அதுதான் அண்ணை. இதுவும் தண்டுக்கலம் பற்றியது தானே அண்ணை.

தம்பர்: தம்பி இந்த நாய்க்கு இப்போ ஏழு வயதாம். பொதுவாகவே இந்த வகை நாய்களின் ஆயுசு 10 வருஷம் தான். அப்படிப் பார்த்தால் இந்த நாய் இப்போ முதுமையை அடைந்து விட்டதுதான் என்றே கருத வேண்டும். அப்படித்தான் இருந்தது. சென்ற ஒக்ரோபர் மாதம் இந்த நாய் நடப்பதற்குக் கூடக் கஷ்டப் பட்டதாம். நாயின் சொந்தக்காரி இதனை நடக்க வைக்கப்பெரும் பாடுபட்டாராம்.

பொன்னர்: அண்ணை இந்த முதுமை என்ற பதம் கொஞ்சம் சிக்கலானது. இது நாள் வரை உடல் வாகினால் முதியவர் போல இருந்தாலும் உள்ளதால் இளைஞராக உள்ளார் என்று சிலரைப்பற்றிக் கூறுவார்கள். ஆனால் அப்படிச் சொல்வதை அடுத்த தலைமுறையில் மாற்றி அவர் உள்ளத்தால் தான் முதியவர் உடல்வாகினால் இளைஞராக உள்ளார் எனக் கூறுவார்கள் பாருங்கோ. நாங்கள் கொஞ்சம் அவசரப் பட்டுப் பிறந்து விட்டோம் போல இல்லையா அண்ணை.

தம்பர்: நாம் என்ன செய்யலாம் தம்பி. எமது அப்பர் அம்மாக்கள் செய்த வினை தம்பி. அது சரி இந்த நாயினைப் பற்றிக் கூறேன்.

பொன்னர்: அண்ணை பொதுவாகவே வயது போனதும் ஏற்படுகின்ற நோயான மூட்டு சிதைவு நோய் (degenerative joint disease) மற்றும் இருபுற இடுப்பு சிதைவு (bilateral hip dysplasia) ஏற்பட்டமையால் அதனாலே நடப்பதற்கு முடியால் போய்விட்டது. நடக்கும் பொழுது ஏற்படுகின்ற வலியினால் அதனால் நடப்பது கஷ்டமாகிவிட்டது. நாயின் சொந்தக்காரிக்கோ நாயுக்குத் தேவையான அப்பியாசம் கொடுக்க வேண்டும். எனவே நடக்க வைக்க வேண்டும் என்ற பிரச்சினை. அவர் நட என்றால் அது மாட்டேன் என்றது. இதனால் இருவருக்குமிடையே தீராத பிரச்சினையாகியது. இதைத்தான் நாய் படாத பாடு என்கிறார்களோ.

தம்பர்: அந்த நாயின் சொந்தக்காரி பாவம் ஏதாயினும் விளங்கிற்றா?

பொன்னர்: நாயுக்கு நல்ல காலம் இருந்தது. அம்மையார் அருகே உள்ள மிருக வைத்தியசாலையில் வேலை செய்பவர். ஆகவே அங்கே எடுத்துச் சென்றுள்ளார். மிருக வைத்தியர் அதன் பின் காலை நீட்ட வைக்க முனைந்த பொழுது அது குய்யோ முறையோ என கதறத் தொடங்கி விட்டது. மேற்கொண்டு பரிசோதனைகள் நடத்திய பொழுதுதான் அதற்கான காரணம் எது எனப் புலனாகியது.

தம்பர்: அதுதானே தம்பி. நாங்களும் மூட்டுக்கை பிடிக்குது நடக்கக் கஷ்டமாக இருக்குது எண்டு போனால் (Osteoarthritis) எனக் கூறி குளுக்கோஸ் ஏமையின் (Glucose amine) எடுத்தால் நோக்குறையும் என்கிறார்கள். அப்போ இந்த நாய்க்கும் அதைக் குடுத்திருப்பார்களோ.

பொன்னர்: இல்லை அண்ணை. முதல் முறையாக இந்த நாயினுக்குத் தண்டுக்கல வைத்தியம் செய்துள்ளார்களாம்.

தம்பர்: தம்பி தண்டுக் கலத்துக்கு எங்கே போனார்கள். தம்பி இந்த நாயின்ரை தொப்புள் கொடியினை யார் தம்பி சேகரித்து வைச்சார்கள். அல்லது இன்னொரு நாயின்ரை கருக்கட்டிய முட்டையல்லவா தேவை. அப்படித்தானே நீ சொன்னாய். தம்பி நீ சொன்னது எல்லாம் என்ரை மண்டைக்குள்ளே செம்மையாய் நிற்கிறது. நான் சொன்னது சரியோ இல்லையோ தம்பி?.

பொன்னர்: மெத்தச் சரி அண்ணை. ஆனால் இங்கே இன்னொரு புதிய முறையினைக் கையாண்டுள்ளார்கள் அண்ணை.

தம்பர்: என்ன தம்பி கயிறு விடுகிறாய். வேறு எங்கே தண்டுக்கலத்துக்குப் போவதாம்?

பொன்னர்: அண்ணை நான் உங்களுக்குச் சொல்லாதது பிழை தான். அண்ணை தண்டுக் கலங்கள் இரண்டு வகைப்படும். ஒன்று முளையத் தண்டுக்கலங்கள் கருக்கட்டிய முட்டையிலிருந்து பெறப்படுவது (embryonic stem cell) மற்றது நிறைவுடலி தண்டுக்கலம் (Adult stem cell). எமது உடல் பகுதிகள் எங்கும் இவை உள்ளன. அங்கங்கே ஏதேனும் சிதைவு ஏற்பட்டால் இங்கலங்கள் தான் அதனை ஈடு செய்கின்றன. எமது உடலிலே சில இடங்களில் கொழுப்பு சேகரிக்கப்படுகிறது



என்பது தெரியுந்தானே அண்ணை. இந்தக் கலங்கள் அதிகம் வியத்தமடையாத கலங்கள். அவற்றின் தொழில் கொழுப்பினைச் சேகரித்து வைப்பது மாத்திரமே. ஆகவே ஏனைய கலங்கள் யாவும் அவை அவை ஆற்ற வேண்டிய தொழில்களுக்கேற்ப வியத்தமடைகின்ற பொழுது கொழுப்புக் கலங்கள் பெரும் அளவில் வியத்தம் அடையாமல் உருவான நிலையினைப் பேணியபடியே காணப்படுகின்றன. ஆகவே இவற்றினை எடுத்து அவற்றின் உள்ளே உள்ள கொழுப்புப் படிமங்களை அகற்றினால் அக்கலங்களைத் தண்டுக் கலங்களாக உபயோகிக்க முடியும் என உயிரியல் விஞ்ஞானிகள் கண்டுள்ளார்கள் அண்ணை.

தம்பர்: சரி சரி விசயத்துக்குவா தம்பி.

பொன்னர்: பொதுவாக தோலினுக்குக் கீழே மற்றும் உள் உடலுறுப்புகளை இணைக்கும் மென் சவ்விலேதான் கொழுப்புக் கலங்கள் இருக்கும். இந்த நாயின் தோள் பட்டைப் பகுதியிலே தோலின் கீழே உள்ள கொழுப்புக் கலங்களை எடுத்துள்ளார்கள். இந்தக் கலங்களில் தேக்கிவைக்கப் பட்ட கொழுப்பினை அகற்றியுள்ளார்கள். இப்போ இக்கலங்கள் வெறுமனே எளிமையான தண்டுக் கலங்கள் ஆகின்றன.

தம்பர்: செப்படி வித்தைதான் போ.

பொன்னர்: இப்படி எடுக்கப்பட்ட கலங்களை பின்னர் லெக்சியின் வலது பின்னங்கால் மூட்டின் ஊடாகக் குருதியுள் செலுத்தினார்கள். செய்து இப்போ மூன்று மாதங்கள், வெறும் 90 நாட்கள். லெக்சி எப்படி உள்ளது தெரியுமா?

தம்பர்: என்ன மாயம் நடந்தது தம்பி?

பொன்னர்: மூன்று மாதத்துக்கு முன்னர் அருவினைக்கு ஆத்தாமல் சொந்தக்காரியுடன் நடந்து அவர் ஓரளவுக்கு இழுத்துக் கொண்டு போக வேண்டிய நிலையில் இருந்த லெக்சி இப்போ துள்ளிக் கொண்டு, 'வா நடக்கப் போவோம்' என்று கேட்காத குறையாக அந்த அம்மாளுக்கு முன்னர் வீறு நடை போடுகிறது. இப்போ அம்மா தான் இழுபடுகிறாராம்.

தம்பர்: அப்போ மீண்டும் இளமை பேர்ந்து விட்டது என்கிறியா தம்பி.

பொன்னர்: ஓம் அண்ணை மீண்டும் இளமையூட்டல் என்பார்கள். (Rejuvination). இந்த நாயினுக்கு தொடைமூட்டில் இருந்த குறை மாத்திரம் நீங்கி விட்டது என்று எண்ணாதீர்கள் அண்ணை. இந்த நாயினுக்கு இன்னொரு வருத்தமும் இருந்ததாம். அதற்கு இடையிடையே வயிற்றோட்டமும் வாந்தியும் ஏற்பட்டு அதற்கான மருந்து எடுத்துக் கொண்டிருந்தது. இப்போ என்னடா என்றால் அந்த வருத்தம் போன இடமே தெரியவில்லை. எப்படி இருக்குது அண்ணை கதை?

தம்பர்: தம்பி இந்த நாய் இனத்துக்கு ஆயுசு சுமார் 10 வருடங்கள் என்று சொன்னாய். இப்போ அதற்கு ஏழு வயது. அப்படி என்றால் அது இன்னும் எத்தனை வருடம் உயிர் வாழும் சாத்தியம் இருக்கு தம்பி.

பொன்னர்: அண்ணை இது பற்றி எல்லாம் என்னாலை ஆருடம் சொல்ல முடியாது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். அந்த நாயினுக்கு மீண்டும் இளமையூட்டப் பட்டுள்ளது. ஆகவே அது நிச்சயமாக 10 வருடங்களுக்கு மேல் உயிர் வாழக் கூடிய சாத்தியம் உள்ளது எனலாம்.

தம்பர்: பிறகென்ன தம்பி. நாங்களும் துள்ளித் திரியலாம் போலை. எங்கள் பாடு பரவாயில்லை.




பொன்னர்: மனிதருக்கு இப்போ சில நோய் மருத்துவம் தண்டுக் கலங்கள் மூலம் செய்யப்பட்டு வருகிறது உண்மை. ஆனால் நிச்சயமாக மிகக் குறுகிய காலத்தில் மனிதருக்கும் மீண்டும் இளமையூட்டல் ஒரு தொழிலாகவே ஆரம்பிக்கப் படலாம் அண்ணை.

தொடர்ச்சி 37ம் பக்கம்

219

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



'ஏர்முனைக்கு நேரிங்கே எதுவுமேயில்லை'
பொங்கலோ... பொங்கல்
பொங்கலோ... பொங்கல்
பொங்கலோ... பொங்கல்..

வானொலி தொலைக்காட்சிகளில் விளம்பரங்களும் விசேட ஒலிபரப்பு, ஒளிபரப்புகளும்.




வேலைக்குப் போனவர்கள்தவிர மற்றவர்கள் மாறி மாறி பொங்கல் வாழ்த்துக்கள் தெரிவித்துக்கொண்டிருந்தனர்.



உலகருக்கு வந்த வாழ்த்துக்களைவிட..... செக்கண்ட் புளோர் செல்லம்மா ஆட்டிலறி அன்னம்மாவுக்கு வந்த வாழ்த்துக்கள் தான் கூட. ரெலிபோன் பில் முந்தித்தான். வெளிநாட்டு காசு கூட என்று. ஆனால் இப்போ விதவிதமான ரெலிபோன் டீல்.. வெளிநாட்டுக்கோல் எவ்வளவும் கதைக்கலாம். செக்கண்ட் புளோர் செல்லம்மாவும் ரூபியும் ரீ.வி. எல்லாச் சனலையும் மாற்றி மாற்றி நிமூட்டில் கைவிரல் பலத்தைக் காட்டிக்கொண்டிருந்தனர்.





தாமோதரமும் பிராங்பேட் பேரம்பலமும் ஐயப்பன் மாலை போட்டு சபரிமலை சென்றனர். அவர்கள் எங்காவது தெரிகிறார்களா என்று ரீ.வியில் அங்குமிங்கும் தேடினர். தைப்பொங்கல் அமளி ஒருபக்கம், ஐயப்பன் மகரஜோதி ஒருபக்கம்.

வெண்பொங்கலும் சாம்பாருடனும் உலகர் குழுவினரின் பொங்கல் இனிதே முடிந்தது. அவல் சக்கரைப்பொங்கல் தணிக்கையாகிவிட்டது. ஆட்டிலறி அன்னம்மாவுக்கும் செக்கண்ட் புளோர் செல்லம்மாவுக்கும் மெடிக்கல் செக்கப்பில் சுகர், கொலஸ்ரரோல் தலைவிரித்தாடத் தொடங்கிவிட்டது. உலகர் சாப்பிடும்போது உலகண்ணை கவனம் கவனம் எனப் பகிடிவிட்ட ஆட்டிலறி அன்னம்மாவும் செக்கண்ட் புளோர் செல்லம்மாவும் சாப்பிடும்போது பயந்தபடி-

தான். அதிலை சுகர், இதிலை கொலஸ்ரரோல் என பல ஆராச்சி...



பத்திரிகைகளில் வந்த யோகாசனம், உணவுக்கட்டுப்பாடு என பத்திரிகைகளை தேடித்தேடி வாசிப்பது, சீரியல் நாடகங்கள்கூட பார்க்காமல் வீட்டுக்குள்ளேயே நடப்பது...

தடிமனும் தலையிடியும் தனக்குத்தனக்கு வந்தால்தான் தெரியுமென்பார்கள்.



முருகேசர் மெல்ல மெல்ல தடியூண்டியபடி உலகர் வீட்டுக்குள் நுளைந்தார். ரூபி ஓடிப்போய் வாங்கோ வாங்கோவென கூட்டிக்கொண்டு வர ஏன் முருகேசண்ணை தனிய வந்தனீங்கள்? பிள்ளையளெங்கையெண்டு முருகேசரின் கண்களிலிருந்து கண்ணீர்த்துளிகள் ரூபியின் கைகளில் வீழ்ந்ததை உலகரும் செக்கண்ட்புளோர் செல்லம்மாவும் கவனிக்கத் தவறவில்லை..

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்பார்கள். துங்கும் நேரத்தில் வேலை, சாப்பிடும் நேரத்தில் வேலை....

கலை கலாசார சமய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள நேரமில்லை உறவினர்களின் நன்மை தீமைகளில் கூட கலந்துகொள்ள நேரமில்லை. தம்மைச்சுற்றி என்னநடக்கு தென்பதே பலருக்குத் தெரியாது...

பிள்ளைகளுக்காக டேகெயர் மியூசிக்கிளாஸ் அது இது என பெற்றோர்கள் ஓடியளவிற்கு பிள்ளைகள் பெற்றோர்களுக்காக ஓடித்திரிகிறார்களா..? பெற்றோர் தம் கடமைகளை செய்துள்ளனர். ஆனால் பிள்ளைகள்..??



உலகர் செய்திகளை வாசித்துக்கொண்டிருந்தார். செய்தியை வாசித்து தனக்குள்தானே சிரித்தார். முக்கியஸ்தர்களின் பிள்ளைகள் பரீட்சை எழுத (ஏ.சீ.) எயர் கொண்டிசன் ஒழுங்குசெய்து குடுத்தவையாம் வேர்க்க விறுவிறுக்க கடும் கோடையில் படித்துப் பரீட்சையெழுதி பட்டதாரியானவர்கள் எத்தனைபேர் ஆனால் எனச் சொல்லிச்சிரிச்சா செக்கண்ட்புளோர் செல்லம்மா அற்பனுக்குப்பவிசு வந்தால்.. அர்த்தராத்திரியில் குடைபிடிப்பாரென்பார்கள்



பட்டிப்பொங்கல் - ஜனவரி - 15
தைப்பூசம் - ஜனவரி - 20
மகாத்மா காந்தி நினைவு தினம் - ஜனவரி-30

தம்பர்: தம்பி தண்டுக்கல மருத்துவம் (Stem cell therapy) என்றால் என்ன அர்த்தம் தம்பி.

பொன்னர்: அண்ணை குறிப்பிட்ட ஒரு அங்கத்திலோ அல்லது அங்கத் தொகுதியிலோ ஏதாயினும் பாதிப்பு ஏற்பட்டால், சில தண்டுக்கலங்களை அங்கு செலுத்தி அந்த பாதிப்பினை நிவர்த்தி செய்தல் தான் அண்ணை. எப்பொழுதும் நான் ஏற்கனவே கூறியவாறு முளையத் தண்டுக்கலங்கள் அல்லது நிறைவுடலி தண்டுக்கலங்கள் மூலம் அதனை செய்லாம். முளையத் தண்டுக்கலங்கள் பாவித்தால் இழைய எதிர்பினுக்கான மருந்துகளும் எடுக்க வேண்டி வரும்.

தம்பர்: கனடாவிலே இந்தத் தண்டுக்கல மருத்துவம் எந்த அளவினுக்கு முன்னேறியள்ளது.

பொன்னர்: பெரிய முன்னேற்றம் என்று சொல்ல முடியாது. பல்துறைகளில் தண்டுக்கல மருத்துவம் உபயோகிக்கப்பட்டாலும் ஒழுக்கவியல் ரீதியாக முளையங்களிருந்து தண்டுக்கலங்களைப் பெற்று உபயோகிப்பது பெரிய அளவினிலே அங்கீகாரம் பெற்றுள்ளதாகச் சொல்ல முடியாது.

தம்பர்: தம்பி சீனாவிலே இந்தத் துறையில் அதிக முன்னேற்றம் கண்டுள்ளதாகக் கதை அடிபடுகிறதே.

பொன்னர்: ஆம் அண்ணை கனடாவிலோ அல்லது மேற்குலகு நாடுகளிலோ அங்கீகாரம் பெறாத தண்டுக்கல மருத்துவம் சீனாவிலே அரச அங்கீகாரத்துடன் செய்யப்பட்டு வருகிறது. அதனால்தான் இன்னும் சில வருடங்களில் மீண்டும் இளமையூட்டல் என்பது சீனாவில் வைத்தியசாலைகளிலே நடைபெறும் அன்றாட நிகழ்ச்சியாக அமையும் என்பதில் ஐயமில்லை.



தம்பர்: இப்போ சொல்கிறார்களே தம்பி Medico Tourism என்று. அப்போ இன்னும் சில வருடங்களில் சீனாவை நோக்கியும் மேற்குலகத்தவர்கள் படை எடுப்பார்கள் போல.

பொன்னர்: அண்ணை இப்போ தொடக்கம் காசைச் சேர்க்கத் தொடங்கினால் நீங்கள் கூட இளந்தாரியாக மீண்டும் கனடா வரலாம்.

தம்பர்: பார்ப்பம். எங்களுக்கும் காலம் வரும்.

# சினிமாவுக்கு வரவில்லை என்றால்?







| | | |
|---|---|---|
| நடிகர் சிவக்குமார் | - | ஓவியர் |
| நடிகர் ஜெய்கணேஷ் | - | காய்கறி வியாபாரி |
| தயாரிப்பாளர் கே.ஆர்.ஜி. | - | சிட்பண்ட்ஸ் அதிபர் |
| நடிகர் டெல்லி கணேஷ் | - | ராணுவ வீரர் |
| நடிகர் கே.விஜயன் | - | ரெயில்வே ஒர்க்ஷாப் ஊழியர் |
| நடிகர் பூர்ணம் விஸ்வநாதன் | - | வானொலி அறிவிப்பாளர் |
| பாடலாசிரியர் புலமைப்பித்தன் | - | பள்ளி தலைமை ஆசிரியர் |
| நடிகர் சாருஹாசன் | - | வக்கீல் |
| தயாரிப்பாளர் முக்தா சீனிவாசன் | - | அலுவலக டைப்பிஸ்ட் |
| நடிகை காஞ்சனா | - | ஏர் ஹோஸ்டஸ் |
| நடிகை வடிவுக்கரசி | - | ஹோட்டல் வரவேற்பாளர் |
| பாடகி கமலாகாமேஷ் | - | மெல்லிசை பாடகி |
| நடிகர் நாகேஷ் | - | ரெயில்வே குமாஸ்தா |
| இயக்குநர் பாலசந்தர் | - | அக்கவுண்டென்ட் |
| நடிகர் அசோகன் | - | ஓட்டல், போட்டோ ரிசப்ஷனிஸ்ட் |
| நடிகர் ஜெமினி கணேசன் | - | உதவி பேராசிரியர் |
| தயாரிப்பாளர் ஏ.வி.மெய்யப்பன் செட்டியார் | - | சைக்கிள் கடைக்காரர் |
| நடிகர் வி.எஸ்.ராகவன் | - | சுங்க இலாகா அதிகாரி |

# நாதாலயாவின் 22ஆவது ஆண்டுவிழா

வயலின், வாய்ப்பாட்டு போன்ற நுண்கலைகளை எம் சிறுவர்களுக்கு கற்பிப்பதற்காக 1988 ஆம் ஆண்டில் ஸ்காபரோவில் ஆரம்பிக்கப்பட்ட கல்விக்கூடமாகிய “நாதாலயா” (இசைக்கோவில்), தனது 22 ஆவது ஆண்டு நிறைவு விழாவை மார்கழி மாதம் 18 ஆம் திகதி கனடா கந்தசாமி கோவில் கலையரங்கில் சிறப்பாகக் கொண்டாடியது.



நாதாலயாவின் 22 ஆவது ஆண்டு நிறைவு விழா மாலை 6:00 மணிக்கு ஆரம்பமானது. இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக திரு. சின்னத்துரை கந்தசாமி அவர்கள் வந்திருந்தார். விழா முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து, கனடா தேசிய கீதம் மற்றும் நாதாலயாவின் கல்லூரி கீதம் என்பவற்றை நாதாலயாவின் மாணவர்கள் இசைத்ததுடன் ஆரம்பமானது. தாயகத்தில் உயிர் நீத்தவர்களுக்காக இரண்டு நிமிட அமைதி வணக்கம் செலுத்தப்பட்டது.

இவற்றை தொடர்ந்து நாதாலயாவில் இசைக்கல்வி பயின்று தற்போது இளம் ஆசிரியராக இருக்கும் வெண்ணிலா விக்னேஸ்வரன் கல்லூரியின் விழாவிற்கு வருகை தந்திருந்தோரையும் பிரதம விருந்தினரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார். வெண்ணிலா விக்னேஸ்வரன் கல்லூரியின் 22 ஆவது நிறைவு விழாபற்றி சபையோருக்கு விளக்கினார். அதன் பின்னர் நாதாலயாவின் மாணவர்களின் இசைக் கச்சேரியும், வயலின் கச்சேரியும் நடைபெற்றன. நாதாலயாவின் மாணவன் சிந்துஜன் ஜெயபாலன் இசையைப்பற்றியும் அதனால் எமக்கு வரும் நன்மைகள் பற்றியும் உரையாற்றினார். இவற்றைத் தொடர்ந்து நாதாலயாவின் இன்னொரு மாணவர் குழுவினரின் இசைக்கச்சேரியும், வயலின் கச்சேரியும் நடைபெற்றன.

இவற்றை தொடர்ந்து பிரதம விருந்தினர் திரு. சின்னத்துரை கந்தசாமி அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் கலையின் ஒரு பகுதி இசை. நெல்லு, இசையுடன் வளர்வதற்கும் சாதாரணமாக வளர்வதற்கும் இடையில் நிறைய வித்தியாசம் உண்டு. கருவில் இருக்கும் குழந்தை இசைகேட்டு வளர்வதற்கும் சாதாரணமாக வளர்வதற்கும் இடையேயும் நிறைய வித்தியாசங்கள் குழந்தையின் அறிவு விருத்தி குண இயல்புகளில் ஏற்படுகிறது. எல்லா மாணவர்களும் தமது பாடசாலைக்கல்வியுடன் ஏதாவது ஒரு இசைப்பயிற்சி செய்தல் வேண்டும் என்றார்.

பிரதமர் விருந்தினர் உரையை தொடர்ந்து சிவகௌரி சிவநாதன், அவரது தங்கை சிவசங்கரி சிவநாதனுடன் சேர்ந்து வயலின் கச்சேரி செய்தார். இவர்கள் வயலினில் தியாகராஜ சுவாமிகளின் பஞ்சரத்ன கீர்த்தனையை இசைத்தார்கள். இதைத் தொடர்ந்து நாதாலயாவின் மாணவனின் தாய் திருமதி. ஜெயக்குமாரன் உரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் தனக்கு நாதாலயாவின் அதிபர் ஸ்ரீமதி விஜயலஷ்மி சீனிவாசகத்தை எட்டு ஆண்டுகளாக தெரியும் எனவும் அவர் மாணவர்களை கரிசனையுடனும் கண்டிப்புடனும் நடத்துபவர், பிள்ளைகளின் தகுதிபற்றி பெற்றோருக்கு மிகவும் வெளிப்படையாகவே தெரிவிப்பவர், எல்லா மாணவர்களையும் ஏற்றத்தாழ்வு பார்க்காமல் சமமாகவே நடத்துகிறார். திரு. சீனிவாசகம் மாணவர்களின் பெற்றோரை மதித்து அன்புடன் பழகுபவர், நாதாலயாவின் அதிபரும் திரு. சீனிவாசகமும் மாணவர்களை பெற்றோர் எவ்வாறு கவனிப்பார்களோ அதேபோல் கவனித்து நடத்துகிறார்கள் என்றார்.

பெற்றோரின் உரையை தொடர்ந்து காயத்திரி தயாபரராசா “பாடறியேன் படிப்பறியேன்” என்ற சிந்துபைரவி படத்தில் வந்த நாட்டுப்புறப்பாடலை பாடினார். இதைத்தொடர்ந்து மாணவர்களும் ஆசிரியரும் சேர்ந்து இசை நிகழ்ச்சி ஒன்றைநடத்தினர். சிவகௌரி சிவநாதனும், சிவசங்கரி சிவநாதனும் திருமதி விஜயலஷ்மி சீனிவாசகத்துடன் சேர்ந்து பாடினார்கள். வெண்ணிலா விக்னேஸ்வரன் இந்நிகழ்ச்சிக்கு வயலின் இசை வழங்கினார்.

கடந்த வருடம் நாதாலயாவில் கற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்ச்சி அடுத்ததாக நடைபெற்றது. நாதாலயாவின் அதிபரின் நன்றி நவிலலுடன் நாதாலயாவின் 22 ஆவது ஆண்டு நிறைவு விழா இனிது நிறைவு பெற்றது. நிகழ்ச்சிகளை நேரத்திற்கு தொடக்கி, 75 இற்கு மேற்பட்ட மாணவர்களுடன் இந்நிகழ்ச்சிகளை ஒழுங்காக நடத்தி, சரியாக ஒன்பதரை மணிக்கு நிகழ்சிகளை நிறைவு செய்து நாதாலயா அதிபர் தான் இசைத்துறையில் மட்டுமல்ல நிர்வாகத்துறையிலும் தேர்ச்சி பெற்றவர் என்பதையும் நிரூபித்துள்ளார்.

நாதாலயாவின் 22 ஆவது ஆண்டு விழா நிகழ்ச்சிகளை எழிலி ஜெயபாலன் தொகுத்து வழங்கினார். இசைநிகழ்ச்சிக்கு மிருதங்கம், கெஞ்சிரா மற்றும் கடம் வாத்தியக்கருவிகளை மிருதங்க ஷேஸ்திரம் மாணவர்கள் வாசித்தார்கள்.

இசைக் கோவிலின் அதிபர் ஸ்ரீமதி விஜயலஷ்மி சீனிவாசகம். இவர் இலங்கையில் ஒரு இசைக் குடும்பத்தில் பிறந்தவர். தனது வயலின், வாய்ப்பாட்டு இரண்டு இசைத்துறைகளின் ஆரம்பத்தையும் தனது தமையரான ஸ்ரீ A. சிவசாமியிடம் கற்றவர். அதை தொடர்ந்து இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் ஸ்ரீ சித்தூர் சுப்பிரமணியபிள்ளையிடம் இவற்றைப் பயின்றார். பின்னர் தஞ்சாவூர் S. கல்யாணராமனிடமும் இசைபயின்றார்.இவர் இலங்கையில் ஆசிரியராக பணிபுரிந்தார். அக்காலப்பகுதியில் இலங்கை வானொலியிலும், தொலைக்காட்சியிலும் தனது நிகழ்சிகளை செய்து வந்தார். இவரது கர்நாடக இசை மற்றும் வயலின் கச்சேரிகள் அமெரிக்காவின் பல பாகங்களிலும், ஐரோப்பாவின் பல பாகங்களிலும் நடைபெற்றுள்ளன. இவர் தொடர்ந்தும் தனது இசை துறைக்கான வழிநடத்துதல்களை குமாரி ஆ. கன்னியாகுமரி மற்றும் ஸ்ரீ முல்லை வாசல் G. சந்திரமௌலி இருவரிடம் இருந்தும் பெற்றுவருகின்றார். ஸ்ரீமதி விஜயலஷ்மி சீனிவாசகம் ஜப்பானைச் சேர்ந்த தற்பாதுகாப்பு கலைக்குரிய (Martial Arts) சர்வதேச பல்கலைகழகத்தால் சிறப்பு கலாநிதி பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டவர் ஆவர். ஒட்டாவா தமிழ்சங்கமும் இவருக்கு “இசைக்குயில்” என பட்டம் அளித்து கௌரவித்தது. இவரது கர்நாடக இசை மற்றும் வயலின் நுண்கலைகள் கற்பிக்கும் சேவைக்கும் மற்றும் கர்நாடக இசைக்கச்சேரி வயலின் கச்சேரிகள் போன்றவற்றை மக்களுக்கு வழங்கி வருவதற்காகவும் ஒன்ராரியோ மாகாண அரசு இவரை கௌரவித்துள்ளது. ஸ்ரீமதி விஜயலஷ்மி சீனிவாசகம் பல இசை இறுவட்டுக்களை வெளியிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



அருந்ததி ஞா.


Ontario Vegetarian Food Bank

Employment Training & Skills Resource Centre

Certified Food Handlers

Ontario Vegetarian Food Bank works in partnership with the City of Toronto Public Health Fully Accredited Agency to provide Food Handlers Certification Program. Our Certification Training Program is valid throughout Ontario and meets all mandatory Provincial Food Safety Training requirements. This means that our Food Handler Certificate is recognized by all health units throughout Ontario.



Food Handler Training available for:
PSW's, Food service Workers, ECE /ECA Workers, Day Care Providers, Dietary Aides, Cooks, , Home Care Workers, Nannies, Restaurateurs.
*Financial assistance may be available to those who qualify

CALL TO REGISTER:
(416) 744 (HELP) 4357

Winter Food and Fund Drive
“No One Should Go Hungry”
Started from Nov.15, 2010 Mar.15, 2011

HELP US TO HELP THE HELPLESS!
North York: 3005 Islington Ave. (Islington / Steeles)
Scarborough: B5 - 2370 Midland Ave (Midland / Sheppard)




Always made with a freshly cracked Canada Grade A egg.

The one and only Egg McMuffin®. Try it with a premium roast coffee for the perfect start to your day.

NOW SERVING BREAKFAST UNTIL 11:00am
EVERY DAY at the following locations:

Kingston Rd. & Lawrence Ave.
Markham Rd. and Progress Ave.
Markham Rd. and Finch Ave.
Malvern Town Centre
Port Union and Kingston Rd.
Walmart - Milner Ave.
Walmart - Steeles Ave.

i'm lovin' it®

©2010 McDonald's



# புதிய உலகம்



வாட் பிளேசில்
போயஸ் காடனில்
வட தென் துருவங்களில்
பங்களாக்கள்
நுகரும் வல்லமைபோல்
சந்திரனில் காணிநிலம் வாங்கும்
உயர் எண்ணமும்
இப்போதைய
புதிய கதை ஆகிவிட்டது

இன்னும்
சிறிது காலம் தாமதித்தால்
நிலவிலும்
நிலபுலத்தின் விலைகள்
ஏறுமுகம் ஆகிவிடலாம்

நாலாயிரத்து ஐநூறு கோடியில்
இருபத்தேழு மாடியிலும்
ஒரு
குடும்பத்தின்
குடியிருப்பு

கூடாரங்களுக்கு
உள்ளேயும்
கொட்டில்களுக்கு
உள்ளும்
நடைபெறுவதும்
குடியிருப்பு

தாஜ்மஹால் அதிசயம்தான்
தஞ்சைப் பெருங்கோயில்
பெருமைதான்
மதுரை மீனாட்சியின்
நான்கு திசைக் கோபுரங்களும்
அழகியலின் வெளிப்புத்தான்

ஒரு கையில்
ஒளிச்சுடர் ஏந்தி உயர்ந்து நிற்கும்
சுதந்திரச் சின்னம்
கொலம்பஸ் கண்டத்தின்
ஜனநாயக விழுமியம்தான்,

ஆனால்
பல கோடி மக்களுக்கு
இப்பூமிப் பந்தில்
இன்னும்
கழிப்பறை வசதிகூட
இல்லையே
எனும்போது,

இந்தச் சிறுமைக்குள்
அந்தப் பெருமைகள்
எல்லாம்
அடக்கம் பெறுவதன்
குறியீடு:

'ஸ்லம் டோக் மில்லியனர்'.



முத்துராஜா




